விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 28 வெள்ளிக்கிழமை (12.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 237

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P No :- 021 222 5392
(C-5424)

# தமிழர்களின் விரக்தி போருக்கு வித்திட்டது

## உணர்ந்து கொள்கிறேன் - சந்திரிகா

(யாழ்ப்பாணம்)

நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சி செய்த எந்த அரசும் தமிழ் மக்களுக்காக ஆட்சி செய்யவில்லை இதனால் தான் தமிழ்மக்கள் கோபப்பட்டார்கள்; விரக்தியடைந்தார்கள் இதன் வெளிப்பாடாகத்தான் போரும் இடம்பெற்றது. இதை நான் உணர்ந்து கொள்கிறேன். எனினும் தற்போதுள்ள நிலைமையில் தமிழ் மக்கள் கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து சிங்கள மக்களை நேசிக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க சபையின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



## காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

காணாமல்போனோருக்கான அலுவலகம் தொடர்பிலான சட்ட மூலம், பாராளுமன்றத்தில் நேற்று பிற்பகல் திருத்தங்களுடன் நிறைவேறியது.

இதனை நிறைவேற்ற எதிர்ப்பு தெரிவித்து, கூட்டு எதிரணியினர் கறுப்புப் பட்டியணித்து கூச்சலில் ஈடுபட்டு, பாராளுமன்றில் குழப்ப நிலையை ஏற்படுத்தினர்.

காணாமல் போனோர் தொடர்பான பணியகம் அமைப்பது குறித்த சட்டமூலத்திற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கறுப்பு 04ஆம் பக்கம் பார்க்க....

## சிறையில் மர்ம ஊசி ஏற்றப்பட்டதனால் மனநிலை பாதிக்கப்பட்ட அரசியல் கைதி

## நிரந்தர அரசியல் தீர்வுக்கு முக்கியத்துவம் வழங்குங்கள்

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா கோரிக்கை

சபையின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



கறுப்புப் பட்டியணித்து கூச்சலில் கள் கறுப்பு 04ஆம் பக்கம் பார்க்க....

# சிறையில் மர்ம ஊசி ஏற்றப்பட்டதனால் மனநிலை பாதிக்கப்பட்ட அரசியல் கைதி

## யாழ்.வைத்தியசாலையில் அனுமதி!

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, சந்தேகத்திற்குரிய ஊசி ஏற்றப்பட்டதால் மனநிலை பாதிக்கப்பட்ட தாகக் கூறப்படும் இராசையா ஆனந்தராசா என்ற தமிழ் அரசியல் கைதி மன வைத்திய பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம போதனா வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். குறித்த கைதியை உடனடியாக வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு தாம் விடுத்த வேண்டுகோளை அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஏற்றுக் கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். இராசையா ஆனந்தராசா 23ஆம் பக்கம் பார்க்க....

# நிரந்தர அரசியல் தீர்வுக்கு முக்கியத்துவம் வழுங்குங்கள்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கும் அரசாங்கம், அதே முக்கியத்துவத்தை நிரந்த அரசியல்தீர்வுக்கும் வழங்க வேண்டுமென தெரிவித்துள்ள சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் 24ஆம் பக்கம் பார்க்க....






# சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்பை சந்திரிகா உறுதிப்படுத்த வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவும் சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்பை உறுதி செய்யவும் சர்வதேச வழக்கு நடத்துநர்களை உள்ளீர்க்கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க உதவ வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியுள்ளார். மேலும் நீதியான, போர்க்குற்ற விசார 24ஆம் பக்கம் பார்க்க....



# சம்பந்தன் இன்று விசேட அறிவிப்பு

(கொழும்பு)

மூன்றாவது முறையாக விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான 23ஆம் பக்கம் பார்க்க....

# லசந்த கொலை வழக்கு

## 63 புலனாய்வு அதிகாரிகளின் வங்கிக் கணக்குகள் பரிசோதனை

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள படைத்தரப்பின் புலனாய்வு அதிகாரி மேஜர் பிரேமானந்த 23ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகா பயணித்த விமானத்தில் கோளாறு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யாழ்ப்பாணத்திற்கு வருவதற்காக நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட விமானத்தில் கோளாறு ஏற்பட்டதனைத் 23ஆம் பக்கம் பார்க்க....

# இப்போது பகலில் கூட பெண்களுக்கு அச்ச நிலை

## பொலிசார் முன் முதலமைச்சர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

போர்க் காலத்தில் பெண்கள் இரவு நேரங்களில் கூட சுதந்திரமாக நடமாடிய நிலையில் இப்பொழுது பகலில்கூட சுதந்திரமாக அச்சமின்றி நடமாட முடியாத சூழல உருவாகியுள்ளது என வட மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

மாகாண மட்டத்திலான பொலிஸ - பொது மக்கள் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் முதலமைச்சர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போதே அங்கு உரையாற்றிய வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், பொலிஸ் சேவை என்பது முன் 23ஆம் பக்கம் பார்க்க....

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப் பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

02.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது

03.பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

04.பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 12.08.2016 ஆம் திகதி தொடக்கம் 31.08.2016ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ் வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 12.08.2016 தொடக்கம் 31.08.2016 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா. 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

06.பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை 01.09.2016-ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

07.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 24.08.2016ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

08.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்

09.கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, Tar நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | பூதவராயர் வீதி புனரமைப்பு | 5.26 | 03 மாதம் | C8 | 53,000.00 |
| 2 | மயிலங்காடு கொலணி வீதி மீள்புனரமைப்பு | 1.41 | 03 மாதம் | C9 | 14,000.00 |
| 3 | வட்டுவினி 1ம் குறுக்கு வீதி மீள்புனரமைப்பு | 0.69 | 02 மாதம் | C9 | 7,000.00 |
| 4 | சபாபதிப்பிள்ளை குறுக்கு வீதி மீள்புனரமைப்பு | 0.61 | 02 மாதம் | C9 | 7,000.00 |
| 5 | கற்பொக்கனை பிள்ளையார் வீதி மீள்புனரமைப்பு | 0.74 | 02 மாதம் | C9 | 8,000.00 |
| 6 | களவியாவத்தை வீதி மீள்புனரமைப்பு | 0.95 | 02 மாதம் | C9 | 10,000.00 |
| 7 | வண்ணாகடவை ஒழுங்கை மீள்புனரமைப்பு | 0.77 | 02 மாதம் | C9 | 8,000.00 |

தி.சுதர்சன்
தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு (சி-5429)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.


## தமிழர்களின் விரக்தி...

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற குடிநீர் தாங்கி கையளிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். பெரும்பான்மை இன மக்கள் அனுபவித்து வரும் அனைத்து உரிமைகளும் அனைத்து சிறுபான்மை மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

புதிய அரசாங்கம் நல்லிணக்கத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இந்த அரசில் தான் மனிதவுரிமை மதிக்கப் பட வேண்டும். அரசியல் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். இதுவே நிரந் தர சமாதானத்தை ஏற்படுத்தும். நாட்டில் யுத்த சூழ்நிலைய அடுத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல சவால்களை எதிர்நோக்கியுள்ளோம்.

போர்க்காலத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு நீதியை வழங்கல். நிலைமாறுகால நீதியை நோக்கி பயணித்தல் இவைதான் அந்த சவால்களாக உள்ளன. இவற்றுக்காக புதிய செயலணியை உருவாக்கியுள்ளோம். இது தவிர காணாமல் போனோர் அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கு இன்றைய தினம் (நேற்று) அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நாட்டில் நீண்ட காலமாக காணப்படும் பிரச்சினையை இந்த காணாமல் போனோர் அலுவலகம் தீர்த்து வைக்க முடியும். காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பதை இந்த அலுவலகம் ஊடாக கண்டறிய முடியும் என்பதை நான் நம்புகின்றேன்.

எனினும் சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சி செய்த எந்த அரசும் தமிழ் மக்களுக்காக ஆட்சி செய்யவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இதனால்தான் தமிழ் மக்கள் கோபப்பட்டார்கள். விரக்தி அடைந்தார்கள். இதனால்தான் போரும் இடம்பெற்றது. சில சம்பவங்கள் மறக்க முடியாது தான். எனினும் சிங்கள தமிழ் இனங்கள் என்பவற்றுக்கு அப்பால் செல்ல வேண்டும். நாட்டின் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

தமிழ் மக்கள் கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து சிங்கள மக்களை நேசிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் சிறிய எண்ணிக்கையான சிங்களவர்கள் வெட்க மடைந்துள்ளார்கள். எல்லா சிங்களவர்களும் தமிழர்கள் மீது கோபத்தில் இல்லை.

இதனை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார் சந்திரிகா. (செ-4)


## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்த பழக ஆர்வம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர்கள் தேவை.

**சென்னை பெசன் வேல்ட்**
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (5590)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் (கோப்பாய் பெற்றோல் செற்றுக்கு முன்பாக) 3 1/2 பரப்பு காணிக்குள் அழகிய வீட்டுடன் பயன்தரு மரங்களும் உண்டு.

**உடன் விற்பனைக்கு உண்டு.**

**தொடர்புகளுக்கு:**
**0771041151, 0766571899** (5583)


# மரண அறிவித்தல்

# தம்பித்துரை சிவகுமார்

## பிறப்பு:25.05.1969 (ரூபன்) இறப்பு:09.08.2016



யாழ்.குப்பிளானைப் பிறப்பிடமாகவும் லண்டன் Southall ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சிவகுமார் அவர்கள் கடந்த 09.08.2016 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை செல்லம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடேசபிள்ளை மற்றும் சந்திரலேகா (குஞ்சு) தம்பதிகளின் அன்பு மருமகனும், குலச்சந்திரா (கிருபா) அவர்களின் அன்புக் கணவரும், கிருசன், சனஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியவதனி (குப்பிளான்), சிவசோதி (சோதி-லண்டன்), சிவானந்தன் (சிறி-லண்டன்), தர்மவதனி (சாந்தி-லண்டன்), ரூபவதனி (ரூபி-சுவிஸ்), சிவனேசன் (சிவன்-லண்டன்), வரதசோதி (குகன்-லண்டன்), கேதீஸ்வரன் (வரன்-லண்டன்), ஞானவதனி (ஞானா-லண்டன்) ஆகியோரின் அன்புச சகோதரரும், நவரத்தினராசா (கப்பூர்-குப்பிளான்), முகுந்தினி (லண்டன்), அனுஷா (லண்டன்), ஜெகதீஸ்வரன் (ஜெகன்-லண்டன்), சிவநேசன் (சுவிஸ்), பிரபாலனி (பிரபா-லண்டன்), பிரபாலினி(லண்டன்), கல்பனா (லண்டன்), பானுதேவன் (பானு-லண்டன்), குலராதா (குப்பிளான்), பிரதீபா (குப்பிளான்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரகாஷ், நிருஷா, யதுர்சன், சனந்தன், லவந்தன், தினேஷன், நிவேதா, டயானி, பிரண்டன், பகிரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதாகரன் அவர்களின் அன்புச் சகலனும், கணேஷ், விதுசியன், தருணி, ஹரிராம், ஹாகிரி ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், தனுசன், கவினா, சரன், ஹரனி, துசாந் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பரிசயப்புலம்,**
**குப்பிளான் தெற்கு,**
**ஏழாலை.**

**தகவல்:-**
**நவரத்தினராசா-(கப்பூர்)**
**+94777143077**

(5585)

# சட்ட மூலத்துக்கு ஆதரவளிப்போர் தேசத்துரோகிகள்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலத்துக்கு ஆதரவளிப்போர் தேசத் துரோகிகளாகவே கருதப்படுவர் என மெதகொடஅபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

அமைக்கப்படவுள்ள குறித்த அலுவலகமானது வேறு ஒரு தரப்பினரால் நிர்வகிக்கப்படவுள்ளதோடு, இதன் மூலம் நடைபெறும் செயற்பாடுகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு கூட செல்ல முடியாது எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகச நந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே எமது நாட்டு சோற்றினை உண்டு, பால் குடித்தவர்கள்.எவராவது குறித்த சட்டமூலத்திற்கு கையை உயர்த்துவோர்களானால் அவர்கள் தேசத்துரோகிகள் என்றும் தேரர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று குறித்த சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# 81 புத்த பிக்குகள் விளக்கமறியலில்

(கொழும்பு)

கடந்த 15 மாதங்களில் 81 புத்த பிக்குகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் புனர்வாழ்வு மற்றும் புத்த சாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றை அவமரியாதை செய்த குற்றச்சாட்டுக்கு இலக்கான 8 புத்த பிக்குகளும் யானைக் குட்டியொன்றை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டில் புத்த பிக்கு ஒருவரும் இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டனர்.

துஷபிரயோகங்கள், புதையல் தோண்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் புத்த பிக்குகள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த எழுப்பிய வாய்மொழி மூல கேள்விக்கு பதிலளித்த போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஆயுத களஞ்சியசாலை அமைக்க வேண்டாம்

## குசலரத்ன தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

இராணுவத்தின் ஆயுத களஞ்சியசாலையை அநுராதபுர ஒயாமடுவ பிரதேசத்தில் அமைப்பதற்கு அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானத்தை வன்மையாகக் கண்டிப்பதாக அநுராதபுர மேற்கு தொகுதிக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிக்குகள் அமைப்பின் தலைவரும், மஹ விலச்சிய ஸ்ரீ சத்தாரங்சி பிரிவெனாவின் நிறைவேற்றுக் குழு அதிகாரியுமான லோலுகொட குசலரத்ன தேரர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் வெடிப்புச் சத்தங்களுக்கு பயந்து வாழ்ந்த மஹவிலச்சிய பிரதேச மக்களுக்கு யுத்தம் முடிந்த பின்னரும் மரண பயத்துடன் வாழ்வதற்கு இந்த தீர்மானத்தினால் வழி ஏற்பட்டுள்ளதாக தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாலாவ ஆயுத களஞ்சியசாலை வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் புதிய ஆயுத களஞ்சியசாலையை இப்பிரதேசத்தில் அமைப்பதற்கு அண்மையில் அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

இந்த தீர்மானத்துக்கே தேரர் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். (இ-7-10)

# பரீட்சையில் வெளிமாவட்ட மாணவர்கள்; இரு பாடசாலை அதிபர்கள் பணி நீக்கம்

(கொழும்பு)

நுவரெலியா சென். சேவியர்ஸ் கல்லூரியின் அதிபர் மற்றும் நாத்தாண்டிய அல் ஹிஜிரா கல்லூரியின் அதிபர் ஆகியோர் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையில்,முறைகேடுகளில் ஈடுபட்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

வெளிமாவட்ட மாணவர்களை, தமது பாடசாலைகளுக்கு ஊடாக, பரீட்சைக்கு தோற்ற அனுமதி வழங்கிய குற்றச்சாட்டு இவர்கள் மீது சாட்டப்பட்டுள்ளது.

மாகாண கல்விப் பணிப்பாளர்களால் குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள்திணைக்கள ஆணையாளர் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாணவர்கள் தமது சொந்த மாவட்டங்களை தவிர்த்து வேறு மாவட்டங்களின் இசட் புள்ளிகளை பயன்படுத்தி பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கு அனுமதியளிக்கப் போவதில்லை என நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இணையங்கள் ஊடாக பொருட்களை கொள்வனவு செய்வோருக்கு ஆபத்து

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்யும் நபர்களது பணம், இணையங்கள் ஊடாக கொள்ளையிட்டு வங்கிகளில் வைப்பிலிடும் முறைகேடு தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை கணனி அவசரப்பிரிவுக்கு இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையங்கள் ஊடாக பொருட்களை பதிவு செய்யும் நபர்கள் இந்த மோசடிக்குள் சிக்கியுள்ளதாக கணனி அவசரப்பிரிவின் ஊடகப் பேச்சாளரும், பொறியியலாளருமான ரொஷான் சந்திர குப்தா தெரிவித்துள்ளார்.

பொருட்களை தருவிக்கும் நபர்களின் இணையங்கள் ஊடாக பலவந்தமாக உள்நுழையும் கொள்ளையர்கள், பொருட்களை பதிவு செய்யும் நபர்களின் வங்கி கணக்குகளில் மாற்றங்களை செய்துள்ளதாக அறிவித்து, அதனூடாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் பணங்களை வைப்பிலிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறான பணம் கொள்ளை தொடர்பில் இந்த வருடத்தில் இதுவரை 10 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

# கொழும்பு துறைமுக நகரை நிர்வகிக்க தனித்திணைக்களம்

கொழும்பு துறைமுக நகரை நிர்வகிக்க தனியான திணைக்களம் ஒன்று உருவாக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்திற்கு, கடந்த அரசாங்க காலத்தில் சூழலியல் மற்றும் பொருளாதார அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

இலங்கை அரசின் கொள்கைகளுக்கு முரணாக சீன அரசாங்கத்திற்கு காணிகளை விற்பனை செய்திருந்ததாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இது தொடர்பில், சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், நல்லாட்சியில் அந்த திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 260 ஹெக்டெயர் நிலப்பரப்பும் தனியான ஒரு திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்படும் அதேவேளை அது மாநகர சபைக்கு உட்பட்டு காணப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் பொருளாதார பங்குபற்றல் குறித்து கலந்துரையாடல்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பங்கேற்பு





படங்கள்: பொ.சோபிகா



(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக பொருளாதார பங்குபற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு விசேட நுண்ணியல் நிகழ்ச்சித்திட்ட கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த உத்தேச திட்டமானது ஒரு முன்னோடித்திட்டமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள தீவக பகுதி தவிர்ந்த ஏனைய 7 பிரதேச செயலர் பிரிவிலும் ஒரு தெரிவு செய்யப்பட்ட கிராமத்தில் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் மக்களது பொருளாதார பண்பு தார்மீகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் அவர்களுக்கு உதவுவதற்காகவும் கடன் மற்றும் மானியங்கள் வழங்கப்படவுள்ளது. அது தொடர்பாக அனைத்து மட்டத்தினருடனும் நேற்றைய தினம் கலந்துரையாடல் நடைபெற்றதுடன் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தில் 7 பிரதேச செயலர் பிரிவிலும் ஆயிரத்து 74 பேர் தெரிவு செய்யப்பட்டு 30 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள 150 பெண்களை சந்தித்து அவர்களது வாழ்வாதாரம் தொடர்பாக நேற்றைய தினம் கலந்துரையாடப்பட்டது. (இ-9)

# North Lanka IIT

## அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் பதவி உயர்விற்கும் சம்பள உயர்வுக்குமான UGC அங்கிகாரம் பெற்ற கற்கை நெறிகள்.

**B.Sc. in Computer Science**
Entry Qualification: O/L or A/L
Duration: 2-3 Years
New Batch

**Top Up in B.Sc. in Computer Science**
Entry Qualification: 2 Years Diploma or HND
Duration: 1 Year
New Batch

**P.G.D in Computer Science**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year
New Batch

**Degree in Physical Education & Sports**
Entry Qualification: 2 Years Diploma in University
Duration: 1 Year
2nd Batch

**Master of Business Administration [MBA]**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year
New Batch

**Doctor of Business Administration [DBA]**
Entry Qualification: MBA / M.Sc.
Duration: 2-3 Years
New Batch

**M.Sc. in Computer Science**
Entry Qualification: B.Sc. in Computer Science or P.G.D. in Computer Science
Duration: 1 Year
New Batch

**Top Up in Bachelor of Science in Civil Engineering**
Entry Qualification: HND Civil or 2 years Diploma in Civil Engineering
Duration: 1 Year
New Batch
*75% On Site Practicals

**Bachelor of Education [Hons.] [B.Ed.]**
Entry Qualification: A/L 3 passes or College of Education Diploma or Training College Diploma
Duration: 3-4 Years
New Batch

**Doctor of Education [D.Ed.]**
Entry Qualification: M.Ed
Duration: 2-3 Years

**Master of Education [M.Ed.] 2nd Batch**
*கல்வியமைச்சின் அனுமதி
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி
*வடமாகாணக் கல்வியமைச்சின் அனுமதி

2nd Batch
Entry Qualification: B.Ed. / P.G.D.Ed.
Duration: 1 Year

(சி-5431)

*விண்ணப்படிவத்தை சுயமாகத தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்
*நேர்முகத்தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கற்கைநெறிகள் ஆரம்பமாகிவிட்டது

People's Bank Bulilding, Top Floor, Stanly Road, Jaffna.
Contact: 0767504535, 0214927088


## காணாமல் போனோர்...

பட்டி அணிந்து கலகத்தில் ஈடு பட்டதை அடுத்து சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக வினால் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டமூலம் மீது நேற்று விவாதம் இடம்பெற்று, இன்றைய தினம் வாக்களிப்பு இடம்பெறும் என்ற அறிவிப் பையும் அமைச்சர இதன்போது விடுத்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஒன்றிணைநத எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பி னர் தினேஷ் குணவர்தன, குறித்த சட்டமூலத்திற்கு தனது எதிர்ப்பை வெளியிட்டதுடன் இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) முழுநாள விவாதம் இடம்பெற வேண்டும் என்றும், அவ்வாறு இல்லா விட்டால் விவாதம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கைக்கு எதிராக ஆளுந்தரப்பு தங்களது எதிர்ப்பை வெளியிட்ட வேளையல் சபை நடுவே வந்து தமது எதிர்ப்பை வெளியிட ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் முயற்சித்தனர.

எனினும் சபா மண்டபத்திற்கு நடுவே குழும வேண்டாம் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய மூன்று முறை அறிவுறுத்திய போதிலும், அதனைப் பொருட்படுத்தாமல் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி யினர் வந்தனர். இதனால் சபையில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டதை தொடர்ந்து குறித்த சட்டமூலம மீதான வவாதம் தொடர்பில் கட்சித் தலைவர்கள மத்தியில் பேச்சு நடத்தி முடிவெடுக்கும் வரை சபையை தற்காலிகமாக ஒத்திவைப்பதாக சபா நாயகர் அறிவித்தார். இதன் பின்னர் சில திருத் தங்களுடன் சட்டமூலம் வாக்கெடுப்பு நடத் தபபடாமலேயே நிறைவேற்றப்பட்டது. (செ-11)




# "நான்" உளவியல் சஞ்சிகை

## 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு...

### சிந்தனைப்போட்டி

1. சுமூகமான தொடர்பாடலில் செவிமடுத்தலின் தர்க்கம்.
2. இன்றைய இளைஞர்களின் வாழ்வியல் வழிகாட்டலை விழுமியக் கல்வியை மேம்படுத்த வழிகள் (300 சொற்களுக்கு குறையாது 28.08.2016 முன் எழுதுங்கள்)

* 28.08.2016ல் நடைபெறவுள்ள எழுத்தாளர் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் 22.08.2016க்கு முன் விண்ணப்பியுங்கள்.
* "நான்" சஞ்சிகை உங்கள் இல்லங்களில் வேண்டுமா? ஆண்டு சந்தா ரூ.250.00னை கட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு :- "நான்" உளவியல் சஞ்சிகை
வசந்தகம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

(5586)



## சைவக் கோயில் பூசகர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோருதல்

எமது வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள பெருமளவான கோயில்களுக்கு பயிற்றப்பட்ட ஆகம விதிகள் அறிந்த பூசகர்கள் இல்லாத காரணத்தால் ஒரு பூசகர் நான்கு ஐந்து கோயில் களுக்கு பூசை செய்யும் நிலை நிலவுகின்றது. இதனால் வழிபடுவோர் பூசகர் வரும் நேரம் தெரியாத நிலையில் பொதுமுறையான வழிபாடுகளைச் செய்கின்றனர். இந்நிலையில் ஆகம விதி முறைப்படியான கோயில் வழிபாட்டு முறை தகர்ந்து வருவதுடன் இளைஞர்கள் கோயில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் எமது சமூகத்தில் சமயப்பிறழ்வு ஏற்பட இடமளிக்கப்படுகின்றது.

இதனைப் போக்க கடந்த இரண்டு ஆண்டுகளாக முயற்சி செய்து நன்கொடையாளரிடம் நிதியுதவி பெற்று சைவக் குருமார், ஒன்றியக் குருமார்களிடம் கற்பிக்கும் உதவி கோரிய வேளை அவ் உதவி கிடைக்காததால் கைவிட வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

எனினும் எமது விடா முயற்சியின் பயனாக தற்போது திருகோணமலையிலுள்ள விஷ்ணு கோவில் உரிமையாளரைத் தொடர்புகொண்ட போது பூசகர் பயிற்சிக்குரிய இரு சிவாச்சாரியார்களை இந்தியாவிலிருந்து தங்களது செலவில் ஒரு வருடம் தருவதாகவும் எம்மை மீண்டும் இப் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்குமாறும் கூறியுள்ளார்.

யாம் சைவப் பூசகர் பயிற்சி நெறியை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம். இது ஒரு வதிவிடப் பயிற்சி நெறி. வெளிக்களப் பயிற்சியுடன் கூடியது.

இப் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### தகுதிகள்:

- வன்னி நிலப்பரப்பை வதிவிடமாகக் கொண்டவர்களாகவும் ஆசாரசீலர்களாகவும் சைவ உணவு மட்டும் உண்பவர்களாகவும் குடிவகை, போதை வஸ்து பாவனை உட்பட எந்தவித தீய பழக்கங்களும் இல்லாதவராகவும் பிரபல சைவ சமயக் குடும்ப பின்னணி உடையவராகவும் சமூகத்தில் உயர்ந்த மதிப்புடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- மேலும் ஆகக் குறைந்தது க.பொ.த சாதாரண தரம் வரை கற்றவராகவும் நல்ல முறையில் எழுத வாசிக்கத் தெரிந்தவராகவும் பண்ணிசையில் ஆர்வமுள்ளவர் களாகவும் இருத்தல் வேண்டும்.
- இது ஒரு வதிவிடப் பயிற்சி, தங்குமிடம், உணவு, உட்பட அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் எம்மால் இலவசமாகச் செய்து தரப்படும்.
- தேவையான புத்தகங்கள் கொப்பிகள், எழுதுகருவிகள், உடைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
- பொறுமையும் தியாகமும் ஆன்மிகத்தில் ஈடுபாடும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- தங்களுக்கிடையே ஒப்பந்தம் ஒன்று செய்யப்படும். இடையில் விலக முடியாது.
- பயிற்சி ஒருவருடத்திற்குரியது.
- கோயில் வேலைகளில் இணைக்கப்பட்டு வெளிக்களப் பயிற்சி வழங்கப்படும்.
- இதற்கான போக்குவரத்துப்படியும் பரீட்சை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 05.09.2016 ஆகும்**

தங்களது குடும்ப விபரம், தங்களது சுய விபரம் கொண்ட சுய விபரக் கோவையை நீங்கள் எழுதி அனுப்புவதுடன் கிராமசேவையாளரிடம் நற்சான்றிதழ், ஊர்ப் பிரமுகர் இருவரது நற்சான்றிதழ் இணைத்து அனுப்புதல் வேண்டும். பயிற்சியாளர்கள் இரு சிவாச்சாரியார்கள கொண்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

இவ்வண்ணம்

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம் : 077 060 4950, 021 492 3118

(C-5431)

# தமிழீழத்தால் சர்ச்சையில் சிக்கிய ஆஸி

அவுஸ்திரேலிய அரசாங்கம் 2016 ஆம் ஆண்டுக்கான மக்கள் கணக்கெடுப்புக்காக இலங்கையை தமிழீழம் என்று குறிப்பிட்டுள்ளது.

பல நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியாவில் குடியேறி குடியுரிமை பெற்றுக் கொண்டவர்களின் நாடுகளை கணக்கெடுப்பின் போது அறிந்து கொள்ளுமாறு அவுஸ்திரேலிய வெளிவிவகாரம் மற்றும் வர்த்தக திணைக்களம் ஆலோசனை வழங்கியிருந்தது.

இதனடிப்படையில், அவுஸ்திரேலிய புள்ளிவிபரத் திணைக்கள அலுவலகத்தில் இலங்கையை ஸ்ரீலங்கா என்றும் தமிழீழம் என்றும் 7107 என்ற இலக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையரான ரஞ்சித் சொய்சா என்பவர் அவுஸ்திரேலிய பிரதமர், பிரதிப் பிரதமர், அமைச்சர்கள், சட்டமா அதிபர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையில் தமிழீழம் என்ற நாடு இல்லை எனவும் தனிநாடு கோரி போராட்டம் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் 2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டு விட்டதாகவும் உலகில் எந்த நாடும் தமிழீழத்தை அங்கீகரிக்கவில்லை எனவும் சொய்சா கடிதம் ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். சொய்சாவின் கோரிக்கைக்கு அமைய கன்பராவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம், அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

இதனையடுத்து தமிழீழம் என்ற பெயரை நீக்குவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம், இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் நிமாலி கருணாதிலக்கவுக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை இந்த முறைப்பாட்டை அடுத்து, தமிழீழம் என்னும் வார்த்தையை அவுஸ்திரேலிய புள்ளிவிபரத் திணைக்கள இணையத்தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# இலங்கையில் முதலீடுகளை செய்யுமாறு தென்கொரியாவிடம் மகிந்த கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளை செய்யுமாறு தென்கொரிய அரசாங்கத்திடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.


இலங்கையின் பொருளாதாரம் நலிவடைவதனை தடுக்க முதலீடுகளை செய்யுமாறு தென்கொரிய பிரதமர் வென்க்கயோ அன்னிடம் மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

தென்கொரிய நாடாளுமன்றில் பிரதமர் கயோ அன்னையை மகிந்த சந்தித்த போது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த முழு அளவில் ஒத்துழைப்பு வழங்குமாறு மகிந்த ராஜபக்ஷ, தென் கொரிய பிரதமரிடம் கோரியதாக கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இலங்கை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்க உள்ள முதலீட்டு வலயங்களில் முதலீடு செய்வது குறித்தும் கவனம் செலுத்துமாறு மகிந்த தென் கொரிய பிரதமரிடம் கோரியதாக டலஸ் தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரம் இல்லாத போதிலும் நாட்டின் அபிவிருத்திக்காக சர்வதேசத்திடம் உதவிகளை கோரியதன் மூலம் மகிந்தவின் நாட்டுப்பற்று தெளிவாகியுள்ளது என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (இ-7-10)



நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாணக் கல்வித் திணைக்களமும் சின்மயா மிஷனும் இணைந்து நடத்தும் ஆன்மீக நிகழ்வில் 2 ஆம் நாள் திருவிழாவில் கலந்து கொண்ட கிளி/ கிராஞ்சி அ.த.க. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரி ஆகியோர் நல்லூர் ஆலயச் சூழலில் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## அமரர் விஸ்வலிங்கம் பரமேஸ்வரி



யாழ். வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பரமேஸ்வரி அவர்கள் 10-08-2016 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நடராசா, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் அவர்களின் பாசமிகு பாரியாரும், சந்திரலிங்கம், சோமேஸ்வரி, இலங்கேஸ்வரலிங்கம், சாந்தலிங்கம், கேதாதீஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினசிங்கம், பாலகிருஸ்ணன், ரதி, சறோயினி, செல்வரஞ்சன், சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், றொசான், சுதர்சன், யசிந்தன், டிலக்ஷன், லக்ஷ்மன், திவியா, சகானா, அஜந்தன், ஆர்த்தி, சந்தோஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிலன், அனுஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 14-08-2016 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 09.00 மணிமுதல் மு.ப.11.00 மணிவரை நடைபெற்று பின்னர் கிளிநொச்சி உருத்திரபுரம் இந்து பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உருத்திரபுரம்
சிவநகர்

(சி-5425)

தகவல்:
குடும்பத்தினர்

# இராசி பலன்

12.08.2016
(ஆடி 28, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
நவமி பிற்பகல் 1.47 மணிவரை
அனுசம் முன்னிரவு 7.57 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04மணிவரை
வரலக்ஷ்மி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி, பரணி | | சூரி |
| | | | ராகு சுக் புத |
| | சனி செவ் சந் | | குரு |

**மீனம்:** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேகநலன் சீராகும், தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள்.

**மேடம்:** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புக்கூறுவதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரிந்தவர்கள இணையும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**கும்பம்:** என்றோ நடக்கவிருந்த காரியமொன்று இன்று நடைபெறலாம், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்,

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், புதிய பாதை புலப்படும் நாள், தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள்.

**கன்னி:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியமொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாடு முன்னேற்றம் தரும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும்.

# அமைதியாகவுள்ள யாழ்ப்பாணத்தை சீரழிப்பதற்கு அனுமதிக்க முடியாது

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அமைதியாக உள்ள யாழ்ப்பாணத்தை சீரழிப்பதற்கு அனுமதிக்க முடியாது என 141 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்ட வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவை நிராகரித்த நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.**

கேரளாவில் இருந்து கடத்திவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 141 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் தொடர்பான விசாரணை யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.


அப்போது, அந்தப் பிணை மனு விண்ணப்பத்திற்குப் பிணை வழங்கக் கூடாது என அரச சட்டத்தரணி ஸக்கி இஸ்மாயில் ஆட்சேபனை தெரிவித்து வாதாடினார்.

இதனையடுத்து அந்தப் பிணை மனுவை நிராகரித்த நீதிபதி இளஞ்செழியன் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் தற்சமயம் அமைதியாக உள்ளது. குற்றச் செயல்கள் குறைவடைந்து காணப்படுகின்றன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதேவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்காக மாணவர்கள் தம்மைத் தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். அத்துடன் இலட்சக்கணக்கான மக்கள் நல்லூர் திருவிழாவுக்காக படையெடுத்து வந்த வண்ணம் உள்ளனர். நாட்டின் வெளிப் பிரதேசங்களில் இருந்து வருபவர்களும், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுமாக யாழ்ப்பாணம் விருந்தினர்களால் நிரம்பி வழிகின்றது.

இந்த வழக்கில் பெருந்தொகையான 141 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 80 இலட்சம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது. கைது செய்யப்படாதிருந்தால் அந்த சந்தேக நபர் இலட்சாதிபதியாகியிருக்கக் கூடும். கைது செய்யப்பட்டமையால் அவர் இப்போது சிறைக் கைதியாகியுள்ளார்.



இந்தச் சூழ்நிலையில் போதைப் பொருள் குற்றசாட்டுக்கு உள்ளான நபர்களை பிணையில் விடுவது ஆபத்தான நிலைமையையே ஏற்படுத்தும். பொது நலனும் சமூக நலனும் பாதிக்கப்படும். ஆகவே இந்த நீதிமன்றம் இந்தப் பிணை மனுவை நிராகரிக்கின்றது என்றார் நீதிபதி இளஞ்செழியன். (இ-4)

# நூல் வெளியீட்டு விழா

"சர்வதே மனித உரிமைச்சாசனம் 1948" எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்.பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நீர்வள சபை அமைச்சின் பணிப்பாளர், எழுத்தாளர் எஸ்.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராஜா, இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, முன்னாள் வடகிழக்கு முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள், யாழ்.சமூக செயற்பாட்டு நிலையத் தலைவர் என்.சுகிர்தராஜன், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், கவிஞர் புரட்சி, பல்கலைக்கழக மாணவி வி.பிரியதர்சினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.கேசவரூபன், மனித உரிமைகள் பாதுகாவலர் திருமதி.து.வக்சலா ஆகியோரும் கலந்து கொண்டு நூல் பற்றிய உரைகளையும் வழங்கவுள்ளனர். (இ-7)

# நேர்முகப்பரீட்சைக்கு 75 பேர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சையில் வடமாகாணத்திலிருந்து 75 பேர் தெரிவாகியுள்ளனர்.

மேலும் 60 பேர் கொழும்பு தபால் திணைக்களத்தினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3-134)




# தென்மராட்சி கல்வி வலயத்தில் நிலவும் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி கல்வி வலயத்தில் பின்வரும் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுவோரிடமிருந்து ஏற்கனவே விண்ணங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக குறித்த பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கு ஏனைய வலயங்களில் கடமைபுரியும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியுமெனக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யா/ எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை வகை II, யா/கைதடி குருசாமி வித்தியாலயம் வகைII, யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம் வகை III, யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை வகை III, யா/சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம் வகை III, யா/கரம்பை அ.மி.த.க.பாடசாலை வகை III, யா/இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை வகை III, யா/கைதடி கலைவாணி வித்தியாலயம் வகை III, யா/குடமியன் அ.த.க.பாடசாலை வகை III

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

1. வகை II பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவை தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2. வகை II பாடசாலைகளுக்கு குறித்த தரத்தைச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்த மற்றும் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட தரம் III ஐச் சேர்ந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களும் கருத்திற்கொள்ளப்படும்.

வகைIIIபாடசாலைகளுக்கு தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

**நிபந்தனைகள்**

1.அதிபர் நியமனத்தின் போது தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நிரந்தரமாகச் சேவையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் 3 வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

தங்கள் அதிபர் தரத்திற்குப் பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தாங்கள் விரும்பிய ஒழுங்குமுறைக்கு ஏற்ப விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி (வியாழக்கிழமை) 18.08.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# யாழிலுள்ள கிராமமட்ட சங்கங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன


யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம மட்ட சங்கங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஆனைப்பந்தியில் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிமனையில் இடம்பெற்றது.


வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் 2016 ஆம் ஆண்டுக்கான கிராம மாகாண அபிவிருத்தி நன்கொடையின் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் சிறப்பாக இயங்கிவரும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச்சங்கங்களுக்கான தளபாட தொகுதிகள் மற்றும் சமையல் பாத்திரத் தொகுதிகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 21 மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு தலா 32 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியுடைய தளபாடத்தொகுதியும் 11 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா 51 ஆயிரத்து 122 ரூபாய் பெறுமதியுடைய சமையல் பாத்திரங்களும், கிராம அபிவிருத்தி சங்கங்களில் பயிற்சி பெற்ற 13 பெண்களுக்கு தலா 23 ஆயிரத்து 374 ரூபாய் பெறுமதியுடைய தையல் இயந்திரங்களும் 33 ஆயிரத்து 670 ரூபாய் பெறுமதியுடைய தையல இயந்திரம் தலா 5 பேருக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் மாகாணசபை உறுபினர்களான க.சர்வேஸ்வரன், விந்தன் கனகரட்ணம், க.தர்மலிங்கம், வே.சிவயோகம், க.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், ச.சுகிர்தன் மற்றும் அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன், கிராம அபிவருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் சி.பெலிசியன், முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபர் நீக்கிலாப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-9)








(கேலிச்சித்திரம்)

# நிலக்கரிக் கொள்வனவில் இலாபம்தான் நட்டம் இல்லை என அமைச்சர் அறிவிப்பு

கடந்த சில நாட்களில் ஊடகங்களில் அதிகமாக பேசப்பட்ட நிலக்கரிக்கொள்வனவு விடயத்தில் அரசாங்கத்திற்கு லாபமே கிடைத்துள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கான நிலக்கரி கொள்வனவில் மோசடி இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன் போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நட்டம் ஏற்பட்டதாக பல்வேறு செய்திகள் கூறப்பட்ட போதிலும், இலங்கை மின்சாரசபைக்கு இலாபமே கிட்டியுள்ளது.

கடந்த பல நாட்களாக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்ட நிலக்கரி மோசடி தொடர்பில், தனது அமைச்சின் பிரதி அமைச்சருடன் இணைந்து, ஆராய்ந்து கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி விசேட உரையாற்றினேன்.

அந்த உரையின் பின்னர் நிலக்கரிக் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்டிருந்த தவறான கண்ணோட்டங்கள் இல்லாமல் போயுள்ளன.

இந்த நிலக்கரி மோசடி தொடர்பில் மேலும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சுயாதீன குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

அதன் அறிக்கை ஜூலை மாதம் 29 ஆம் திகதி தன்னிடம் வழங்குவதற்கு குழு தீர்மானித்திருந்த போதும் அது முடியாமல் போயிருந்தது.

எனவே, மூன்று முக்கிய உறுப்பினர்களை கொண்ட குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது இந்த மாதம் முதலாம் திகதியே தன்வசம் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# சிறுமிகள் இருவர் மீது சித்திரவதை; சிறிய தந்தையின் மறியல் நீடிப்பு!

சிறுமிகள் இருவர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தேக நபரான அச்சிறுமிகளின் சிறிய தந்தையை ஓகஸ்ட் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.எம். றிஸ்வி உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக நீடிக்கப்பட்ட விளக்கமறியல் உத்தரவில் இருந்து வரும் சந்தேக நபர், நேற்று முன்தினம் புதன்கிழமை மீண்டும் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது மேலும் 14 நாட்கள் விளக்கமறியல் உத்தரவை நீதிபதி எம். ஐ.எம். றிஸ்வி பிறப்பித்தார்.

சிறுமிகளின் சிறிய அன்னை (வயது 48) ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவருக்கு 4 மாத கைக்குழந்தை இருப்பதன் காரணமாக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது கணவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

தமக்கு தமது சிறிய தந்தையும் சித்திர வதை செய்ததாக சிறுமிகள் அளித்த வாக்குமூலத்தின்படி ஏறாவூர் பொலிஸார் மேற்படி சந்தேக நபரை 04. 06.2016 அன்று கைது செய்திருந்தனர்.

சகோதரிகளான சிறுமிகள் இருவர் கடும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட நிலையில் கடந்த 01.06.2016 அன்று ஏறாவூர் முகாந்திரம் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சையுடன் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்



வெள்ளவத்தையில் பொன்நாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்குக் கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து புதன்கிழமை வரை (13,14,15,16,17) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு.
யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.
❖ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.
பூசை நேரம்: முற்பகல் 10.30-12.30 மணிவரை
மாலை 5.30-6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127,077 801 2226.
(5569)

## Sats-Tech Engineers
மற்றும்
**Tv Lanka Digital Cable Less Televion**



நிறுவனத்தினர் இணைந்து வழங்கும்
நல்லூர் கந்தனின்
மஹோற்சவ கால விசேட சலுகை விற்பனை
தொலைக்காட்சி ரசிகர்களே!!!
ரூபாய் 4,999/-* செலுத்தி இணைப்பை பெற்றுக்கொள்ளுங்கள்.
2 வருடங்கள் எந்தவிதமான கட்டணங்களும் செலுத்த வேதவையில்லை.

**Rs. 4,999/-***

**2 year total free subscription**

சன் டிவி/ கே டிவி உட்பட 25 தமிழ் சானல்கள் மற்றும் விளையாட்டு/ சிறுவர் நிகழ்ச்சி / ஆங்கிலச்சானல்கள் / விஞ்ஞான சானல்கள் மொத்தம் 60 டிஜிட்டல் டிவி சானல்களை கண்டு களிக்க கூடிய அதி உயர் தொழில்நுட்ப முறையிலான கேபிள் இல்லா தொலைக்காட்சி சேவை மூலம் கண்டு களிக்க ஓர் அரிய வாய்ப்பு!



தொடர்புகளுக்கு :-
SATS-TECH ENGINEERS
NO 298 K.K.S ROAD JAFFNA
PHONE: 0212228812
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-24


### (11.08.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

### பகுதி II

01. 1)பிட்டையும் வடையையும் பிட்டுக்காரியிடம் வாங்கினான் பெரிய பையன்
2)அதைக் கொல்லைப்புறத்தில் வைத்து உண்பதற்கு ஆசைப்பட்டு ஓடினான்
3)வில் அம்பின் வேகத்தில் ஓடி நாயை மிதித்து பானையை உடைத்து ஓடினான்
4)அப்படி ஓடும் போது பசுக்கன்று கட்டியிருந்த கயிறில் தடக்கி வீழ்ந்து பல்லை இழந்தான்
02. 1) 1 2) 2
03. வில்லம்புபோல
04. 1) சிறிய இருப்பிடமாக இருப்பினும் அது எமக்கு சொந்தமாக இருக்கவேண்டும்
2)நாம் செய்ய நினைத்த செயலொன்று வேறு விதமாக நடைபெறுதல்
05. லூயி பாஸ்ரர் என்பவர் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆவார்.
06. எனக்கு பாலும் பழமும் தேவை
07. கிளியை பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தனர்
08. 1) BIRD 2) THIS IS A FISH
09. Which is your birth place?
10. உங்களுடைய ஊர் மாத்தறையா?
11. வேகயென் என்ன

12) 3 13) 2 14) 1 15) 2 16) 2 17) 1 18) 2 19) 3 20)3
21) 2 22) 1 23) 3 24) 2 25) 1 26) 3 27) 30336
28)1025 km 29) 1. ரூபா 45.00 ரூபா. 63.00
2. ரூபா 16.00 ரூபா 40.00
3.ரூபா 30.00 ரூபா 42.00

30)




31) 630 ml 32) 1. 16:20
2. 6 மணித்தியாலம் 20 நிமிடம்
33) 1. 3/6 2.3/8
34) 1. 4/8 2. 2/6 35) 102 பேருக்கு
36).4m 50cm 37)சென்றார்கள்
38) போய்விட்டது
39) பொருத்தமான கடித அமைப்புக்கு புள்ளி வழங்குக.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/4725 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 34செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/384 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc, NCE/அரச தொழில்<br>தொ.இ: B/4740 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 74செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/402 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ அரசதொழில்<br>தொ.இ: B/4780 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 27செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/471 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 27செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4792 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 77செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/500 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)

# சிகிச்சை பெறச் சென்ற மாணவன் வைத்தியசாலையில் அலைக்கழிப்பு

எலும்பு முறிவு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்ற மாணவன் ஒருவன் சிகிச்சை பெற முடியாதவாறு அலைக்கழிக்கப்பட்டுள்ளான்.

மேற்படிச் சம்பவம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த ஜெயக்குமார் அன்புக்குமரன் (வயது 10) என்ற மாணவனே இதில் பாதிக்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி பயிலும் பிரஸ்தாப மாணவன் பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்ட மேலதிக வகுப்பு ஒன்றில் பங்கு பற்றியிருந்த வேளை பிற்பகல் 3.15 மணியளவில் நிலத்தில் தவறி வீழ்ந்துள்ளார்.

இதன்போது மாணவனின் கை பலமாக அடியுண்டதில் அவருக்கு கைஎலும்பு முறிவுக்குள்ளாகி கை வீக்கமடைந்துள்ளது. உடனடியாக சம்பவம் தொடர்பில் மாணவனின் தந்தைக்குஅறிவிக்கப்பட்டு பாடசாலை வந்த அவர் மகனை அழைத்துக்கொண்டு சிகிச்சை பெறுவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பி.ப. 3.45 மணியளவில் சென்றுள்ளார்.

அங்கு வெளிநோயாளர் பிரிவில் உள்ள வைத்தியரிடம் மாணவனைக்காண்பித்தபோது கையை எக்ஸ்ரே எடுக்க வேண்டும். எனவே வைத்திய சாலையில் உள்ள எக்ஸ்ரே பிரிவுக்கு சென்று ரிப்போட் எடுத்து வாருங்கள் என எக்ஸ்ரே அனுமதிச்சீட்டினைவழங்கியுள்ளார்.

தொடர்ந்து எக்ஸ்ரே பிரிவுக்கு தந்தையும் மகனும் சென்று அங்கு அதற்குப் பொறுப்பாகவிருந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பெண் பணியாளரிடம் எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென கூறினர்.

அதற்கு அந்தப் பணியாளர் தனது கடமை நேரம் முடிந்துவிட்டது. இனி இங்கு என்னால் எக்ஸ்ரே எடுத்து ரிப்போட் தரமுடியாது. உங்களுக்கு அவரசமாயின் வெளியில் சென்று எக்ஸ்ரே எடுங்கள் என பொறுப்பற்றுப் பதில் கூறியுள்ளார்.

இதன்போது அந்தத்தந்தை எனது மகன் கைவலியோடு உள்ளார். இம்முறை நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு அவர் தோற்றவுள்ளார்.இன்னும் சில நாட்களே பரீட்சைக்கு உள்ளதால் அவரது கை விரைவாகக் குணமடைய வேண்டும். எனவே எங்களை அலைக்கழிக்காது எக்ஸ்ரே எடுத்து தாருங்கள் என மன்றாடியுள்ளார்.

எனினும் அதற்கும் செவிசாய்க்காத அந்தப் பணியாளர் எக்ஸ்ரே எடுத்துத் தர முடியாது என மறுத்ததுடன் நோயாளர் விடுதியில் மகனை அனுமதியுங்கள். நாளை எக்ஸ்ரே எடுக்கலாம் எனக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளார்.மீண்டும் வைத்தியரிடம் வந்த தந்தையும் மகனும் எக்ஸ்ரேஎடுக்க ஆவன செய்து தருமாறு நிலைமையை கூறி மன்றாடியுள்ளனர்.

எனினும் இந்த விடயத்தில் தன்னால் யாரையும் வற்புறுத்த முடியாது எனக்கூறிய வைத்தியரும் கையை விரித்துள்ளார். இதனால் மனமுடைந்த நிலையில் தந்தையும் கைவலியுடன் மகனும் செய்வதறியாது வைத்தியசாலையில் அலைக்கழிந்து கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது அங்கு எதேச்சையாக வந்த நோயாளர் நலன்புரிச்சங்கச் செயலாளரிடம் தந்தை இவ்விடயத் தைக் கூறி உதவிபுரியுமாறு கேட்டுள்ளார்.

தொடர்ந்து மேற்படி சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைக்கு பொறுப்பான உயரதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு உடனடியாக முறைப்பாட்டுத் தகவல் வழங்கப்பட்டது.

சில மணிநேரத்தில் வைத்தியர்களும் தாதியர்களும் பிரஸ்தாப தந்தையும் மகனும் எங்கே என வைத்தியசாலை எங்கும் தேடத்தொடங்கினர்.

வைத்தியசாலைக் கதிரையில் அமர்ந்திருந்த தந்தையிடமும் மகனிடமும் மன்னிப்புக்கோரிய வைத்தியர்கள் உடனடியாக சிகிச்சை வழங்குவதாகவும் எக்ஸ்ரேயை இப்போது எடுப்பதாகவும் உறுதி வழங்கினர்.

தொடர்ந்து மாணவனுக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு நோயாளர் விடுதியில் மாலை 6.30 மணிக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதுடன் பக்குவமான கவனிப்புகளும் நடந்தேறின.

இதேவேளை இதுபோன்ற பல அசண்டையீனமான சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தொடர்ந்தும் நடைபெறுவதாகவும் நோயாளர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. (செ-27)

# கொல்லவிளாங்குளம்-பாலிநகர் வீதி வேலை செப்டெம்பரில் ஆரம்பம்

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவுமாவட்ட அரச அதிபரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கொல்லவிளாங்குளம் சந்தி தொடக்கம் பாலிநகர் சந்தி வரையான பிரதான வீதி திருத்தத்திற்கு 60 இலட்சம் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

கொல்லவிளாங்குளம் சந்தியிலிருந்து பாலிநகர் சந்தி வரையான 1.900 கிலோ மீற்றர் வரையான வீதி க்கு கல்லிட்டு தார் ஊற்றும் வேலைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாத முற்பகுதியில் ஆரம் பிக்கப்படவுள்ளது. இவ் வேலைகள் யாவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாக பூர்த்தி செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# கண்ணகைபுரம் கிராம அபிவிருத்தியை முன்னெடுப்பது குறித்த செயலமர்வு

## குழுக்கள் அமைக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்ணகை புரம் கிராமத்தில் கிராம அபிவிருத்தியை முன்னெடுக்கும் வகையில் கிராம அபிவிருத்தி திட்டம் தொடர்பான செயலமர்வு கடந்த 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கண்ணகைபுரம் மத்தி பொது நோக்கு மண்டபத்தில் கிராம மக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இச்செயலமர்வின் போது கிராமத்தின் வரலாறு, கிராமத்தின் வரைபடம்,கிராம மக்களின் பொருளாதார நிலை வகைப்படுத்தல், வென்வரிப் படம் தயாரித்தல்,பருவகால நாட்காட்டி தயாரித்தல், எதிர்கால அபிவிருத்திதிட்டம் ஆகிய செயற்பாடுகளை முன்னுரிமைப்படுத்தி குழுக்கள் அமைக்கப்பட்டு குறித்த தரவுகள் பெறப்பட்டன.


இதனூடாக எதிர்காலத்தில் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இக்கிராமஅபிவிருத்திசெயலமர்வில் கண்ணகைபுரம் கிராமமக்கள், கிராம அலுவலர், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்,அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(2-272)

# வடக்கு மா. போக்குவரத்து நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வு

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச்சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முதலாவது கூட்டம் ஆளுநர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் தலைமையில் கடந்த 8 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர், போக்குவரத்து அமைச்சின் செயலாளர், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர், உதவிப்பொலிஸ் அத்தியேட்சகர் மற்றும் அதிகாரிகள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள், இலங்கை போக்குவரத்து சபையின் அதிகாரிகள், தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக இக்கூடத்தில் இணைந்த நேர அட்டவணையை செப்டெம்பர் முதலாம் திகதி தொடக்கம் அமுலாக்குவது தொடர்பாகவும், இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகள் ஒரே பயண ஆரம்ப இடத்தில் இருந்து சேவையை வழங்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஒரே இடத்தில் இருந்து பயணிகள் சேவையை வழங்குவதில் பிரச்சினை இல்லையெனவும் அங்கு பேருந்து நிலையங்கள் அதற்கமைவாக உள்ளன, வவுனியா மாவட்டத்தில் இன்னும் ஒரு மாத காலத்தில் புதிய பேருந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டவுடன் இந்த பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படும். யாழ். மாவட்டத்தில் பொதுவான பேருந்து நிலையம் அமைப்பதில் இடப்பிரச்சினை நிலவுவதாகவும் அதற்கு தற்காலிகமாக தீர்வை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுவான பேருந்து நிலையம் அமைத்தல் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன் பின்னர் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் தனியார் பேருந்து சங்க பிரதிநிதிகள், யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து நிலையங்கள் மற்றும் புதிதாக பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று களஆய்வுகளை மேற்கொண்டனர். (2-281)

# சிறுமி ஹரிஷ்ணவியின் கொலை வழக்கு; சந்தேக நபருக்கு நிபந்தனையுடன் பிணை

(குருமன்காடு)

வவுனியா சிறுமி கங்காதரன் ஹரிஷ்ணவியின் பாலியல் துஷ்பிரயோகக் கொலை வழக்கின் சந்தேக நபராகிய பாலசிங்கம் ஜனார்த்தனனுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் அரச தரப்பு சட்டவாதியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது.

ஆறு மாதங்களாக இந்த சந்தேக நபர் எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி விளக்கமறியலில் இருந்து வருவதாகத் தெரிவித்து அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரி வவுனியா மேல் நீதிமன்றத்தில் அவர் சார்பில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களாக அந்த சந்தேக நபர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இவருக்கு எதிரான சுருக்கமுறை வழக்கு விசாரணை முடிவடையவுமில்லை. இந்த வழக்கில் மரபணு பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தப் பரிசோதனை அறிக்கை இன்னும் நீதிமன்றத்திற்கு வந்து கிடைக்கவில்லை என தெரிவித்து வழக்கு தாமதமடைந்துள்ளது என சந்தேக நபரின் சார்பில் நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்த சட்டத்தரணி தெரிவித்து, சந்தேக நபருக்குப் பிணை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பான மரபணு பரிசோதனை அறிக்கை எதிர்பார்க்கப்பட்டிருக்கும் நிலையில் சந்தேக நபருக்கு பிணை வழங்கப்படக் கூடாது என அரச தரப்பில் வழக்குத் தொடுநர் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி நிசாந்த் நாகரட்னம் கடும் ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனை செவிமடுத்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், அரச சட்டத்தரணியின் கடும் ஆட்சேபனைக்கு மத்தியிலும் இந்த பிணை விண்ணப்பத்திற்கு பிணை வழங்கப்படுகின்றது என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த வழக்கில் தொடர்புடைய சந்தேக நபர் 6 மாதங்களாக விளக்கமறியலில் இருந்து வருகின்றார் என்பதாலும் குற்றச்சாட்டு ஒன்று நிரூபிக்கப்படும் வரையில் எந்தவொரு நபரும் சுற்றவாளியே என்ற காரணத்தினாலும் இந்த் சந்தேக நபருக்குப் பிணை வழங்கப்படுகின்றது.

வழக்குகளில் பிணை வழங்க வேண்டியது மேல் நீதிமன்றத்தின் உரிமையாகும். பிணை மறுக்கப்படுவதற்கு விதிவிலக்கான காரணங்கள் இருக்க வேண்டும். அத்தகைய காரணங்களின் அடிப்படையிலேயே பிணை மறுக்கப்பட வேண்டும். இந்த பிணை மனு வழக்கில் அத்தகைய விதிவிலக்கான காரணம் எதனையும் இந்த நீதிமன்றம்காணவில்லை. எனவே சந்தேக நபருக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கப்படுகின்றது என நீதிபதி சசி மகேந்திரன் தெரிவித்தார்.

இரண்டு இலட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் சந்தேக நபரை செல்வதற்கு உத்தரவிட்ட நீதிபதி ஒவ்வொரு சனிக்கிழமையும் நீதிமன்ற வளாகத்தில் உள்ள பொலிஸ் அலுவலகத்தில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் கையெழுத்திட வேண்டும் எனவும் அவரிடம் கடவுச் சீட்டு இருக்குமானால், அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளார். (2-250)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுடைய 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட தூர இடங்களிலிருந்து பாடசாலைகளுக்கு வருகின்ற தெரிவு செய்யப்பட்ட 22 மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் மு/ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்ட போது... (படங்கள்: பனிக்கன்குளம், மல்லாவிச் செய்தியாளர்கள்)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி உபகரண்ம், கசிப்பு கோடா என்பவற்றை உடைமையில் வைத்திருந்த தந்தை மகன் ஆகிய இருவருக்கும் தலா ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் ஏழு போத்தல் கசிப்பு, 173 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணம் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த தந்தையையும் மகனையும் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த இருவரையும் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இருவருக்கும் தலா ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா வீதம் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் பதினைந்து நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் மன்று உத்தரவிட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது,

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப்பொலிஸார் சாரதியை நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்றி நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியத்தையடுத்து குறித்த நபருக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் உழவு இயந்திரம் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பன்னங்கண்டிப்பகுதியில் உழவு இயந்திரத்தின் மூலம் மணல் அகழ்விற்கு பயன்படுத்தும் உபகரணத்தைப் பயன்படுத்தி மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்த கிளநொச்சி பொலிஸார் சந்தேக நபரையும் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. குறித்த உபகரணத்தையும் அழிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றிய மூன்று இயந்திரங்கள் மற்றும் மண் அகழ்வில் ஈடுபட்ட பக்கோ வாகனம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மண் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரங்களையும் பக்கோ வாகனம் ஒன்றையும் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் அதன் சாரதிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-312)

# ஊற்றுப்புலம் ஒடுக்குப்பாலம் வேலைகள் விரைவில் ஆரம்பம்


கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் காணப்படுகின்ற ஒடுக்குப்பாலம் 85 மில்லியன் ரூபா செலவில் அமைக்கும் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

ஊற்றுப்புலம் கிராமத்தின் பழைய குடியிருப்பில் வசிக்கின்ற மக்கள், கிளிநொச்சி நகரத்திற்கு சென்று வருவதற்கு இப்பாதையே பயன்படுத்தப்படுகின்றது.

இப்பாலம் மிகவும் ஒடுங்கியதாகவும் ஆபத்தான நிலையிலும் இருப்பதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பாலத்தின் ஊடாக ஈருளி, உந்துருளிகள்மட்டுமே பயணம் செய்ய முடியும்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் காணப்படுகின்ற ஒடுக்குப் பாலம் 85 மில்லியன் ரூபா செலவில் அமைக்கும் பணிகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.



ஊற்றுப்புலம் கிராமத்தின் பழைய குடியிருப்பில் வசிக்கின்ற மக்கள் கிளிநொச்சி நகரத்துடனான தொடர்புக்கு ஒரேயொரு பாதையான இப் பாதை ஆபத்தான நிலையிலும் மிகவும் ஒடுங்கியதாகவும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலமும் இருந்து வந்துள்ளது. இந்தப் பாலத்தின் ஊடாக ஈருளி, உந்துருளிகள் மாத்திரமே பயணம் செய்ய முடியும். இதனால் மக்கள் மிகவும் அசௌகரியங்களை சந்தித்து போக்குவரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் முன்னைய அரசாங்கத்திலும், தற்போதைய அரசாங்கத்திலும் குறித்த பாலம் தொடர்பில் பெருந் தெருக்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் உள்ளிட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தமைக்கு அமைவாக அவர்களால் நிரந்தர பாலம் அமைப்பதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

இதனை தொடர்ந்து பரந்தன்,முல்லைத்தீவு வீதியில் நெத்தலியாற்றில் நிரந்தர பாலம் அமைக்கும் வரைக்கும் அமைக்கப்பட்டிருந்த 50 மில்லியன் பெறுமதியான இரும்பு பாலம் ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அத்தோடு அதற்கான கட்டுமானப் பணிகளுக்கு 35 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் மூலம் அந்த மக்கள் மிக நீண்டகாலமாக முகம் கொடுத்து வந்த மிகப்பெரும் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஊற்றுப்புலம் கிராமத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார். கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர் ஆகியோர் ஒப்பந்தகாரர்களுடன் நேரில் சென்று பார்வை யிட்டுள்ளனர். இதன்போது கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சி.முகுந்தன் மற்றும் கமக்கார அமைப்பு, மூத்த பிரஜைகள் சங்கத் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.(2-312)




# நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு விடிவு எட்டாக்கனியாகவுள்ளது

## வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் தெரிவிப்பு

(துணுக்காய்)

வடபுலத்து மக்களின் எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்களின் வெளிப்பாடே ஒட்டுமொத்த மக்களும் சேர்ந்து வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்து பெரும்பான்மையான உறுப்பினர்களைத் தெரிவு செய்து வடபுலத்தில் பெரும்பான்மை தமிழர் சபை ஒன்றை உருவாக்கினர்.

ஆனால் இன்று அந்த மக்களின் ஏக்கமும், எதிர்பார்ப்புகளும் கானல் நீராக மாறிவருகிறது என வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெநாதன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலய அதிபர், ஆசிரியர்களுக்கு சர்வதேச கல்வியகமும், நோர்வே கல்வியியலாளர் ஒன்றியமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் கூறுகையில்,

நீண்டகாலமாக நாம் பட்டு வரும் துன்பங்களுக்கு விடிவு என்பது எட்டாத கனியாக உள்ளது. அதிகாரம் இல்லாத மாகாணசபையையே நாம் நடத்திக்கொண்டு இருக்கின்றோம். வாக்களித்த மக்களுக்கு எதுவும் செய்ய முடியாதவர்களாக, எமக்கு ஒதுக்குகின்ற நிதிகளைக் கொண்டு சொற்ப அளவிலான பணிகளையே நாம் செய்கின்றோம்.

மாகாண சபையின் சகல அதிகாரங்களும் மத்திய அமைச்சினால் பறிக்கப்பட்டுள்ளன. எமது பிரதேசங்களின் எத்துறைசார் வளர்ச்சியையும் நாம் முழுமையாகச் செய்யமுடியாதவர்களாக உள்ளோம்.

எமது இளம்சந்ததி சீரழிந்து சின்னாபின்னமாகின்றது. கல்வியில் நாம் பின் தங்கி உள்ளோம். சமூகச் சீரழிவுகளும், கலாசார புரள்வுகளும்எம்மினத்தை வேரோடு அழிக்க முனைகின்றன. கட்டுக்கோப்பான தமிழ்ச் சமூகம் என்ற பெயரை இழந்து வருகின்றோம். மது பாவனையில் முதலிடத்தில் உள்ளோம். இவை எல்லாம் எம் இனத்தின் மீதும், மக்களின் மீதும் பற்றுக்கொண்டவர்களின்கனவுகளை துடைத் தெறிகின்றன. எமது எதிர்கால சந்ததி ஊனமுற்றதாக இருக்க வேண்டுமென திட்டமிட்டு பல காரியங்கள் நடைபெறுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் மையமாக பாடசாலை இருக்க வேண்டும். அதிபர் களும், ஆசிரியர்களும் எமது இனம் சார்ந்த குழந்தைகளின் கல்வி, பண்பாடு, ஒழுக்க விழுமியங்கள் அனைத்திலும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவது எமது கடமையாகும்.

ஒரு முறையான அரசியல்தீர்வு கிடைத்து, எமக்கான சுயஆட்சி எப்போது கிடைக்கின்றதோ அன்று தான் எம க்கு விடிவும் கிடைக்கும்.

அதுவரை மத்திய அரசாங் கத்தின் நிகழ்ச்சி நிரலிலேதான் நாம் இயங்க முடியும். இது எமக்கு வாக்களித்த மக்களுக்கு நாம் செய்கின்ற அநியாயம். எதுவாயினும் சவால்களை எமக்குச் சாதகமாக்கி முன்னேறிச் செல்வோம் என பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் உரையாற்றியிருந்தார். (செ-2)

# பிரமோற்சவம்

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் எதிர் வரும் 17ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். இதற்கமைய எதிர் வரும் 24ஆம் திகதி புதன் கிழமை வேட்டைத்திருவிழாவும் சப்பறத் திருவிழாவும் நடைபெற்று மறுநாள் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலய உற்சவங்கள் தினமும் காலை 9மணிக்கு ஆரம்ப மாகி நண்பகல் 12மணிக்கு நிறைவுபெறும்.மாலை உற்சவங்கள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9மணிக்கு நிறைவு பெறும்.

கொடியேற்றம், தேர், தீர்த்த உற்சவங்கள் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தினமும் மாலை உற்சவத்தின் போது காட்சியும் கானமும் எனும் தலைப்பில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறியத் தருகின்றனர். (2)

# பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்க வலியுறுத்தி 2 ஆவது நாளாகவும் உணவுதவிர்ப்பு

## இருவர் நேற்று இணைவு



வவுனியாவுக்கான பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலேயே அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வயோதிபர் ஒருவர் ஆரம்பித்த உண்ணாவிரத போராட்டம், இரண்டாவது நாளாகவும் நேற்று வியாழக் கிழமை தொடர்ந்தது.

வவுனியா தெற்கு பிரதேச சபையின் ஓமந்தை உப அலுவலகத்திற்கு முன்பாக தா. மகேஸ்வரன் (வயது 73) என்ற வயோதிபர் இவ் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்.

வவுனியாவுக்கான பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலேயே அமைக்கப்பட வேண்டுமென கடந்த 2010 ஆம் ஆண்டு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதென சுட்டிக்காட்டிய குறித்த வயோதிபர், அதன் அடிப்படையில் ஓமந்தையிலேயே குறித்த மத்திய நிலையம் அமைய வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வயோதிபருக்கு ஆதரவாக அப்பகுதியைச் சேர்ந்த மேலும் சிலர் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

# புதையல் தோண்டியவர்கள் பொலிஸாரினால் கைது

(வவுனியா)

வவுனியா செட்டிகுளப் பிரதேசத்தில் புதையல் தோண்டிய நால்வர் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

செட்டிகுளம் அரசடிக்குளப் பகுதியில் நேற்று முன் தினம் அகழ்வுப்பணியில் ஈடுபட்டிருந்த போதே நால்வரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் அநுராதபுரம், முதலியார் குளம், நேரியகுளம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவர்களிடமிருந்து புதையல் தோண்ட பயன் படுத்திய ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (2)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 02.08.2016 முதல் 01.09.2017 வரை

# ஏழாமிடத்தில் குருபகவான்! எதிலும் இனிமேல் முழுவெற்றி



### சமுதாயத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதிக்கும் மீன ராசி அன்பர்களே!

கிரகங்களின் பூரணமான சுபத்தன்மையை கொண்டிருக்கும் குருபகவானை ராசிநாதனாகப் பெற்றவர்கள் நீங்கள். எனவே இயல்பாகவே உங்களிடம் ஒரு தெய்வீக அம்சம் குடிகொண்டிருக்கும். அதிநுட்பமான அறிவாற்றலைக்கொண்டு ஆலோசனைகளை அள்ளி வழங்குவீர்கள். நல்ல திறமைசாலிகளாக மட்டும் அல்லாமல், ஞாபகசக்தி மிக்கவர்களாகவும் விளங்குவதால் தான், உங்களால் எளிதில் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ள முடிகிறது. பேருக்காக உழைப்பவர்களுக்கு மத்தியில் ஊருக்காக உழைப்பவர்கள் நீங்கள். நேருக்கு நேர் நின்று நீங்கள் பேசினால் யாருக்கும் ஒரு அன்பு பிறக்கும். எளிமையாகப் பேசுவதோடு மட்டுமல்ல, இனிமையாகவும் பேசி மெல்லிய குரலால் எதிரிகளை கவரும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். ஆசாமிகளை விட சாமிகளை நம்புவது மேல் என்று சொல்வீர்கள். நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். எப்படியும் வாழலாம் என்பவர்களுக்கு மத்தியில் இப்படித்தான் வாழவேண்டும் என்று சொல்பவர்கள் நீங்கள். எல்லா நெளிவு, சுளிவுகளையும் நீங்கள் கற்று வைத்திருப்பதால் யாரைப் பிடித்தால் எந்தக் காரியம் முடியும் என்ற இரகசியத்தைப் பலரும் உங்களிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்வர். உங்கள் ராசிக்குத் தனாதிபதியாக செவ்வாய் விளங்குவதால் செவ்வாயின் பலத்தைப் பொறுத்தே வருமானத்தை நிர்ணயிக்க முடியும். சப்தமாதிபதியாக புதன் விளங்குவதால் புதனின் பலத்தைப் பொறுத்தே வாழ்க்கைத் துணை அமையும்.

தொழில் ஸ்தானதிபதியாக குரு விளங்குவதாலும், லக்னாதிபதியாக குரு இருப்பதாலும் ஆரோக்கியம், தொழில் முயற்சி, அன்றாடப் பணி, இலாபம், கூட்டாளிகளால் நன்மை போன்றவற்றை, உங்கள் ஜாதகத்தில் குரு இருக்கும் நிலையைப் பொறுத்தே அறிந்து கொள்ள முடியும்.

எனவே உங்கள் சுய ஜாதகத்தைப் புரட்டிப் பாருங்கள். மேற்கண்ட மூன்று கிரகங்களும் பலன் தரும் விதத்தில் இருந்தால் யோகங்கள் வந்து கொண்டேயிருக்கும். மேற்கண்ட கிரகங்கள் பொருத்த மற்ற நிலையில் இருந்தால் பரிகாரங்களின் மூலமே பலன்களைப் பெற இயலும். அதே நேரத்தில் தற்சமயம் பெயர்ச்சியாகப் போகும் குருபகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியை நேரடியாகப் பார்க்கப் போகிறார். இதனால் உங்களுக்கு கோடி நன்மை கிடைக்கப் போகிறது.

ஆறில் ராகு நின்று, குரு கேந்திரத்தில் இருந்தால் அஷ்டலட்சுமி யோகம் செயற்படும். அந்த அமைப்பு கோச்சாரத்தில் தற்சமயம் உங்களுக்கு உருவாகி இருக்கிறது. எட்டு லட்சுமிகளும் இந்த நேரத்தில் இல்லத்தில் வாசம் செய்து கொட்டும் பணம்மழையில் நனைய வேண்டுமானால் ராகுவையும், குருவையும் குருப்பெயர்ச்சியானதும் ஓரிரு மாதங்களுக்குள் கொண்டாடி மகிழ வேண்டும். எனவே, குரு பிரீதியும், ராகு-கேது பிரீதியும் அனுகூலமான நாளில் சிறப்பு ஸ்தலங்களில் செய்வது நல்லது.

### வந்து விட்டது குருப்பெயர்ச்சி

ஆடி 18 முதல் (2.8.2016) தேடி வரப் போகிறது யோகம்! கூடி வரப் போகின்றது இலாபம்! நாடிவரப்போகின்றது நல்லவர்களின் நட்பு! ஓடி ஒளியப் போகின்றது துரத்தி வந்த துயரங்கள். சப்தம ஸ்தானத்தில் அடியெடுத்து




வைக்கப் போகும் குரு அற்புதமான பலன்களை அள்ளி வழங்கும் என்பதால் தாமதங்கள் அகலும். நாமகளும், பூமகளும் நல்லருள் கொடுக்க உங்கள் இல்லம் தேடி வருவர்.

பெயர்ச்சியாகும் குரு 7 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். களத்திர ஸ்தானம் புனிதமடைவதால் இதுவரை வந்த வரன்களைவிட இனிவரும் வரன்கள் சிறப்பானதாகவும், மனதிற்கு பிடித்தமாகவும் இருக்கும். ஒருசிலருக்கு விட்டுப்போன வரன்களே மீண்டும் வரலாம்.

இதுவரை உங்களை உதாசீனப்படுத்திய உறவினர்கள் உங்களைத் தேடி வருவர். பகை மாறி பாசம் காட்டுவர். தங்க நகைகள் வாங்கவில்லையே, நாளும் சாப்பாட்டு செலவிலேயே சகல பணமும் செலவாகின்றதே என்று அவதிப்பட்டவர்களுக்கு, திருப்திகரமாக வருமானம் அமையப் போகிறது.

பூமி வாங்குவீர்கள், புதிய வீடு வாங்குவீர்கள். பொன், பொருள் வாங்குவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை விருப்பம் போல் வாங்கிச் சேமிப்பீர்கள். கடல் தாண்டும் முயற்சி கைகூடும். மடல் மூலம் மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். மருத்துவம் பார்த்தும் சரியில்லாமல் இருந்த உடல் நலம், இப்போது மருத்துவம் இன்றி, உணவு கட்டுப்பாட்டிலேயே சீராகும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்து சேருவர். புதிய தொழில் தொடங்க திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் கிடைத்து மகிழ்ச்சிப்படுத்தும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு கைகூடி வரலாம். விலகி இருந்தவர்கள் விவகாரம் தீர்ந்து, இனி ஒன்றாக வந்திணையும் வாய்ப்பு உண்டு. இடையூறுகளைத் தகர்த்து எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதத்தில் இந்த குருப்பெயர்ச்சி அமைந்துள்ளது.

### குரு பார்வை கொடுக்கும் பலன்கள்

நவக்கிரகங்களில் நல்ல கிரகம் என்றும், பார்வையால் பலன்களை அள்ளி வழங்கும் கிரகம் என்றும் சொல்லப்படும் குருபகவான், ஏழாமிடத்தில் இருந்துகொண்டு 1,3,11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே உங்கள் ராசி மற்றும் சகோதர, சகாய ஸ்தானம், இலாப ஸ்தானம் ஆகிய மூன்று இடங்களும் புனிதமடைகிறது. குருவின் பார்வை பதியும் இடங்களெல்லாம் நன்மையை வழங்கும். உள்ளம் மகிழும் சம்பவம் ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டே இருக்கும். அச்சம் இல்லாத வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பது, குருவின் பார்வை ஒன்றுதான்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கவலைகள் விலகும். இழந்தவைகளை மீட்டுக் கொள்வீர்கள். உடன்பிறப்புகள் முதல் உடன் இருப்பவர்கள் வரை உங்களுக்கு ஆதரவு கொடுப்பர். மூடிக் கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்திப் பார்ப்பீர்கள். கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு, தொழில் செய்ய முன்வருவர். திசாபுத்தி பலமிழந்தவர்கள் உத்தியோகத்திலேயே நீடித்தாலும் கூட, குடும்ப உறுப்பினர்களின் பெயரில் கூட்டுத் தொழில் செய்ய முன்வருவர். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு பதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும்.


குருபகவான், சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை) நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். வெற்றிப் படிக்கட்டின் விளிம்பில் ஏற நண்பர்கள் வழிவகுத்துக் கொடுப்பர். தடைகள் அகலும். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய பொறுப்புகளும், அதிகாரத்துவ யோகமும் வந்து சேரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும்.

குரு பகவான், சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை) பிள்ளைகளால் நன்மை ஏற்படும். நிதி நிலை உயரும். நிர்வாகத்திறன் கூடும். திட்டமிட்டுச் சில காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். குலதெய்வ வழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள். குடும்பத் தகராறுகள் மாறும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் விலகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை) வருமானம் இருமடங்காக உயரும். வாங்கிப் போட்ட சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். சகோதரர்கள் இணைந்து செயற்பட்டு இதயம் மகிழும் விதம் நடந்து கொள்வர். தேக ஆரோக்கியம் சீராகும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வழக்குகள் சாதகமாகும்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

இம்முறை குரு வக்ரம் பெறுவதோடு அதிசாரமாகவும் துலாம் ராசிக்குச் செல்கிறார். இந்த அதிசார குரு உங்களுக்கு அஷ்டமத்தில் வருவதால் திடீர் மாற்றங்கள்



உருவாகும். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றம் வரலாம். குடும்பச்சுமை கூடும். விரயங்கள் அதிகரிக்கும். குருவின் வக்ர காலத்தில் எதையும் தீர்க்கமாக முடிவெடுக்க முடியாது. திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லலாம். பணியாளர்களின் தொல்லை அதிகரிக்கும். வீண் விரயங்களால் மனக் குழப்பம் ஏற்படும். தொழிலுக்கு போதுமான மூலதனம் இல்லையே என்று கவலைப்படுவீர்கள். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும்.

### செல்வம் தரும் சிறப்பு வழிபாடு

உங்கள் ராசிநாதன் குரு என்பதால் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு, பௌர்ணமி தோறும் மலைவலம் வந்து முருகப்பெருமானை வழிபடுவது நல்லது

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

### *மங்கையருக்கான மகத்தான பலன்கள்!*

மீன ராசியில் பிறந்த பெண்களுக்கு மிகச் சிறப்பான நேரம் இது. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு செயற்படுவர். குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்த தம்பதியர்களுக்கு அது கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும். தள்ளிப் போன காரியங்கள் தானாக நடைபெறும். தைரியமாக முடிவெடுத்து தடைகளை அகற்றிக் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் பெயரிலேயே வீடு வாங்கச் சம்மதிப்பர். புகுந்த வீட்டில் புகழ் கொடி நாட்டுவீர்கள். பிறந்த வீட்டிற்குப் பெருமை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், எதிர்பார்த்த இலாகா மாற்றங்களும் வந்து சேரும். அரசியலில் பதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாழக்கிழமை குருபகவானை வழிபடுவதோடு, சுய ஜாதகத்தில் திசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபாடு செய்யுங்கள்.

(முற்றும்)

# இந்திய வர்த்தக அமைச்சர் இலங்கைக்கு வரவுள்ளார்

எட்கா உடன்பாடு தொடர்பாக பேச்சுக்களை நடத்துவதற்கு இந்தியாவின் வர்த்தக அமைச்சர் விரைவில் இலங்கைக்கு வருவார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எட்கா உடன்பாடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிரணியின் உறுப்பினர் ஜெயந்த சமரவீர எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

"இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள எட்கா உடன்பாட்டை வரையும் பேச்சுக்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக இதுபோன்ற உடன்பாடுகள், சீனா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுடனும் செய்து கொள்ளப்படும்.

அரசாங்கத்தின் சார்பில், இந்தியாவுடன் எட்கா உடன்பாட்டைச் செய்து கொள்வது தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் பொறுப்பு அபிவிருத்திமூலோபாய, அனைத்துலக வர்த்தக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு அமைச்சின் கீழ் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி மூலோபாய, அனைத்துலக வர்த்தக அமைச்சரே இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இந்தியாவுடன் உடன்பாட்டில் கையெழுத்திடுவார்.

20 மில்லியன் மக்கள் தொகையை மாத்திரம் கொண்ட நாம் வரையறுக்கப்பட்ட சந்தையையே கொண்டிருக்கிறோம். இது போதாது.

உலகெங்கும் நாம் புதிய சந்தைகளைத் தேட வேண்டும்.

வெளிநாட்டுச் சந்தைகள் இல்லாமல் எவ்வாறு நாம் எமது உற்பத்திகளை விற்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (இ-7-10)

# மோட்டார்சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் மரணம்

(கொழும்பு)

மாவனெல்லை பெலிகம்மன பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் இருவர் பலியாகியுள்ளனர். கண்டி நோக்கிப் பயணித்த மோட்டார் வாகனம், முன்னால் வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளனர். (இ-7-10)

# பணம் கொள்ளை குறித்து பொலிஸார் விசாரணை

வென்னப்புவ பிரதேசத்தில் அமைந்துள்ள பணமாற்று மத்திய நிலையத்தில் பெருந தொகை பணத்தினை கொள்ளையிட்ட இரண்டு வெளிநாட்டவர்களை தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் 1000 அமெரிக்க டொலர்கள், 850 சவுதி றியால்கள், 3000 டிரம்கள் உள்ளிட்ட 91 இலட்சத்துக்கும் அதிகமான தொகையினை கொள்ளையிட்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பாகுபாடின்றி தொண்டராசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும்- இம்ரான் எம்.பி

இன, மத, பிரதேச, கட்சி பாகுபாடின்றி தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்க ப்பட வேண்டும் என திருகோணமலை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசத்தை பாராளுமன்ற கட்டட தொகுதியிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார். (இ-7-10)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## தெய்வீக சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு சைவத் திருச்சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தெய்வீகச் சொற்பொழிவு" இன்றும் இடம் பெறும். மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் சைவப்புலவர் சந்திரவேல் "திருவாசகம் என்னும் தேன்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் "அருள் நெறி விழா" இன்று 12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. கே.ஹேமலோஜினி தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர், பொதுச்சேவை ஆணைக் குழு உறுப்பினர் சி.தில்லைநடராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்த சுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணி யளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை பண்டிதர் சைவப்புலவர் மா.கணநாதனின் "தமிழ்க்கடவுள்" பற்றிய சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)

## தெய்வீக இசைச் சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணி வரை நடத்திவரும் தெய்வீக இசைச் சங்கமத்தில் இன்று 12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை செல்வி. அபிஷா நகுலேஸ்வரசர்மா, செல்வி கணேசாயினி ஸ்ரீநிவாசக்குருக்கள், பிரணவராஜ சர்மா ஆகாஸ்வர சர்மா, செல்வி.ஸ்ரீஅக்ஷாயினி பிரணவராஜசர்மா ஆகியோரின் வயலின் கச்சேரி இடம் பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாட்டு- க.ரஜீவன், வயலின் -அ.ஜெயராமன், மிருதங்கம்- எஸ்.செந்தூரன், கடம்- பிரம்மஸ்ரீ ந.சிவசுந்தரசர்மா ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)




அன்பு வாசகர்களே!
நல்லூர் முருகப் பெருமானின்
மகோற்சவ காலத்தில்
வலம்புரியில் வெளிவரும்
நல்லைக்கந்தன் பாமாலைக்கு
உங்கள் கவிதைகளை
பிரதம ஆசிரியர் - வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இராமகிருஷ்ண மிஷனின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 08 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை நடைபெறும். (இ-3)

# நல்லூரானுக்கு இன்று 5ஆம் திருவிழா



## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

பதிக்குநீ பதியாகிப் பரமனுக் குபதேசம்
பகன்றது முண்மையிலையோ
மதிகொண்ட சிவனுனது மதிதன்னை யேவியந்
தவன்மகிழ்வு கொண்டதிலையோ
நிதிகொண்ட புரவலர் நிதியாக நீநின்று
நித்திலங் கொழிக்கவிலையோ
நதியாக வருளூற்று நல்கியே பல்கிடும்
நல்லூரின் கந்தவேளே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*

## நல்லைநாதனே ஓடிவாராய்!

முருகன் என்றதனால் அழகனானாய்
முத்தமிழ் வித்தகனாய் முதல்வனானாய்
கருணை பூர்முகங்கள் ஆறதனால் சண்முகனானாய்!
கலியுக வரதனே நீ; அன்பருக்கு அன்பனானாய்!
அருளை வழங்கும் ஆறுமுகனே அலங்காரனானாய்!
அல்லலுறும் வேளை வந்து அணைத்திடும் அபயனானாய்!
பெருநகராம் நல்லை தனிலே அலங்காரக் கந்தனானாய்!
பெரியவனே! குரு நாதா ! நல்லை நாதனே ஓடிவாராய்

*-பொ.புனிதன், வரியப்புலம்.*

## ஒரு ரூபாய் நாயகா



நல்லையம் பதி நாயகா
நலம் காக்கும் வேலவா
கோடான கோடி மக்களின்
துயர் தீர்த்திடும் முத்துக்குமரா
அரசாட்சி மாறினும் வானமே
இடிந்து வீழ்ந்திடினும் உன்
ஒரு ரூபாய் பற்றுச்சீட்டு
என்றென்றும் மாறாது ஐயா
ஏழை எளியவனுக்கும் உன்
அருட் கடாட்சம் தரும் வேலவா
என்றென்றும் உன் அருட்பார்வை
உன் பக்தர் அனைவருக்கும் கிடைக்கட்டும் வேலவா.

*-வ.பவளகேசி, கொய்யாத்தோட்டம்*

## நல்லையம்பதியுறை கந்தா!

பொறியாகி சரவணப் பொய்கையிலே வந்துதித்த சண்முகனே!
பொல்லாத நம் வினையதனை விரட்டிடுவாய்
செறிவான குடியமைந்திலங்கும் நல்லையம் பதியுறை கந்தா!
செப்பிடும் இன்னருளை நமக்கு நல்கிடுவாய்
தெறிக்கின்ற நின்திருக்கை வேலின் கண் பிறக்கும் பேரொளியை
திக்கெட்டும் பரவும் வகை செய்திடுவாய்
அறியாத மூடர் நாம் செய்யும் பாவங்களை
ஐயா! நீ பொறுத்தெமைக் காத்தருள்வாய்.

*-ஸ்ரீ.நதிபரன், நல்லூர்.*

## பல பிறவிகள் வேண்டுனே



முப்புறம் பொடிபட முறுவல்
செய்தவன் தான் தந்த ஆறுமுகவா
தருமமில் அசுரர் குலநாசனே
நேசமுடைய தேவா சகாயனே
தேசமெல்லாம் புகழ் நல்லூர்
வாசனே வடிவேலா அருட்குமரா
ஐயா நீ உலாப்போந்த வீதியிலே
விழுந்து கும்பிட்டால் வினைகள் தீருமே
திருக்கோலங்கண்டு வழிபட
இன்னும் பல பிறவிகள் வேண்டுனே

*-சு.சிவராசா, நாவற்குழி*

# 45 ஆயிரம் ஐ.எஸ்.தீவிரவாதிகள் இரண்டு ஆண்டுகளில் சுட்டுக்கொலை

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

**45 ஆயிரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த இரண்டே ஆண்டுகளில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை தெரிவித்துள்ளது.**

சிரியா மற்றும் ஈராக்கின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி ஐ.எஸ் எனப்படும் தீவிரவாத அமைப்பானது ஆதிக்கம் செலுத்தி வந்தது. இதனால் இருநாட்டு அரசுகளும் ஐ.எஸ் அமைப்பிற்கு எதிராக போர் தொடுக்க திட்டமிட்டனர்.

இதற்காக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். வசம் இருந்த பகுதிகளில் தாக்குதல் நடத்தி வந்தது. இந்நிலையில், 45 ஆயிரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த இரண்டே ஆண்டுகளில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை தெரிவித்துள்ளது.அதிகாரபூர்வமாக ஐ.எஸ் அமைப்பானது 25 ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவை ஈராக் மற்றும் சிரியாவில் இழந்துள்ளது. அது ஈராக்கில் 50 சதவீதமும், சிரியாவில் 20 சதவீதமும் இருக்கும்.

ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை கடுமையான சண்டையிட்டுள்ளது.

45 ஆயிரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த இரண்டே ஆண்டுகளில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதில் கடந்த 11 மாதத்தில் 25 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். அதற்கு முன்பாக 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். மொத்தம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 45 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## லிபியாவில் ஐ.எஸ்.தலைமையகத்தை அரசு ஆதரவுப் படை கைப்பற்றியது



லிபியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் முகாமிட்டிருந்த முக்கிய தலைமையகத்தை அரசு ஆதரவுப் படை கைப்பற்றியுள்ளது.

லிபியாவில் சிர்தே நகரை கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்கு அரசு ஆதரவு படைகள் கடுமையாக சண்டையிட்டு வருகின்றன. அரசுப் படைகளுக்கு உதவியாக அமெரிக்காவும், ஐ.எஸ். நிலைகள் மீது வான்தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், சிர்தே நகரில் ஐ.எஸ். அமைப்பின் தலைமையகத்தை கைப்பற்றியுள்ளது. இது ஜிகாதிகளை வெளியேற்றும் முயற்சிக்கு கிடைத்த முக்கிய வெற்றியாக கருதப்படுகிறது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் தளம் அமைத்துள்ள மாநாட்டு மையத்தின் அருகில் உள்ள வாகடுகு மையம் தற்போது தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாகவும், ஒட்டுமொத்த நகரையும் கைப்பற்றிய பிறகே முறைப்படியான விடுதலை அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அரசு ஆதரவு படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (இ-7-10)

## பெருவில் கோர விபத்து;

### 17 பேர் பரிதாப மரணம் 29 பேர் படுகாயம்

பெருவின் தெற்கு கடற்கரைப் பகுதியை அண்டிய வீதியில் இரு பயணிகள் பேருந்துகள் ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளானதில் 17 பேர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 29 பேர் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஐகா நகரில் இருந்து நக்ஸா நகரை நோக்கிப் பயணித்த பேருந்தும், லிமா நகரில் இருந்து நக்ஸா நகரை நோக்கிப் பயணித்து வந்த பேருந்தும் பனாமெரிக்கனா சூர் நெடுஞ்சாலையின் 429 ஆவது கிலோமீற்றர் தூரத்தில் ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளாகியுள்ளன.

விபத்து தொடர்பில் அறியக் கிடைத்ததும் குறித்த பகுதிக்கு விரைந்த தீயணைப்பு படை வீரர்கள், பேருந்துகளினுள் சிக்குண்ட பயணிகளை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர். இதன் போது, சிலரின் சடலங்கள் பேருந்துகளின் இருக்கைகளிடையே நசுங்கியிருந்ததாகவும், மிகவும் சிரமத்தின் மத்தியில் குறித்த சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை விபத்தின் போது பேருந்துகளின் சாரதிகள் உட்பட 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மேலுமொரு குழந்தை உயிரிழந்ததாக உள்ளூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கோர விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(இ-7)

## சசிகலா புஷ்பா, குடும்பத்தினர் மீது ஆறு பிரிவுகளில் வழக்குத் தாக்கல்



பாராளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது 6 பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சசிகலா புஷ்பாவின் மகன் மற்றும் கணவனால் தாம் பாலியல் ரீதியாக தொந்தரவிற்கு ஆளானதாக திருநெல்வேலியை சேர்ந்த பெண்கள் இருவர் கொடுத்துள்ள முறைப்பாட்டின் பேரில் குறித்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைபாடு செய்த பெண்கள், தாம் பாலியல் ரீதியான தொந்தரவிற்கு ஆளானது மாத்திரமன்றி சசிகலா புஷ்பா மற்றும் அவரது தாய் கௌரி ஆகியோர் பலமுறை தம்மை தாக்கியதாகவும், தங்களை வீட்டுச் சிறையில் வைத்திருந்ததாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் மனுவில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தூத்துக்குடி புறநகர் உதவி கண்காணிப்பாளர் தீபா ஞானிகர் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், தூத்துக்குடி மகளிர் பொலிஸ் நிலையத்தில் சசிகலா புஷ்பா குடும்பத்தினர் மீது கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அதன் பிரகாரம், தகாத வார்த்தைகளால் பேசுதல், கையால் அடித்தல், வீட்டில் சிறை வைத்தல், மானபங்கப்படுத்துதல், கொலை மிரட்டல் விடுத்தல், பெண்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய 6 பிரிவுகளின் கீழ் சசிகலா புஷ்பா, லிங்கேஸ்வர திலகன், பிரதீப் ராஜா, கௌரி ஆகியோர் மீது வழக்குப் பதியப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (இ-7)

## சீனாவில் இயற்கைச் சீற்றங்களால் ஒரு மாதத்தில் 600 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவில் வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களால் ஜுலை மாதத்தில் மட்டும் 600 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சிவில் அலுவல்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.



பொருளாதாரத்தை பொறுத்தவரை சுமார் 35 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் ஏற்பட்ட இயற்கை பேரிடரில் நாடு முழுவதும் 1.87 மில்லியன் வீடுகள் சேதாரமடைந்துள்ளன. அல்லது முற்றிலும் அழிந்துள்ளன.

சீனா முழுவதும் சுமார் 29 மாகாணங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இந்த வெள்ளம் மற்றும் புயலுக்கு 612 பேர் உயிரிழந்துள்ளனர்.விவசாயத்தை பொறுத்தவரை சுமார் 7.3 மில்லியன் ஹெக்டேயர் பரப்பளவிலான நிலங்கள் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-7-10)

# ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகள் அலுவலகம் யாழில் நேற்று திறந்து வைப்பு








படங்கள்:-பொ.சோபிகா

கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகள் அலுவலகத்தினை முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் திறந்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கைத்தொழில் சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகளை ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண ஆளுநர் ரெஜினோலட் குரே மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனின் ஆலோசனையின் கீழ் குறித்த அலுவலகம் யாழ். மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அலுவலகத்தில் முதலீட்டு அபிவிருத்திச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, சுற்றுலா அபிவிருத்திச்சபை, மாகாண விவசாய திணைக்களம், மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், மாகாண கைத்தொழில் திணைக்களம், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி. திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை போன்ற திணைக்களங்களை சார்ந்த. உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு தங்கள் சேவையை வழங்குவதற்கான வழிமுறைகள் செய்து கொடுப்பதற்கான ஒழுங்குகள் யாழ். மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்படும்.

மேலும் மாவட்டச் செயலகத்தில் செயற்படுகின்ற மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை.கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், கரையோர கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற திணைக்களங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்களுடைய சேவைகளும் இங்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள கைத்தொழில் சார் ஏற்றுமதி அலுவலர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் வாரத்தில் திங்கள் , புதன் ஆகிய நாட்களில் மேற்குறித்த உத்தியோகத்தர்களை சந்தித்து பயன் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன்.யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன். யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# வரலக்ஷ்மி விரதம் இன்று

திருமாலின் மார்பில் குடியிருக்கும் மகாலக்ஷ்மி, அஷ்ட ஐஸ்வரியங்களுக்கும் அதிபதியாகவுள்ளார். தனலக்ஷ்மி, தானிய லக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, ஜெயலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, மகாலக்ஷ்மி என 8 வகையான லக்ஷ்மியாக காட்சி தந்து அருளாசி புரிகிறார். லக்ஷ்மிதேவியை குறித்து அனுஷ்டிக்கும் மிக சிறப்பான விரதம் 'வரலக்ஷ்மி விரதம்'. செல்வம், தானியம், தைரியம், வெற்றி, வீரம், புத்திர பாக்கியம், கல்வி போன்ற செல்வங்களை லக்ஷ்மிதேவி அள்ளிக் கொடுப்பதால், இதை வரம் தரும் விரதம் எனவும் அழைக்கின்றனர்.



திருப்பாற்கடலை கடைந்த போது பூரண கும்பத்துடன் தோன்றியவர் லக்ஷ்மி. இவரது கையில் எப்போதும் பூரண கும்பம் இருக்கும். லக்ஷ்மி, மகா விஷ்ணுவை மணந்தார். ஸ்ரீமன் நாராயணன் பூமியில் அதர்மங்களை அழித்து, தர்மங்களை காப்பதற்காக அவதாரங்கள் எடுத்த போது அவரோடு பல வடிவங்கள் எடுத்தார். சீதாதேவி, பத்மாவதி, துளசி என பல வடிவில் வந்து பூலோகத்தில் நித்ய சுமங்கலியாக காட்சி தரும் ஸ்ரீதேவி, பெண்களுக்கே உரித்தான கருணை உள்ளம் கொண்டவர். பொறுமையே வடிவானவர். செல்வத்துக்கு அதிபதியாக விளங்கும் மகாலக்ஷ்மி, நமக்கு செல்வத்தை வாரி வழங்குகிறார்.

பெண்கள் லக்ஷ்மி விரதம் இருந்தால் அஷ்ட லக்ஷ்மிகளும் மகிழ்வார்கள். இதனால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். தோஷம் உள்ள கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவவும், செல்வங்கள் பெருகவும், கணவருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், குழந்தைகள் நலமுடன் வாழவும், சுமங்கலி பெண்கள் அனுஷ்டிப்பதே வரலக்ஷ்மி நோன்பாகும்.

வரலக்ஷ்மி விரதம் ஆவணி மாதம் வளர்பிறையில் வரும் கடைசி வெள்ளிக்கிழமையில் அனுஷ்டிக்கப்படுகிறது. சில ஆண்டுகளில் இந்த விரதம் ஆடி மாதத்திலும் வரும்.

விரதத்தின் மகிமை

பத்ரச்ரவஸ் என்ற மன்னன், மகாவிஷ்ணுவின் சிறந்த பக்தனாக திகழ்ந்தான். அவனது மனைவி சுரசந்திரிகா. இந்த தம்பதிகளின் மகள் சியாமபாலா. இவளை சக்கரவர்த்தியான மாலாதரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தனர். காலம் கடந்தது. ஒரு சமயம் மகாலக்ஷ்மி தாயார், வயதான சுமங்கலியின் வேடம் தரித்து, சுரசந்திரிகாவின் அரண்மனைக்கு வந்தார். சுரசந்திரிகாவிடம் வரலக்ஷ்மி விரதத்தை விரிவாக கூறி, அதை கடைப்பிடிக்கும் படி கூறினார். மகளை பிரிந்த ஏக்கத்தில் இருந்த சுரசந்திரிகா, லக்ஷ்மி தேவியை யாரோ என்று கருதி விரட்டி விட்டாள்.

அப்படி விரட்டப்பட்ட லக்ஷ்மிசுமி தேவியை, அரசியின் மகள் சியாமபாலா சமாதானப்படுத்தி, அவரிடம் இருந்து வரலக்ஷ்மி விரத முறைகளை விரிவாக கேட்டு உபதேசம் பெற்றாள். பக்தியுடன் விரதத்தை கடைப் பிடித்தாள். விரத மகிமையில் அவள் செல்வச் சிறப்பை அடைந்தாள்.

ஆனால் லக்ஷ்மி தேவியை அவமானப்படுத்திய அவளது பெற்றோர், வறுமையில் வாடத் தொடங்கினர். விபரம் அறிந்த சியாமபாலா ஒரு குடம் நிறைய தங்கத்தை பெற்றோருக்கு அனுப்பி வைத்தாள். ஆனால் அவர்கள் செய்த தீவினையால் அது கரியாகி விட்டது. இதையடுத்து சியாமபாலா, தன் தாயான சுரசந்திரிகாவிடம் வரலக்ஷ்மி விரதத்தைப்பற்றி சொல்லி பூஜை செய்யும்படி கூறினாள். அவளும் மகள் சொன்னபடி வரலக்ஷ்மி விரதத்தை கடைப்பிடித்து பூஜை செய்தாள். அதன் பிறகு இழந்த செல்வங்கள் மீண்டும் கிடைத்தன.

விரதம் இருப்பது எப்படி?

வரலக்ஷ்மி விரதத்தை ஆடி அல்லது ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன் வருகிற வெள்ளிக்கிழமை அன்று செய்ய வேண்டும். பூஜைக்கு முதல் நாளே வீட்டை சுத்தம் செய்து, பூஜை அறையை மெழுகி கோலமிட்டு வெள்ளை அடிக்க வேண்டும். வீட்டில் தென்கிழக்கு மூலையில் ஒரு சிறிய மண்டபம் அமைத்து அதை அலங்கரிக்க வேண்டும். மண்டபத்தில் இரு பக்கங்களிலும் வாழைக்கன்று கட்டி, பூக்களால் தோரணம் கட்ட வேண்டும். அதில் தங்கம், வெள்ளி அல்லது சந்தனத்தால் செய்யப்பட்ட வரலக்ஷ்மியின் படத்தை வைத்து வழிபடலாம். படத்திற்கு மலர்களால் அலங்கரித்து அதை ஒரு பலகையில் வைக்க வேண்டும்.

ஒரு வாழை இலை போட்டு அதில் பச்சரிசியை பரப்ப வேண்டும். அரிசியின் மீது தேங்காய், மாவிலை, எலுமிச்சை, பழங்கள் ஆகிய வற்றை வைத்து, லக்ஷ்மிக்கு மஞ்சள் ஆடை அணிவிக்க வேண்டும். ஒரு கலசத்தை எடுத்து அதன்மேல் முழுத்தேங்காயை வைக்க வேண்டும். கலசத்தை சுற்றி மஞ்சள் நிறக்கயிற்றை இணைத்துக் கட்ட வேண்டும். தேங்காயின் மேல் குங்குமம் இட வேண்டும். அதை அரிசியின் நடுவில் வைக்க வேண்டும்.

முதலில் விநாயகர் பூஜை செய்ய வேண்டும். மலர்களால் அன்னையை அர்ச்சித்து, அஷ்ட லக்ஷ்மிகளுக்கும் விருப்பமான .அருகம் புல்லை இலையின் மீது தூவி பூஜை செய்து தூப தீபங்கள் காட்ட வேண்டும். அன்னம், பாயாசம், பழ வகைகள், நிவேதனம் செய்ய வேண்டும்.



ஆரத்தி தட்டுகளால் பூஜை செய்ய வேண்டும். பின்னர் வரலக்ஷ்மியின் முன் வைத்திருந்த நோன்புச்சரட்டை மஞ்சள் குங்குமம் இட்ட மலர்களோடு சேர்த்து கழுத்தில் கட்டிக் கொள்ள வேண்டும்.

பூஜையின் போது அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம், கனகதாரா ஸ்தோத்திரம், மகாலக்ஷ்மி ஸ்தோத்திரம் ஆகியவற்றை படிக்க வேண்டும். பின் கலசத்தை அரிசி பாத்திரத்திற்குள் வைப்பது விசேஷம்.

சுமங்கலி பெண்கள் இந்த விரதத்தின் போது தாலிக்கயிற்றை வைத்து பூஜை செய்து அதனை அணிந்து கொள்ள வேண்டும். வரலக்ஷ்மி விரதம் கடைப்பிடிப்பதால் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கும். செல்வம் சேரும். கன்னிப் பெண்களுக்கு திருமணம் நிச்சயமாகும். குழந்தைகளுக்கு கல்வி ஞானம் கிட்டும். அம்பிகையின் அருளால் விரும்பிய நலன்கள் அனைத்தும் கிடைத்து வாழ்க்கை வளமாகும்.

# மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரச தலைவர்கள் முன்வர வேண்டும்

## இலங்கையிடம் அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையில் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவும், எல்லா மக்களினதும் மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், உயர்மட்ட அரசாங்கத் தலைவர்களும் முன்வர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.**

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான பிரிவினால், வெளியிடப்பட்டுள்ள, 2015 ஆம் ஆண்டுக்கான அனைத்துலக மத சுதந்திர அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் இந்த அறிக்கை அமெரிக்க காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டது.

18 ஆவது ஆண்டாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில், 200 நாடுகள் மற்றும் பிராந்தியங்களின் மதச் சுதந்திரம் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.


இந்த அறிக்கையில், இலங்கையின் புதிய அரசாங்கத்தினால், மத ஒற்றுமையை முன்னேற்றவும், மதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வரவேற்கப்பட்டுள்ளன.

எனினும், 2014 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொண்ட கடும்போக்கு பௌத்த பிக்குகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய மத சிறுபான்மையினருக்கு எதிரான மேலாதிக்கச் சிந்தனைகளை பொது பலசேனா அமைப்பு, பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வருவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# தாஜுடீன் கொலை; மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினர் விசாரணை நடத்தவில்லை

## 3000 வாகன விபத்துச் சம்பவங்களில் இதுவொன்றே தவிர்க்கப்பட்டுள்ளது



கடந்த நான்கு ஆண்டுகளில் இடம்பெற்ற மூவாயிரம் மோசமான வாகன விபத்துச் சம்பவங்களில், வசிம் தாஜுடீன் சம்பவம் குறித்து மட்டுமே மோட்டார் போக்குவரத்து திணைக்களம் விசாரணை நடத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரையில் இவ்வாறான பாரிய 3000 வாகன விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உயிர் ஆபத்து இடம்பெற்ற வாகன விபத்துக்களின் போது குறித்த வாகனம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் ஒருவரினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என மோட்டார் போக்குவரத்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தாஜுடீன் மரணமடைந்த வாகனம் தொடர்பில் நாரஹேன்பிட்டி பொலிஸார் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின்ரை அழைத்து விசாரணை நடத்தவில்லை.

அதிக வேகமாக தாஜுடீன் வாகனத்தைச் செலுத்தியதனால் வாகனம் மதிலில் மோதி தீப்பற்றிக் கொண்டு, இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்திருந்தனர்.

அதிக வேகமாக வாகனம் செலுத்தப்பட்டமை குறித்து பொலிஸார் தீர்மானிக்க முடியாது எனவும், மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் ஒருவரினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் புலனாய்வுப்பிரிவினர் நடத்திய விசாரணைகளின் போது கோரப்பட்டது.

விசாரணைகளை மூடி மறைக்கும் நோக்கில் போலியான முறையில் வாகன விபத்து இடம்பெற்றதாக வேண்டுமென்றே பொலிஸ் உத்தியோகத்தர்கள் அறிக்கை தயாரித்துள்ளமை தெரிய வந்துள்ளது.

உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் இவ்வாறு அறிக்கை தயாரித்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# காணாமற்போனோர் பணியகத்துக்கு எதிராக மனுத்தாக்கல் செய்ய நாம் தவறிவிட்டோம்

## உதய கம்மன்பில புலம்பல்



(கொழும்பு)

காணாமர்போனோர் பணியகத்தை அமைக்கும் சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யத் தவறி விட்டதாக, மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணி ஒப்புக்கொண்டுள்ளது.

காணாமற் போனோர் தொடர்பான பணியகத்தை உருவாக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, இந்தச் சட்டமூலம் தொடர்பான கருத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் கேட்க வேண்டும் என்று கோரினார்.

"காணாமற்போனோர் பணியகம் அரசியலமைப்புக்கு முரணான ஒரு மரணப் பொறி. இந்த சட்ட மூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய நாம் தவறிவிட்டோம்.

மதிப்புக்கூட்டு வரி திருத்தச்சட்டத்துக்கு எதிராக தாக்கல் செய்தது போன்ற மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

நாம் தவறு செய்து விட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## எண்ணம்போல் வாழ்வு

என் நண்பர் ஒருவர், "என்னிடம் இந்த உலகத்தில் அன்புகாட்ட எவருமே இல்லை" என்றதோடு, காரணம் நான் இல்லாதவன் என்றும் சொன்னார்.

"நீங்கள் சொல்வதை ஏற்க முடியவில்லை. வாயில்லாத உயிரினங்களிடமும் தெருப் பிச்சைக்காரர்களிடமும் கூட அன்பு காட்டுகிறவர்கள் இருக்கிறார்கள். எனவே இல்லாமை என்பது ஒரு காரணமல்ல. எல்லோரும் வெறுக்கிறார்கள் என்றால் கோளாறு அவர்களிடத்திலில்லை. உங்களிடத்தில்தான்" இது நான் நீங்கள் பழகும் விதத்தில், உங்கள் பார்வையில் என்று கோளாறு என்று சிந்தியுங்கள். அதை அப்புறப் படுத்துங்கள். எல்லோரும் உங்களை விரும்பத் தொடங்கிவிடுவார்கள் என்றேன்.

ஒரு மனிதரை இரண்டு பேர் விமரிசிக்கும் போது, ஒருவர், அவரைப் போல் உண்டா என்பார். இரண்டாமவரோ அது மனுஷ ஜென்மமே இல்லை என்பார். ஏனிந்த 100 சத விகித முரண்பாடு? வேறு ஒன்றும் இல்லை. பார்வையிலும் அணுகுமுறையிலும் கோளாறு அவ்வளவே!

ஒருவர் இலட்சக்கணக்கில் வைத்திருந்தும் நிம்மதியே இல்லை என்கிறார். மாதச் சம்பளத்தை எதிர்பார்த்து வாழும் ஒருவரோ, "எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை" என்கிறார். காரணம் என்ன? மனப்பக்குவங்கள், எண்ணங்கள்.

கோபமடைபவர்களும் பொறாமை எண்ணம் கொண்டவர்களும் நிம்மதியுடன் வாழ்வதில்லை.

கோழைத்தனமான எண்ணங்களைக் கொண்டவர்கள் தினம் தினம் செத்துப் பிழைக்கிறார்கள். நிம்மதியாக வாழ்வதில்லை.

தகுதிக்கு மீறிக் கணக்குப் போடுபவர்களும் மனக்கோட்டை கட்டுபவர்களும் எங்கே நிம்மதி என்று கேட்கிறார்கள்.

அதற்காக நல்ல எண்ணம் படைத்தவர்களுக்கு வசதியான வாழ்வும் தீயமனம் படைத்தவர்களுக்கு வறுமை வாழ்வும் உறுதி என்று அர்த்தமில்லை.

ஒரு தாய்க்குப் பிறந்த இரு மகள்மார்களுக்குள் ஒருத்தி உயர்ந்த குடும்பத்தில் வாழ்க்கைப்படுகிறாள். அடுத்தவளோ ஒரு சராசரிக் குடும்பத்தில் வாழ்க்கைப்படுகிறாள் என்று வைத்துக் கொள்வோம். உண்மையில் சின்னவள் தான் நல்லவள், பெரியவள் பொல்லாதவள் என்றால், நல்ல மனம்படைத்த இளையவளுக்கு ஏன் சராசரி வாழ்க்கை அமைந்தது? எண்ணம்போல் வாழ்வு என்பது இங்கே அடிபட்டுப் போகிறதே என்று சிலர் வாதிடலாம்.

ஆனால் ஒன்று, சூழ்நிலைகள் காரணமாக அமைந்து விட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை, இருக்கின்ற நிலையை விடக் கெடுத்துக் கொள்ளாமல் , மாறாக உயர்த்திக் கொள்ள வேண்டுமானால் அதற்கு நல்ல எண்ணம் போதும். இது இருந்தால் இளையவள் மூத்தவளைக் காட்டிலும் மகிழ்ச்சியுடன் வாழ முடியும். நாளடைவில் உயர முடியும். நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கையைச் சிறப்பாக அமைப்பதும் , எல்லோரும் நம்மை விரும்பும்படி நடப்பதும், அதன் மூலம் வாழ்வு இனிமையாகத் தெரிவதும் நம் கையில் தான் இருக்கின்றன.

பாரதத்தில் ஒரு கதையுண்டு. துரியோதனன் கண்ணிற்கு நல்லவர்களே தென்படவில்லையாம். தருமனின் கண்ணுகுத் தீயவர்களே தென்படவில்லையாம். இதன் அடிப்படை உண்மையை உணர முடிந்தால் அதுவே போதும்!

**லேனா தமிழ்வாணன்**

## தமிழ் மொழியும் இலக்கியமும் விடைகள் தொடர்ச்சி..

(அ) பொருத்தமான தலைப்பு : ஒற்றுமையும் நாட்டின் அபிவிருத்தியும்/
நாட்டின் அபிவிருத்திக்கு ஒற்றுமையின் அவசியம்
(இவை போன்ற பொருத்தமான தலைப்புகள்)
முகவுரை :
தொடருரை : • ஒற்றுமையின்மை நாட்டின் அபிவிருத்தியைப் பாதித்தல்.
• ஒற்றுமை நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் முறை
முடிவுரை : தொகுத்துக் கூறல். சொந்தக் கருத்துக்களை முன்வைத்தல்.

(ஆ) ◆ மேடைப்பேச்சு தலைப்புகள்
- தொற்றுநோய்களும் தொற்றா நோய்களும்
- நோய் வருமுன் காப்போம்
- மனித நடத்தைகளும் நோய்களும்
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

(இவை போன்ற பொருத்தமான தலைப்புகள்

◆ சொற்பொழிவு வடிவத்தில் அமைந்திருத்தல்
- சபையோரை விளித்தல்
- இடையிடையே சபையோரை முன்னிலைப்படுத்தல்
- தர்க்க ரீதியாகவும் ஒழுங்காகவும் கருத்துக்களை முன்வைத்தல்
- தொகுத்துரைத்து நிறைவு செய்தல்
- மேடைப்பேச்சுக்குரிய அமைப்பு பேணப்படல்

◆ நோய்கள் பற்றிய அறிமுகம்
தொற்றுநோய்கள் - டெங்கு. வாந்திபேதி. அம்மை. கண்நோய்கள்
தொற்றா நோய்கள் - இருதயநோய். புற்றுநோய். நீரிழிவு. சிறுநீரக நோய். இரத்த அழுத்தம். தைரொய்ட்
தடுக்கும் முறைகள்
- ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்கள்
- தீய பழக்கவழக்கங்களிலிருந்து விலகுதல்
உ-ம் : மதுபானம். புகைபிடித்தல். போதைவஸ்து
- உடற்பயிற்சி. நாளாந்த செயற்பாடுகளைச் சீராக்கிக் கொள்ளுதல்.

◆ முடிவுரை - தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(இ) தலைப்பு : இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்/ சிறுவர் நலன் பேணுவோம்.
(இவைபோன்ற பொருத்தமான தலைப்புகள்)
உரையாடல் அமைப்பு : • உரையாடலுக்குரிய அமைப்பு பேணல்.
• கருத்துக்களின் தொடர்ச்சி பேணப்படுதல்.
• பேச்சுமொழியும் இடம்பெறலாம்.
• தலைப்புடன் பொருந்துதல்.
உரையாடலில் இடம்பெற வேண்டியவை :
சிறுவர்களின் முக்கியத்துவம்/சிறுவர் உரிமைகள்
- உரிமைகள். பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம்
- துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டு சிறந்த உடல். உள மனவெழுச்சியுடன் கூடிய சிறுவர்கலை உருவாக்குவதன் அவசியம்.
- நாளைய சமுதாயம் நற்பண்புகள் மிக்கதாக விளங்க செய்ய வேண்டியவை

(ஈ) சிறுகதை
தலைப்பு : அக்கரைப்பச்சை/தூரத்துப் பச்சை
(கதைப் போக்கிற்கேற்ப பொருத்தமான தலைப்புகள்)
• சிறுகதை அமைப்பு பேணப்படல்
- வழங்கப்பட்ட குறிப்புகளுக்கமைய எழுதப்படல்
- கதைக்கருவை சுவைபட நகர்த்திச் செல்லல்

வினா இல. 03.
சுருக்கத்தில் இடம்பெறவேண்டிய முக்கிய கருத்துகள் -
- ஒவ்வொருவரும் தத்தமது கொள்கைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப சமூகத்தோடு இணைந்து வாழ்கின்றனர். இந்த வகையில் மூவகைப்பட்டவர்களைக் காணலாம்.
- இவர்களுள் முதலாமவன் தன்னைப் பற்றி மட்டும் சிந்திப்பவன்.
- இவனைவிட மேலானவன் ஒருவன் உளன். அவன் துறவி எனப்படுவான். கேடுகளில் இருந்து தப்பித்துக்கொள்ள உலகைத் துறக்கிறான்.
- இவனை விட மேலானவனாகக் கருதப்படுபவன் சீர்திருத்தவாதியாவான். இவன் சமூகக் குறைபாடுகளை நீக்க எண்ணுபவன். இதற்காக போதித்தல். வேலைத்திட்டங்களை அமுல் படுத்தல். பலருடன் சேர்ந்து சமூக சீர்திருத்தங்களில் ஈடுபடுதல் போன்வற்றில் ஈடுபடுகிறான்.

முக்கிய குறிப்புக்கள்
- சொல்லளவு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.
- சொந்த மொழிநடை
- ஒரு பந்தியில் எழுதப்படல்
- தேவையற்ற விடயங்களை நீக்கி எழுதுதல்.

வினா இல. 03 : சுருக்கம்சுருக்கத்தில் இடம்பெறவேண்டிய முக்கிய கருத்துகள் -
- ஒவ்வொருவரும் தத்தமது கொள்கைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப சமூகத்தோடு இணைந்து வாழ்கின்றனர். இந்த வகையில் மூவகைப்பட்டவர்களைக் காணலாம்.
- இவர்களுள் முதலாமவன் தன்னைப் பற்றி மட்டும் சிந்திப்பவன்.
- இவனைவிட மேலானவன் ஒருவன் உளன்; அவன் துறவி எனப்படுவான்; கேடுகளில் இருந்து தப்பித்துக்கொள்ள உலகைத் துறக்கிறான்.
- இவனை விட மேலானவனாகக் கருதப்படுபவன் சீர்திருத்தவாதியாவான். இவன் சமூகக் குறைபாடுகளை நீக்க எண்ணுபவன். இதற்காக போதித்தல். வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல். பலருடன் சேர்ந்து சமூக சீர்திருத்தங்களில் ஈடுபடுதல் போன்வற்றில் ஈடுபடுகிறான்.

முக்கிய குறிப்பு
- சொல்லளவு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.
- சொந்த மொழிநடை
- ஒரு பந்தியில் எழுதப்படல்
- தேவையற்ற விடயங்களை நீக்கி எழுதுவதல்.

வினா இல. 04
(i) அழகை ஒரு பெண்ணாக உருவகித்துக் காட்டியுள்ளார்.
(ii) உழவனின் தோற்றப் பொலிவு
அவனது மகிழ்ச்சியான/பூரிப்பான உள்ளம்
காலைப் பொழுது உழவனிடம் காணும் சுறுசுறுப்பு என்பவற்றை கவிஞர் உழவனிடத்தில் காண்பதாகக் கூறுகின்றார்.
(iii) சிறு குழந்தை விழியினில். திருவிளக்கில். மலர் தொடுப்பாளின் விரல் வளைவில். உழவனின் புதுநடையில். வயலில்
(iv) மங்கையொருத்தி (மாலை ஒன்றைத் தொடுப்பதற்காக) மலர்களைத் தன் கைகளில் எடுத்து அவற்றை நாரினில் தொடுத்துச் சேர்க்கும் நிலையில். அவளது விரல்களின் அசைவிலுள்ள நளினங்களில் அழகு என்பவள் ஒரு நாடகத்தையே நடத்தி முடிக்கின்றாள்.
(v) • விளைந்த நன்செய் நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள்.
• என் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

வினா இல. 05
கடிதம்
அமைப்பு

- அனுப்புபவர் முகவரி
- விளிப்பு
- உள்ளடக்கம்
- ஒப்பம்
- உள்முகவரி (பெறுநர்)
- தலைப்பு
- முடிப்பு

உள்ளடக்கம்
- நிறுவனத்தின் கற்கைநெறி தொடர்பாக அறிந்த விதம்
- பயில விரும்பும் கற்கைநெறி
- பயில எடுக்கும் காலம்
- கட்டண விபரங்கள்

இவை தொடர்பான விபரங்களைக் கேட்டு எழுதுதல்

அல்லது

விளம்பரத்தின் அமைப்பு பேணப்படல் -உள்ளடக்கம் -
- புதிதாக தயாரிக்கப்பட்ட பால்மா பற்றிய விபரம்
- விற்பனையை அதிகரிப்பதற்கான உத்திகள்
- உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர்

### தமிழ் மொழியும் இலக்கியமும் III

வினா இல. 01
1. சுருக்கமான விடை எழுதுக.
(i) சொல்லில் பயனுடைய சொல்லுக; சொல்லில் பயனிலாச் சொல் சொல்லற்க.
(ii) (அ) பிறர்க்கிடு பள்ளம் தனக்கிடு பள்ளம்.
(ஆ) யானை தன் தலையில் மண்ணள்ளிப் போடுதல்.
(iii) (அ) பெருவுடையார் ஆலயம் - இராஜராஜ சோழன்/அருண்மொழித் தேவர்
(ஆ) கங்கை கொண்ட சோழீசர் கற்கோயில்-இராஜேந்திர சோழன்
(iv) வறியவனாகப் படைத்தமைக்காக நிந்திக்கிறார்.
(v) (அ) ஶ்ரீமான் சோமசுந்தரம்/ரோஹினியின் தந்தை
(ஆ) குழந்தையின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது ஏங்கி நின்றார்.
(vi) (அ) ப்ரஸ்தானம் :- பயணம் போவதற்கு எடுத்த பொருளை சுபநேரம் பார்த்து வெளியில் வைத்தல்.
(ஆ) ஷேமதண்டுலம் :- பாதுகாப்புக்காக கொண்டு செல்லும் மங்கல அரிசி
(vii) (அ) ஒட்டக்கூத்தரால்
(ஆ) கம்பருக்கு
(viii) கண்ணன் அர்ஜுனனுக்கு செய்த கீதோபதேசத்துக்கு ஒப்பிடப்படுகின்றது.
(ix) (அ) சுருள் அளகக்காடு - உருவகம்
(ஆ) கயற்கண்ணி - உவமை
(x) (அ) கொடை/கொடைச்சிறப்பு
(ஆ) தன்னலம் கருதாதவன்/தியாகி/தியாக உணர்வுள்ளவன்

வினா இல. 02
02. (அ) பொருள் :வலிய யானையின் மேல் பட்டு ஊடுருவும் அம்பானது மெல்லிய பஞ்சில் பாயாது. நெடிய இரும்புப் பாரைக்கு பிளவாத கருங்கற்பாறை பச்சை மரத்தின் வேருக்கு பிளந்து போகும். அதுபோல வன்சொற்கள் இனிய சொற்களை வெல்லமாட்டா.
சிறப்பு :
வன்சொற்களால் சாதிக்க முடியாததை இன்சொற்களால் சாதிக்கலாம் என்பது உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது.
(ஆ) பொருள் :
ஆராய்ந்து எடுக்கப்பட்ட மணிகள் பதிக்கப்பட்ட அணிகலன்களையும். தளிரோடு ஒழுங்குபெற தொடுக்கப்பட்ட பூமாலையையும் அணிந்தவனான சேரன் உலா வரும்போது அவனைக் காண வீதிக் கதவை அடைத்தேன். நாணம் வந்து தடுக்கவே திரும்பிவிட்டேன். சீரும் சிறப்பும் பெருஞ்செல்வமும் படைத்த ஒருவர். காலம் செய்த சதியின் காரணமாக வறியவராக பெருஞ்செல்வந்தரிடம் உதவி கேட்கச் செல்லும்போது எப்படி வறுமை தூண்டச் சென்று. பின் நாணம் ஏற்படவே திரும்பி ஒரு முடிவுக்கும் வராது அலைவாரோ அதுபோல என் நெஞ்சமானது. கதவ்வ அடைந்ததும் நாணத்தால் திரும்பி. பின் காதல் தூண்டச் சென்று பின் நாணத்தால் திரும்புதலாகி தடுமாறிக் கொண்டிருக்கின்றது.
சிறப்பு :
காதல் வசப்பட்ட தலைவியின் மனநிலை உவமையணியினூடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
(இ) பொருள் :
பாரதியாரின் கவிச்சிறப்பை ஒரு சிறு கட்டுரையிலே விளக்கிக் காட்ட முடியாது. இயற்கையின் அழகு. பசுமை. இனிமை யாவற்றையும் இணைத்து நமக்கு அளித்துள்ளார். முத்து போன்ற வெண்ணிலா. ஒரு சில தென்னை மரங்கள் கீற்று. இளநீர். குயில் ஓசை என்பவற்றோடு. பாட்டோடு இணைந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் பராசக்தியின் காவலும் இருந்தால் தன் பாட்டுத்திறத்தால் இவ்வுலகத்தையே அருள்பாலிக்கலாம் என்ற கருத்தில் "காணி நிலம் வேண்டும்" என்று தொடங்கும் ஒரு பாடலை எழுதியுள்ளார். மனநிறைவு என்னும் கருத்துப் பற்றி பிறமொழியாளர் எழுதிய பாடல் எதுவும் இப்பாடலுக்கு ஈடாக மாட்டாது.
சிறப்பு :
பாரதியாரின் கவிச்சிறப்பு கூறப்பட்டுள்ளது. பாரதியாரின் கவிதையின் ஆழத்தை சிறிய வியாசத்தினுள் எழுதிவிட முடியாது எனக் கூறுவதிலிருந்து அவருடைய கவிதையின் சிறப்பு கூறப்பட்டிருக்கின்றது.
(ஈ) பொருள் :
இத்தகைய செல்வம் நிறைந்த அறிவில்லாதார் நிலத்துக்குப் பாரமாகவும். உலகத்திற்கு உற்ற பழியாகவும் அமைந்திருப்பதால். அவர்கள் இறந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை கொடுப்பதாகும். அறிவற்ற செல்வரை உலகம் பழிக்கும். அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டு உலகம் சந்தோசப்படும். அறிவுடைய செல்வன் தன் பொருளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி. இப்பிறப்பில் புகழும் மறுபிறப்பில் இன்பமும் அடைவான். அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியா மூடனாய் இப்பிறப்பில் பழியும். மறுபிறப்பில் துன்பமும் அடைவான்.
சிறப்பு :
அறிவுடைய செல்வர்களின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. அவர்கள் செல்வத்தை முறையான பயனுள்ள செயல்களுக்குப் பயன்படுத்தி. இருமையிலும் சிறப்பு பெறுவர்.

வினா இல. 03
03. (அ) கடற்றொழில் நிமித்தம் மீனவன் ஒருவன் ஆழ்கடலில் செல்கின்றான். செல்கின்றபோதும் கரையில் தன் வரவுக்காக எதிர்பார்த்திருக்கும் மனைவி. பிள்ளையின் நினைப்பு அவன் மனதில் அவனோடு தொடர்ந்து செல்கின்றது. இதனைக் கவிஞர் குறியீட்டு வடிவில் இப்பாடலடிகள் மூலம் விளக்கி நிற்கின்றார்.
ஆழ்கடலில் ஆடுகின்ற தோணி - மீனவனின் மனம்
தாழம்பூ வாசம் - மனைவி பிள்ளைகளைக் குறிப்பதாக உள்ளது.
தரைக்காற்று சுமந்து வரும் - மீனவனின் நினைப்பு
(ஆ) • தாழைமர வேலியே அவர்களது குடிசை எல்லை.
• இருப்பிடம் சிறுகுடிசை
• அதற்குள் தூங்கும் சிறுகுழந்தை - (இளங்குடும்பம்)
• அந்தச் சிறுகுடிசைக்குள் வாழும் அவர்களுக்கு. தோணியுடையான் கொடுக்கும் பிச்சையாக இரண்டு பிடிச்சோறு.
• இத்தகைய நிலையில் கோணல் நினைப்புடன் வாழும் அவர்களது வறுமை வாழ்க்கை.
• வாழ்வில் இருள் தொடரும் நிலை
(இ) இரவுப்பொழுது
• தரைக்காற்று பெருங்காற்றாக வீசும். அந்த இரவுப் பொழுது. வீசும் பெருங்காற்றோடு கும்மிருட்டாகக் காட்டப்படுகின்றது.
• குலை நடுக்கத்தைத் தரும் கடற்பெருக்கு.
பெண்ணின் மனநிலை
• விண்ணே தொடரும் விரிந்த கடலின் பின்னாடி விழிகள் தொடர தன்கணவனைத் தொழிலுக்காக அனுப்பிய மனைவி. கணவனது வருகைக்காகக் காத்திருக்கின்றாள்.
• கல்லுவைத்த கோயிலெல்லாம் கைகூப்பி வரம் இருப்பதாக மனைவி கணவனுக்காக ஏங்குகின்ற மனநிலை கொண்டவளாகக் காட்டப்படுகின்றாள்.

அல்லது

அ. வேண்டுதல் :
இறைவனை வேண்டும் முறைகள்
- தந்தையின் பெருமையைக் காட்டி
- தன் குலப்பெருமையைக் காட்டி
- தன் ஒழுக்க நிலையின் உண்மையைக்காட்டி
- மனதில் கொண்டவனுக்கே மாலையிட வேண்டுதல்.

மதிநுட்பம் :
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் இடையிலான வேறுபாட்டைக் காணும் முறைகள்
ஆ. சுயம்வர மண்டபத்தில் இருந்தோரின் மன நிலைகள் :
- தேவர்கள் - வெட்கி மனம் சுழித்தல். செந்தாமரை முகம் வெண்டாமரையாக வெளிறல்.
- மண்ணரசர் - மனங்களில் வன்மாலை சூடல் - மயக்கமடைதல்
- மக்கள் - உளம் களிகூரல்

வினா இல. 04
4. கல்வியே அழியாச் செல்வம்
(அ) • ஒரு திங்கள் இரண்டு திங்களிற் கிழிந்து போகும் சீமைத் துணியாகவும் சிறிது கைதவறினாலும் கீழ் விழுந்து நொருங்கிப்போகும் மட்பாண்டங்களாகவும் கல்வி தவிர்ந்த ஏனைய செல்வங்களை ஆசிரியர் உருவகித்துக் காட்டியுள்ளார்.
• பன்னிரண்டு பதினைந்து திங்கள் கிழியாமல் வலுவாய் உள்ள நாட்டுப் புடைவைகளாகவும் கீழே தவறி விழுந்தாலும் உடையாமல் வலுவாய் உள்ள செப்புக் கலங்கள். பித்தளைகளாகவும் அழியாச் செல்வமாகிய கல்வியை உருவகித்துக் காட்டியுள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

15ஆம் பக்கம் தொடர்ச்சி...

(ஆ) • சிறிது நேரமாயினும் நம்மைப் படைத்த இறைவனை நினைப்பவர்கள்.
• ஏனைய உயிர்களின் நன்மையைக் கருதுபவர்கள்.
• பசியாலும் நோயாலும் வருந்துபவர்க்கு உதவி செய்பவர்கள்.
• அறிவுடையோரால் செய்யப்பட்ட நூல்களை ஓதி உணர்பவர்கள்.
இத்தகைய ஆண், பெண் பாலாரை இன்று காண்பது அரிதினும் அரிதாகப் போய்விட்டதே என ஆசிரியர் மனம் வருந்தி நிற்கின்றார்.

(இ) • இறை சிந்தனையோடிருத்தல்.
• பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்தல்.
• நல் முயற்சிகளில் ஈடுபடுதல்.
• எல்லாம் தனக்கே என்று எண்ணாமல் இருத்தல்.
• தேடிய செல்வத்தைத் தனக்கும் பிறருக்கும் பல வகையால் நல்ல பயன்கள் விளையும்படி அதனைப் பயன்படுத்துதல்.
• சொல்லிலும் செயலிலும் பணிவுடைமை; இன்சொல் பேசுதல்.

அல்லது

நட்சத்திரக் குழந்தைகள்

(அ) • குழந்தைகளின் மனங்களில் உண்மையின் சிறப்பை ஊட்டி வைத்தல். - இவ்வாறு நல்ல விழுமியங்களை ஊட்டுதல் குழந்தைப் பருவத்தில் இலகுவானது என ஆசிரியர் கருதுகின்றார்.
• பொய் பேசுவதால் ஏற்பட இருக்கும் தீமைகள், கெடுதல்கள் பற்றி அறிய வைத்தல்.
• குழந்தை உள்ளங்களில் நல்லவற்றையே பதிவு செய்தல்.
• நலமான மனித சமூகத்தை உருவாக்குதல். - (எண்ணங்களால், செயல்களால்)
• இயற்கை நிகழ்வுகளும் உண்மைத் தன்மைகளை விளக்கி நிகழ்கின்றன என்பதை குழந்தைகள் அறிய வைத்தல்.

(ஆ) • பெற்றோரிடத்தில் உள்ள பாசப்பிணைப்பைக் காட்டுதல்.
• எதனையும் கண்டறிவதில் ஆர்வம் காட்டுதல்.
• உண்மைத்தன்மை கொண்டவள்.
• இடங்களுக்கேற்ப செயற்பாடுகளில் மாற்றம், ஆர்வம் காட்டுதல்.
• இயற்கை நிகழ்வுகளைக் கண்டு இரசிப்பதில் ஆர்வம்.
• வெளிப்பாட்டுத்திறன் கொண்டவள்.

இ) • நட்சத்திரம் ஒன்று வானத்திலிருந்து விழுவதால் மனம் துக்கமடைதல் - காரணம். யாரோ பொய் பேசிவிட்டார்கள் என்ற ஏக்கம் கொள்ளுதல்.
• பொய் பேச முற்பட்டால் துன்பம் நேரும் என்பதை அறிந்து கொள்ளல்.

வினா இல. 05

05. • இரு பாடல்களிலும் காட்டப்படும் பெண்கள் தலைவனைப் பிரிந்து தனிமையில் வாடுபவர்கள்.
• ஆழிவாய்ச் சத்தம்...... எனும் பாடலில் வரும் பெண் இரவின் கொடுமையைப் போக்க விரைவாகச் சூரியன் வராதோ என ஏங்குகின்றாள்.
• மண்ணெல்லாம் உய்ய... எனும் பாடலில் வரும் பெண் குளிர்மையான இரவில் கூட சந்திரன் வேகமாக வருகை தந்து தன்னைக் காய்வதாக வருந்துகின்றாள்.
• இரவை அகற்றிப் பகலைச் செய்யும் சூரியனும், இரவின் பொழுதை பிரகாசமாக வைத்திருக்கும் சந்திரனும் உயிர்களுக்கு நன்மை செய்யினும் இங்கு இரு பெண்களையும் இவ்விரண்டும் வருத்துவதாகச் சித்திரிக்கப்படுகின்றது.
• சூரியனது காலை வரவின் தாமதமும், சந்திரனின் விரைவான வருகையும் இவ்விரு பெண்களது காதல் உள்ளத்தை வருத்துவனவாக அமைந்துள்ளன.

வினா இல. 06

06. (அ) • "சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனோ?" என்ற கூற்றில் கருணாகரனை சிங்கமாகச் சிறப்பித்துக் கூறல்.
• "சக்கரக் கோட்டத்திலே விஜயதரபூபதிக்காக என் தந்தை செய்த போரிலே போர்க்களம் முழுவதும் கறங்கு போல் திரிந்து பகைவர் யானை சேனையெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப் பூவென்ன நூறி எறிந்து வாகை சூடியவன் கருணாகரனேயன்றோ".
• "அவனுடைய நடை மேகத்தின் கதிபோல இருக்கும்."
• "அவன் வரும்போது ஒரு தேவன் நடந்து வருவதுபோல இருக்கும்"
கருணாகரன் கொலையுண்ட பின்னர்
• "கருணா! உன்னை என் உயிர் எனவே நினைத்திருந்தேனே"
என்றவாறெல்லாம் மங்கையர்க்கரசியின் வாய்மொழியாக வரும் கூற்றுக்கள் அமைந்துள்ளன.

குறிப்பு : இக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டும் விளக்கப்படலாம்.

(ஆ) • "மங்கையர்க்கரசி பலவாறு பிரலாபித்துக்கொண்டு உயிரற்றுக்கிடக்கும் கருணாகரன் உடல் மீது விழுந்தாள்...... எழுந்தாள்.........

தோற்றம் :
• "அவள் உருவமே மாறுபட்டுப் போய்விட்டது. அவள் ரௌத்திராகாரமாக விளங்குகிறாள்.
• அந்த நள்ளிருளில் அவள் கண்கள் தழல்விட்டு எரிகின்றன.
• காளியே மனித உரு எடுத்தாற்போல நிற்கின்றாள்.
• மார்த்தாண்டன் நாகத்தைக் கண்ட பறவைபோல அவன் இருந்த இடத்தை விட்டு அசையவே இல்லை.

தவிப்பு :
• தனிமையில் நின்று காளியை வேண்டுதல்.
• கருணாகரனை அழைப்பதுபோல அரற்றுதல்.
• கருணாகரனை வஞ்சித்த மார்த்தாண்டனைப் பழிவாங்கியதைத் தன் கடமை எனக் கூறுதல்.
• மங்கையர்க்கரசி தன்னுயிரை மாய்த்தல்.

வினா இல. 07

07.

விமலன்
• தந்தையின் தோற்றப்பொலிவை, திறமைகளை, செயற்பாடுகளை நினைத்துப் பெருமிதமடைதல்.
• தந்தையிடம் கதைகள் கேட்டு ரசிப்பதில் ஆர்வம் காட்டுதல்.
• பெரிய இடத்துப் பிள்ளையாக வளர்வதென்ற எண்ணம் கொண்டவன்.

தர்மலிங்கம்
• மகனிடத்தில் மிக்க விருப்பத்திற்குரிய தந்தை.
• தனது மகனை பெரிய இடத்துப் பிள்ளையாக வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவார்.
• தொழில் விசுவாசம் மிக்க தன்மையை வைத்தியசாலையிலும், பெரிய டொக்டரின் வீட்டும் காட்டிநிற்பவர்.
• உண்மையை நிலைநாட்ட வேண்டுமென எண்ணுபவர்.
• தேவையான விடயங்களில் நியாயப்படி நடக்க எண்ணுபவர்.

தங்கம்மா
• தாய் என்ற நிலையிலும், மனைவி என்ற தானத்திலும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து கடமையாற்றுபவர்.
• சமூகத்தாரின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் தன் கணவனை தன் உள்ளத்தில் மேலான நிலையில் வைத்திருப்பவள்.

பெரிய டொக்டர் (பரஞ்சோதி)
• நோயாளிகளைக் கவனிப்பதிலும் பூமரங்களைப் பராமரிப்பதிலும் அதிக அக்கறை காட்டுபவர்.
• அதிகாரத் தன்மை மிக்க செயல்களில் ஈடுபடுபவர்.
• உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை வெளியிடுபவர்.

பெரிய டொக்டர் மனைவி
• பிறரது ஏற்றம் கண்டு பொறுக்க முடியாதவள்.
• அகத்தில் தான் கொள்ளும் கோணல் நினைப்புக்களை முகத்தில் வெளிப்படையாகக் காட்டி நிற்பவள்.
• பிறர் மீது சந்தேகம் கொள்பவள். ◆ ◆ ◆

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## English Part I

Test 1

*Complete the following dialogues. Select the most suitable word from the box. The first one is done for you.*

1. Ruwan - Tomorrow is a holiday.
Saman - Shall we go to the (1) ....k..... to watch the latest (2).....c....?
2. Malik - Did you write the letter?
Sara - Yes. Could you please get me four (3)......... when you go to the (4).........?
3. Mala - I'm hungry.
Saroja - OK. Let's go to a (5)......... for some (6)......... .
4. Dasuni - Have you finished reading the novels?
Sithumi - Yes, I'm going to the (7)........ to return the (8)........ this afternoon.
5. Husband - What else do you need?
Wife - Please stop at the (9)......... to buy some fruits and (10) .......... .
6. Daughter - The course fee is Rs. 10,000.00
Mother - Oh, then I have to go to the (11)........ to withdraw some (12)........

*a. post office*
*b. money*
*c. ~~movie~~*
*d. books*
*e. fair*
*f. restaurant*
*g. stamps*
*h. library*
*i. sandwiches*
*j. vegetables*
*k. ~~cinema~~*
*l. bank*

Test 2


Himali and her brother wanted to buy a gift for their grandmother. They went to the nearest 'ATM' to get some money. The following instructions had been displayed at the machine to help the customers. Put them in the correct order by writing the correct number in the boxes. The first one is done for you.

(a) Now collect the money from the machine. ☐
(b) Finally take your card back. ☐
(c) First insert your 'ATM' card to the teller machine. [1]
(d) Once the language is selected enter the 'PIN' code correctly. ☐
(e) After inserting the card, select the language. ☐
(f) Next enter the amount you want. ☐


Test 3


Write a sentence about each picture. Use appropriate verbs from the list given below. Follow the example given.


finish, drive, play, walk, eat, ride, cut, climb, sweep


1. 

Mr. Abdul is going to drive the car.

2. 


3. 


4. 


5. 


6. 


Test 4

Read the following advertisement and complete the dialogue given below.

**Oasis Sports Centre**
*We are now open at Nugegoda*
*with more facilities*

**Bookings & cancellations:**
Both members as well as non members can book many activities,
**at least six days in advance.**
Prior notice of 48 hours is required for cancellations without payment.

**Membership**

| | |
|---|---|
| Junior membership (6 - 18 years) | Rs. 2500.00 |
| Senior membership (19 years onwards) | Rs. 3500.00 |

**Lockers**
*Lockers are available to keep your possessions.*
*Rs. 500.00 refundable.*

**Facilities**
• *Gymnasium.* • *Tennis Court.*
• *Badminton Room.* • *Swimming pool.*
• *Table Tennis Room* • *Café.*

Malith : Hello Ravin, are you going for sports practice?
Ravin : Yes, I am on my way to the Oasis Sports Centre.
Malith : Where is it?
Ravin : It's at (1)..............................
Malith : Can I also join you? How much is the membership?
Ravin : Well, as you are sixteen years old you have to get the (2)..................... membership. It's only 2500 rupees.
Malith : Should I be a member to practice the games?
Ravin : No, even (3)...................... can play if they book (4)..............................days earlier.
Malith : How about our belongings during practice?
Ravin : You can safely keep them in a (5)......................... .
Malith : Thanks a lot for all the information. I'll join you soon.
Ravin : You are welcome.

Test 5

Read the paragraph on "My brother". Write a similar paragraph about "My sister". Use all the information given in the box.

| | My brother | My sister |
|---|---|---|
| Name | Bimsara (Bindu) | Sumudu (Sudu) |
| Age | 18 years | 15 years |
| Appearance | curly hair and brown eyes | long hair and black eyes |
| Clothes | jeans, T-shirts, shorts | skirts, blouses, frocks |
| Interests | pop music, singing, playing, cricket | classical music, dancing, playing Netball |

My brother

My brother is Bimsara and I call him 'Bindu'. He is eighteen years old. He has curly hair and brown eyes. He usually wears jeans and T-shirts as well as shorts. He likes pop music, singing and playing cricket.

(Tomorrow will be Published)

# மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழரின் தன்மானச் சின்னம்



எதிரிகளின் கோட்டைக்குள் வசித்துக்கொண்டே எதிர்ப்புப் போராட்டம் நடத்திய ஏந்தல் குமார் பொன்னம்பலம் அமரராகிவிட்டார். நம் கண்களின் முன்னாலேயே தமிழர்களின் தன்மான உணர்வுக்கு தனித்துவமான சின்னமாக, உதாரண புருஷராக அவர் விளங்கினார். தனது கம்பீர மான கருத்துக்களையும், அவற்றினுள் அசைக்க முடி யாத தார்மீக பலத்தையுமே தனது பலமாகக் கருதியவர் அவர். அந்த நம்பிக்கை காரணமாகவே தனக்கெனத் தனியான பாதுகாப்பையோ பரிவாரக் கூட்டங்களையோ அவர் தேடவில்லை. சில அரசியல்வாதிகளும் எட்டப்பர் கூட்டங்களும் தமக்குத் தமக்கென தனியான பாதுகாப்பு ஒழுங்குகளையும்படைகளையும் வைத்திருந்த போது அப்படி எதையும் தேடிப் போகாதவர் அவர். அல்லற்பட்டு ஆற்றாது அவதியுற்ற தமிழ் மக்களின் அவலங்களைப் போக்குவதிலேயே அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டியவர். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நச்சுச் சூழல் நிரம்பிய நாட்டின் தலைநகரில் தம் குடும்பத்தினருடன் வாழ்ந்து கொண்டே வெளிநாடுகளிலும் ஈழத் தமிழ் மக்களின் உண்மை நிலையை வெளிச்சம் போட் டுக் காட்ட தமது மேலான சட்ட அறிவையும், வாதமி டும் ஆற்றலையும் வாரி வழங்கியவர். அவருடைய ஆணித்தரமான கருத்துக் களையும் வெளிப்படுத்தல்களையும் அதற்குரிய கருத்துக்களின் மட்டத்தில் நேரடி யாகச் சந்தித்து எதிர்கொள்ள முடியாத கூட்டத்தினால் அவர் மிகுந்த கோழைத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். கொழு ம்பில் வாழும் தமிழர்கள் சிங்கள பௌத்த பேரின வாதத்திற்கு அஞ்சி அதன் அடிவருடிகளாக மாறினார்கள். அல்லது பேச்சின்றி மௌனம் காப்பவர்களாக மாறினார்கள். அத்தகைய சந்தர்ப்பவாத சமரசம் எதனையும் செய்ய மறுத்து நின்றமையால் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கூலிப்படையினரால் அவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஈழத் தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் அவர்கள் அவரின் தந்தை ஜீ.ஜீ. இறந்தபின் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைத் தொடர்ந்து நடத்தி புகழ்பெற்ற சட்டத்தரணியாகவும் விளங்கிய குமார் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். பின்பு பரிஸ்டர் பட்டமும் பெற்றவர். இவர் இலங்கையில் சிரேஷ்ட சட்டத் தரணிகளில் ஒருவராக விளங்கியவர். இவர் தமிழ் மக்களின் துயர் துடைப்பதற்கான பல வழக்குகளில் வாதாடி வெற்றி பெற்றவர். செம்மணிப் புதைகுழிகள் பற்றிய செய்திகள் வெளிவருதற்குக் காரணமாக இருந்த கிருஷாந்தி பாலியல் வல்லுறவு வழக்கிலும், அதற்கு முன்பாக மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலைகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளின் போதும் கொடுமைகள் புரிந்த இலங்கை இராணுவத்திற்கு எதிராக வாதிட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் திறமை மிகுந்த சட்டத்தரணியாக இருந்த போதும் சிங்கள பௌத்தப் பேரினவாதத்தை தொடர்ச்சியாக எதிர்த்து குரலெழுப்பி வருபவர் என்பதினால் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படாது புறக்கணிக்கப்பட்டவர். இவர் தமது அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் சில தவறுகள் செய்த போதும் பின்பு தமது பாதையை நேர்படுத்தி ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த காலப் பகுதிகளில் இவரின் பங்களிப்பு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் தடம்புரண்டு தவறான பாதையில் சென்ற போதும் காலத்தின் அவசரம் கடமையறிந்து தளம்பாது தனித்து நின்று துணிச்சலுடன் செயற்பட்டது இவரின் சேவையின் சிகரமாகும்.

**க.மு.தர்மராசா**
**ஆசிரியர்**


**மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின்**
**78 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.**

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் சதி செய்து கொலைசெய்யப்பட்ட 2000.01.05 ஆம் திகதி சிறுவர்களாக இருந்தவர்கள் இன்று 16 வயதையடைந்திருக்கிறார்கள். அவருடைய தியாகம்,சேவை ஆகியவற்றை தெரிய வேண்டும் என்ற நோக்கத்துடனும் அவரை மறக்காமல் நன்றிக் கடனாக இந்நினைவுரை வெளிப்படுத்த ப்படுகின்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 807

Search for people, places and things Nagendram Home


பிறேமா




சியாமளா




நிசாந்




கமல்




சிந்து




உஷாந்தன் நெய்மார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மத்திய வங்கி குறித்து விரைவில் அறிக்கை!

மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என பொது முயற்சியான்மை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் சுனில் ஹந்து னெத்தி தெரிவித்துள்ளார்.

கோப் குழுவினால் மேற் கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் இரண்டு வார காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அவர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

கோப் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்த போது இதனைத் தெரிவித்தார்.


கோப் ஆணைக்குழுவின் விசாரணைகள் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அவசியமானது என குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஓர் முறைமை உருவாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பதவி வகித்த காலத்தில் பிணை முறி கொடுக்கல் வாங்கல்களில் மோசடி இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் குறித்து கோப் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ள எதிர்வரும் இரண்டு வாரங்களில் இந்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கபடும் என சுனில் ஹந்துனெத்தி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# பரீட்சை முறைகேடுகள் குறித்து விசாரணை செய்ய விசேட குழு



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பரீட்சை மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்கள், மீண்டும் இடம் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாதென அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை உறுதிப்படுத்துவத்றகு விசேட திட்டங்களை அமுல் படுத்தியுள்ளதாகவும் கலவி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பிலான பரீட்சை சட்டங்களை அமுல்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல் விடுததுள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான சம்பங்களை கருத்தில் கொண்டு கல்வி அமைச்சர் இந்த தீர்மானத்தை மேற் கொண்டுளளார். (இ-7-10)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 130 | 250 | 200 | 300 |
| தக்காளி | 50 | 50 | 30 | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 | 80 | 60 | 100 |
| கோவா | 100 | 100 | 70 | 160 | 100 | 100 |
| கரட் | 100 | 200 | 100 | 120 | 150 | 120 |
| பூசணி | 40 | 60 | 40 | 60 | 50 | 60 |
| புடோல் | 50 | 40 | 20 | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 100 | 160 | 90 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 50 | 80 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 200 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 30 | 50 | 80 | 30 |
| கருணைக் கிழங்கு | 120 | [illegible]50 | — | 120 | 140 | 150 |
| பயற்றங்காய் | 40 | 20 | 20 | 40 | 20 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 30 | 60 | 50 | 70 |
| கறிமிளகாய் | 200 | 100 | 150 | 200 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 140 | 50 | 100 | 120 | 140 | 150 |
| போஞ்சி | 180 | 100 | 150 | 200 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 50 | 80 | 60 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 160 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 100 | — | 140 | 100 | 120 | 140 |
| முள்ளங்கி | 40 | — | 20 | 60 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | 30 | 50 | 80 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## புதுக்குடியிருப்பை இராணுவம் கைப்பற்றியது 250

### இலங்கை அதிர்ச்சி

தரையில் இருந்து விண்ணில் செலுத்தித் தாக்கக்கூடிய ஏவுகணைகள் விடுதலைப்புலிகளின் வசம் இல்லை என்றும் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் ஏவுகணைகள் அனைத்தும் மிகவும் பழைமையானவை. அவற்றால் கபிர் ரக போர் விமானங்களைக் குறிவைத்து தாக்கிவிட முடியாது என்றும் இராணுவமும் போர் ஆய்வாளர்களும் கருதி வந்த நிலையில் விடுதலைப் புலிகள் கபிர் ரக விமானத்தை சுட்டு வீழ்த்திருப்பது அரசுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

### அலை அலையாகத் தாக்குதல்

முல்லைத்தீவில் 45 சதுர கிலோமீற்றர் பரப்பளவு பகுதிக்குள் விடுதலைப் புலிகளை முடக்கி விட்டதாக இராணுவம் அறிவித்தது. முல்லைத்தீவின் முக்கிய பகுதியான புதுக்குடியிருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக விடுதலைப் புலிகள் இராணுவத்திற்கு எதிராக அலை அலையாகத் தாக்குதல் தொடுத்து வந்தனர்.

இந்தப் போரில் இராணுவத்தினர் நாள்தோறும் 50 முதல் 60 வரை பலியாகி வருவதாகவும் இதுவரை 450 பேர் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் 08-03-2009அன்று அறிவித்திருந்தனர். ஆனால் 2009ஆம் ஆண்டு மார்ச் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடைபெற்ற போரில் 250 விடுதலைப்புலிகளைக் கொன்று விட்டதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

### பிரபாகரன் மகன் தலைமையில்

07-03-2009 அன்று முதல் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி மற்றும் ராதா தலைமையிலான அணியினர், இராணுவத்தினரின் முன் அணி வரிசையாகத் தகர்த்த முயன்றனர். இராணுவத்தினர் மேலும் முன்னேறிச் சொல்ல முடியாதபடி அந்த அணியினர் அங்கேயே நிறுத்தப்பட்டிருப்பதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

### மீலாது ஊர்வலம்

இந்தநிலையில் தெற்கு மாத்தறை மாவட்டத்தில் 10-03-2009 அன்று காலை மனித வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. அக்குரச கொட்டப்பிட்டிய என்ற இடத்தில் மீலாது நபி விழாவையொட்டி ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் 6 அமைச்சர்கள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் கிறிஸ்தவ மற்றும் புத்த மத குருக்கள் உட்பட திரளான முஸ்லிம்கள் பங்கேற்றனர். காலை 10.40 மணியளவில் அந்தப் பகுதியில் இருந்த ஜும்மா மசூதி அருகே ஊர்வலம் வந்து கொண்டிருந்தது.

### மோட்டார் சைக்கிளில்

அப்போது மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த தற்கொலைப்படையைச் சேர்ந்த (மனித வெடிகுண்டு) ஒருவன் ஊர்வலத்தில் புகுந்து திடீரென்று தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச்செய்தான்.

பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித்ததும் ஊர்வலத்தினர் அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர். ஊர்வலத்தில் வந்த பலர் உடல் சிதறித் தூக்கி வீசப்பட்டனர். 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

### 15 பேர் பலி

மசூதி அருகே பலரது உடல்கள் சின்னாபின்னமாக அடையாளம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் கிடந்ததால் தாக்குதலில் எத்தனை பேர் பலியானார்கள் என்பதை உடனடியாகக் கணக்கிட முடியவில்லை. 15 பேர் வரை குண்டுவெடிப்பில் பலியாகி இருக்கலாம் என்று மாத்தறை மாவட்ட பொலிஸ் அதிகாரி ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

அரசின் தபால் மற்றும் தொலைத்தொடர்புத்துறை சட்டசபை அமைச்சர் மகிந்த விஜயசேகர, தெற்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஸ்ரீசேனா உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இரத்தம் சொட்டச் சொட்ட விழுந்து கிடந்த அமைச்சர் விஜயசேகரவை ஒரு வானில் தூக்கிப்போட்டு மாத்தறை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருந்த மகிந்த விஜயசேகர தீவிர கண்காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் விமானம் மூலம் கொழும்பில் உள்ள தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்த விழாவில் பங்கேற்ற ஏ.எச்.எம்.பௌசி, அமீர் அலி ஆகிய இரு முஸ்லிம் அமைச்சர்கள் உட்பட 6 அமைச்சர்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடந்து இருக்கலாம் என்று கருதப்பட்டது.

### புதுக்குடியிருப்பு

இதற்கிடையே விடுதலைப்புலிகளின் வசம் இருந்த கடைசி பெரிய நகரான புதுக்குடியிருப்பைக் கைப்பற்ற இராணுவம் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வந்தது. குறிப்பாக 2009 ஏப்ரல் 3 ஆம் திகதி தொடங்கி 3 நாட்களாக கடும் சண்டை நடந்தது. அதன் முடிவில் புதுக்குடியிருப்புப் பகுதி முழுவதையும் கைப்பற்றி விட்டதாக இராணுவம் அறிவித்தது.

இது குறித்து இராணுவ செய்தித் தொடர்பாளர் உதய நாணயக்கார கூறியதாவது,

### கைப்பற்றி விட்டோம்

புதுக்குடியிருப்பு பகுதி முழுவதையும் இராணுவம் கைப்பற்றி விட்டது. 3 நாட்களாக நடந்த சண்டையில் 420 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் கைப்பற்றப்பட்டு விட்டன. இந்தச் சண்டையில் விதுஷா, நாகேஷ், துர்கா, தீபன் பட்டாபி ஆகிய முக்கியமான விடுதலைப்புலி தலைவர்கள் கொல்லப்பட்டனர். மற்றொரு மூத்த தலைவரான பானு காயம் அடைந்தார்.

04-04-2009 அன்று நடந்த சண்டையில் மட்டும் 100 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர். போர் நடந்த பகுதியில் பல இடங்களில் அவர்களது உடல்கள் சிதறிக் கிடந்தன. மீதி உள்ள விடுதலைப் புலிகள் 20 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள பாதுகாப்பு வலயப்பகுதியில் அப்பாவி தமிழ் மக்களை மனித கேடயமாகப் பிடித்து வைத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களும் அங்குதான் பதுங்கி உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.



விடுதலைப்புலிகள் தோல்வியை ஒப்புக்கொண்டு சரணடைய வேண்டும் என்று அரசு எச்சரிக்கை விடுத்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக உச்சகட்ட போரை நடத்தி வந்த இராணுவம் விடுதலைப்புலிகளிடம் இருந்து பெரும்பான்மையான பகுதிகளை மீட்டு விட்டது.

(தொடரும்)

# போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றும் ஐ.நா. போராளிகள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் அனந்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசால் விஷ ஊசி ஏற்றப்பட்டு நாளாந்தம் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் போராளிகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மர்மமான முறையில் உயிரிழந்து வருகின்றமை தொடர்பாகவும், அவர்களுக்கு விஷ ஊசிகள் ஏற்றப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கும் உண்மைத்தன்மையை அறிவதற்கும் வடக்கு மாகாண சபை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பிரேரணை ஒன்றினை நிறைவேற்றியுள்ளது.

இந்த பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கை அரசு போரில் சரணடைந்த, கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளில் 12 ஆயிரம் பேரினை புனர்வாழ்வின் பின்னர் உடனடியாக விடுதலை செய்ததாக கூறியிருந்தது. ஆனால் இவ்வாறு அவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் தொடர் கண்காணிப்புக்களுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டனர்.

இப்போது அவர்களுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்ட தகவல் வெளிவந்துள்ளது. அவர்கள் சாதாரண பொருளைக் கூட தூக்க முடியாமல் பலவீனமாக்கப்பட்டுள்ளனர். காலம் செலல செல்ல உயிரிழக்கும் நிலையை கூட இந்த விஷ ஊசிகள் ஏற்படுத்துகின்றன. இது வெறுமனே பேசி விட்டுச் செல்லும் சாதாரண விடயமல்ல. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு வடக்கு மாகாண சபையினராகிய எமக்கு உண்டு.

தமிழ் பேசும் வைத்தியர்கள் சிலர் எம்மிடம் கூறியுள்ளனர். இந்த விஷ ஊசிகள் சீனா மற்றும் ஜப்பான் தயாரிப்புக்கள் என மேலும் போராளிகளின் மர்மமான மரணம் குறித்து சரியான தகவல்களை திரட்டி அதனூடாக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும் எமக்கு உண்டு. ஆகவே இந்த தகவல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி சுதந்திரமான மருத்துவ பரிசோதனைக்கு போராளிகளை உட்படுத்துவது அவசியமாகும்.

இந்த மருத்துவ பரிசோதனைகளை எமது தமிழ் வைத்தியர்களால் மேற்கொள்ள முடியாத நிலையில் சர்வதேச மருத்துவ குழு ஒன்றின் உதவியை நாடவும் வடக்கு மாகாண சபை தயங்கக் கூடாது. இலங்கை அரசு எமது போராளிகளை வஞ்சமாக கொன்று கொண்டிருக்கின்றது. எமக்காக போராடிய அவர்களை காப்பாற்றும் வரலாற்று கடமை எமக்கு உண்டு என அனந்தி சசிதரன் தெரிவித்தார். (இ-4)

# புனர்வாழ்வின் நோக்கம் முற்றிலும் மாற்றியமைப்பு

## மாகாணசபை உறுப்பினர் குணசீலன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட ஒருவரை சாதாரண நிலைக்கு கொண்டு வருவதே புனர்வாழ்வு அளிப்பதன் உண்மையான நோக்கமாகும், ஆனால் இலங்கை அரசு, சாதாரணமாக இருந்த முன்னாள் போராளிகளை அசாதாரண நிலைக்கு கொண்டு செல்லவே புனர்வாழ்வை பயன்படுத்தியுள்ளது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வைத்தியர் ஜி.குணசீலன் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மர்மமான முறையில் உயிரிழந்து வருகின்றமை தொடர்பாகவும், அவர்களுக்கு விஷ ஊசிகள் ஏற்றப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கும் உண்மைத்தன்மையை அறிவதற்கும் வடக்கு மாகாண சபை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பிரேரணை ஒன்றினை நிறைவேற்றியுள்ளது.

இந்த பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் புனர்வாழ்விலும் இன வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. தனியே தமிழீழ விடுதலை போராளிகள் மாத்திரமே புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இராணுவத் தரப்பு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

புனர்வாழ்வு அளிக்கப்படுவதன் நோக்கம் போரில் உள உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களை அல்லது போராளிகளை சாதாரண நிலைக்கு கொண்டுவந்து சமூகத்தில் ஏனைய மனிதர்களை போல் இயல்பாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தலேயாகும். ஆனால் இங்கு புனர்வாழ்வு தீய எண்ணத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரண நிலையில் இருந்த போராளிகளை புனர்வாழ்வு எனும் பெயரில் மேலும் துன்பத்தை வழங்கி அவர்களை உள ரீதியாக பாதிப்படைய செய்து, அவர்களுக்கு உடலை பலவீனமடைய செய்யும் ஊசிகளை ஏற்றி மிகவும் தாக்கத்திற்கு உள்ளானவர்களாக இந்த சமூகத்தில் அவர்களை நடமாட விட்டுள்ளார்கள். இவை எல்லாம் மிகவும் மோசமான செயல்களாகும்.

ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமானால் அவரது அனுமதி பெறப்பட வேண்டியது கட்டாயமாகும். இது இலங்கையில் சட்டமாகவும் உள்ளது. ஆனால் இந்த முறைமை எமது போராளிகள் விடயத்தில் பின்பற்றப்படவில்லை. என்ன சிகிச்சை அளிக்கப்படுகின்றது என கேட்டாலும் அவர்கள் மிரட்டப்பட்டுள்ளார்கள்.

மேலும் யாருக்கு எந்த தடுப்பு மருந்து போடப்பட்டாலும் அதற்குரிய ஆவணங்கள் பேணப்பட வேண்டும். எனவே போராளிகளுக்கு என்ன தடுப்பு மருந்துகள் போடப்பட்டன, அவற்றின் ஆவணங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அரசிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்க வேண்டும். இதன்போது மருத்துவ அறிக்கையை இலங்கை அரசு வழங்க மறுக்குமானால்,

அங்கே தவறு ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதனை எம்மால் ஊகிக்க முடியும். இதுவும் இனப்படுகொலைக்கான ஆதாரம் என்று சர்வதேசத்திற்கு எம்மால் கூற முடியும் என தெரிவித்த வைத்தியர் குணசீலன், இவற்றை விட எமது போராளிகளுக்கு என்ன மருந்து ஏற்றப்பட்டது என்பதை கண்டறிந்து அதற்கு ஏற்ற சிகிச்சையை தாமதிக்காது வழங்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியிருந்தார். (இ-4)

## விண்ணேற்பு பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தூய மரியன்னை பேராலயத்தின் விண்ணேற்புப் பெருவிழா கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பெருவிழாவில் இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாழ்வின் வெறுமையை இறை நம்பிக்கை ஈடு செய்யட்டும் எனும் தலைப்பில் மறை உரை இடம் பெறும். (இ-3)

## வரலக்ஷ்மி விரதம் இன்று

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிழக்கு அருள்மிகு ஆண்டிப் புலம் காளி அம்பாள் ஆலய வரலக்ஷ்மி விரதம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும். (இ-60)

## சிகிச்சை நேரம்

கரவெட்டி கால்நடை வைத்தியசாலையில் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை சிகிச்சை இடம்பெறும் எனக் கால்நடை வைத்தியசாலை வைத்திய அதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

## மரம் நடுகை நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

மரம் நடுகை நிகழ்வு இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெறும். களனிப் பல்கலைக்கழக மாணவி செல்வி ரி. குலங்கனா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா, கௌரவ விருந்தினராக ஹரிகணன் பதிப்பக இயக்குநர் எஸ்.ராஜ்குமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# ‘பசுமையான எதிர்காலத்தை நோக்கி’ சர்வதேச ஆய்வரங்கு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு-2016 “பசுமையான எதிர்காலத்தை நோக்கி” என்ற தொனிப்பொருளில் இன்றும் நாளையும்(12,13 ஆம் திகதிகளில்)யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெறும்.

இன்று 12 ஆம்திகதி ஆரம்ப நிகழ்வுகள் மாநாட்டின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமான சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் பிற்பகல் 3மணிக்கு நடைபெறும்.ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரேச்சல் ரிரைப் மாநாட்டின் தொடக்கவுரையை வழங்குவார்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்.ரில்கோ விடுதியில் காலை 8.30மணிக்கு ஆரம்பமாகும் நாளை 13ஆம்திகதி நிகழ்வுகளில் பல்வேறு துறைகள் சார்ந்தும் பசுமை எதிர்காலம் குறித்த தேடல்களை முன்வைக்கும் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் அவை பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

இந்த வகையில் -மானுடவியல் மற்றும் நுண்கலைகள், விளையாட்டு விஞ்ஞானம்,தூய விஞ்ஞானம், வர்த்தகம்,முகாமைத்துவம் மற்றும் தொழில்வாண்மை, விவசாயம் மற்றும் உணவு விஞ்ஞானம் கல்வி,பொறியியல்,சுகாதாரம் மற்றும் மருத்துவம்,சமூக விஞ்ஞானம் மற்றும் பிராந்திய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் சூழல் விஞ்ஞானம்,தகவல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளினூடாக பசுமையான எதிர்காலத்தை நோக்கிய ஆய்வு அமர்வுகள் பேராசிரியர்கள்,துறைசார்ந்தோர், நிபுணர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெறும்.

“பசுமையான எதிர்காலத்தை நோக்கி” சர்வதேச ஆய்வு மாநாட்டிற்கான விருந்தினர் பேச்சாளர்கள் வரிசையில் மாநாட்டின் கருத்துரைகளை அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ரஞ்சித் கூடாலி மற்றும் கலாநிதி ஆறுமுகம் கந்தையா ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-10)

# தமிழரின் தன்னலமற்ற போராட்டம் வெறும் பேச்சுப்பொருளாக மாறும்

(நேற்றைய தொடர்ச்சி).

இதில் ஒரு படி மேலாக மக்களை வரி செலுத்த வைப்பது இந்த மனதார ஏற்றல் தத்துவத்தில் அடுத்த கட்டமாக பார்க்கப்படுகிறது. இது வரை காலமும் தமது உள்ளூராட்சி மன்ற அலுவல்களுக்கு மட்டும் வரி செலுத்தி வந்த மக்கள் இனி வருமான வரியும் செலுத் தக்கூடிய நிலைக்கு எடுத்துச் செல்வது அரசின் தேவை யாகப்படுகிறது.

பொருளாதார சுற்றோட்ட புள்ளி விபரத் தரவுகளின் படி நாட்டின் எப்பகுதி அதிக அளவில் கொள்வனவு சக்தியும் நுகர்ச்சி யும் கொண்டுள்ளதோ அப்பகுதியில் இறுக்கமான வரிஅறவீட்டு முயற்சிகள் அமுலாக்கப்படலாம் என்பது எதிர்பார்க்கக்கூடியதாக உளளது. அதிக வரி கொண்டுள்ள பிரதேசங்களை விட்டு மக்களை வெளி யேற்றுவதன் மூலம் இனங்களை இணைந்து வாழும் தன்மையை உருவாக்க முடியும் என்பது அரச உள்நாட்டு நிர்வாக பொறி முறையாகும்.

வல்லரசுகள் தமது நலன்களைப் பேணும் போக்கில் கவனம் கொண்டுள்ளன. அரசியல்வாதிகள் தமது பதவிகளை பேணுவதில் கவனம் கொண்டுள்ளனர். மக்களும் தமது நலன்களின் அடிப்படையிலேயே வாழ விரும்புவர். இந்நிலையில் கடந்த காலங்களில் வாழ்ந்த தியாகம் மற்றும் தன்னலமற்ற போராட்டம் என்பன இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் வெறும் பேச்சுப்பொருளாக மாறும் அபாயமே உள்ளது. அடுத்து புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இன்று இலங்கை அரசின் கடிவாளமில்லாத குதிரைகள் போல இருப்பது ஒருசில இடங்களில் மிகவும் அபாயகரமானவர்களாக கருதப்படுகின்றனர். பேரம் பேசும் போக்கில் இலங்கையின் இன்றைய நிலையில் புலம் பெயர்நாடுகளில் வாழும்



தமிழ் அமைப்புகளின் செயற்பாடுகளை முன்னிறுத்தி கொழும்பு திட்டங்கள் வகுக்குமானால் தமிழ் அமைப்புகள் அபாய நிலைகளை எதிர்நோக்கலாம்.

அதேவேளை இலங்கை எந்த ஒரு வல்லரசு களூடாகவும் அழுத்தங்கள் ஏற்படுமிடத்து உள்நாட்டு கலவரக்காரர்களைக் காரணம் காட்டி வல்லரசுகளின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தன்மையையும் கொண்டது.

இதற்கு மதவாதத்தை, முக்கியமாக பௌத்த மதவாதத்தை, ஆயுதமாகப் பயன்படுத்தும் தன்மையையும் கொண்டது.

இதற்கு நல்ல ஒரு உதார ணமாக இனஅழிப்பிற்கு எதிராக அனைத்துலக விசார ணையை தடுப்பதில் பௌத்த மதத்தின் பங்களிப்பை குறிப்பிடலாம், இதர தேசிய இனங்களுக்கு உரிமைகள் வழங்குவது பௌத்த மதத்தின் பாதுகாப் பிற்கு தகாதது எனும் மனநிலையை சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டியதில் பௌத்த மதத்திற்கு பெரும் பங்கு உண்டு. மதவாதம் என்பது இதர பாகிஸ்தான், பர்மா போன்ற நாடுகளைப்போல் இலங்கையிலும் சமூக அளவில் படர்ந்துள்ளது. அவ்வப்போது இதனை ஆட்சியாளர்கள் மேலை நாடுகளுடனான பேரம் பேசலுக்கு துணையாகப் பயன்படுத்துகின்றனர்.

ஆக வல்லரசுகளை சமாளித்தல் என்ற போக்கில் பாகிஸ்தான், பர்மா , இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் பல்வேறு விடயங்களில் ஒரே தன்மையான போக்கை கொண்டன.

(முற்றும்)

**லோகன் பரமசாமி**

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜி—ரஜினிகாந்த் நடித்த “படையப்பா” 86 தியேட்டர்களில் நூறு நாள் ஓடியது

**230**

இவர்கள் இணைந்து நடி த்த இரண்டாவது படம் நான் வாழவைப்பேன். 1979இல் வெளிவந்த இது பெரிய வெற்றிப்படம். ரஜினிகாந்து க்குப் புகழ் தேடிக் கொடுத்தது.

**படிக்காதவன்**

ரஜினிகாந்த் சுப்பர் ஸ்டா ராகப் புகழ் பெற்ற பிறகு சிவாஜியுடன் இணைந்து நடித்த படம் படிக்காதவன்.

இது ஈஸ்வரி புரொடக்ஷ ன்ஸ் சார்பில் வி. வீராசாமி, வி.ரவிச்சந்திரன் தயாரித்த படம். இளையராஜா இசை அமைக்க ராஜசேகர் டைரக்ட் செய்தார்.

சிவாஜி,ரஜினியுடன் அம் பிகா, ர்ம்யா கிருஷ்ணன் ஆகியோர் நடித்தனர். 11-11-1985 இல் வெளிவந்த இந்தப் படம் மெகாஹிட் படமாக அமைந்தது.

**படையப்பா**

ரஜினிகாந்த் படங்களில் மகத்தான படம் படையப்பா. இதில் அவருடன் சிவாஜி கணேசன், ரம்யாகிருஷ்ணன், சௌந்தர்யா ஆகியோர் நடித் தனர். ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்தார். கே.எஸ்.ரவி க்குமார் டைரக்ட் செய்தார்.

10-04-1999 இல் வெளி யான படையப்பா 86 தியேட்டர் களில் நூறு நாட்களைக் கட ந்து ஓடி சாதனை படைத்தது. 6 தியேட்டர்களில் வெள்ளி விழா கொண்டாடியது.

இந்தப்படம் நரசிம்மா என்ற பெயரில் தெலுங்கில் டப் செய்யப்பட்டு அந்தப் படமும் மகத்தான வெற்றி பெற்றது.

22தியேட்டர்களில் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

1993இல் சிவாஜி நடித்த படம் பாரம்பரியம். 1995:பசும் பொன்,1996: ஒரு யாத்திரா மொழி(மலையாளம்), 1997: ஒன்ஸ்மோர், 1998: என் ஆசை ராசாவே, 1999: படையப்பா, மன்னவரு சின்னவரு, பூப் பறிக்க வருகிறோம்.

**300வது படம்**


பசும்பொன் படம் ஆனந்தி பிலிம்ஸ் தயாரித்தது. பார திராஜா டைரக்ட் செய்தார்.

சிவாஜிகணேசன் தமிழி லும் தெலுங்கு உட்பட பிற மொழிகளிலும் சில படங் களில் கௌரவ வேடத்தில் நடித்துள்ளாார். அவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண் டால் சிவாஜியின் 300ஆவது படம் பசும்பொன். அதில் சிவாஜியுடன் பிரபு, சிவகு மார்,ராதிகா,சரண்யா, யுவ ராணி ஆகியோர் நடித்தனர்.

இந்தப்படம் 14-04-1995 இல் வெளிவந்தது. இது ரிலீஸ் ஆன சமயத்தில் சிவா ஜிக்கு பிரான்சு அரசாங்கம் செவாலியே விருது வழங்கி யது குறிப்பிடத்தக்கது.

**விஜய்-சிம்ரன்**

சிவாஜிகணேசன் இளைய தலைமுறையினருடன் சேர்ந்து



நடித்த படங்களில் முக்கிய மானது ஒன்ஸ்மோர்.

இதில் சிவாஜியுடன் விஜய், சிம்ரன் ஆகியோர் இணைந்து நடித்தனர். சி.வி.ராஜேந்திரன் தயாரித்த இந்தப்படத்தை எஸ்.ஏ.சந்திரசேகர் டைரக்ட் செய்தார். வசனம் எஸ்.பி. ராஜ்குமார்.இசை:தேவா.

சிவாஜி தனது 70ஆவது வயதில் இளைய தலைமுறை யைச் சேர்ந்த விஜய்,சிம்ரன் ஆகியோருக்கு இணையாக நடனம் ஆடி எல்லோரையும் அசர வைத்தார்.

1998 ஒகஸ்ட் 28ஆம் திகதி வெளிவந்த என் ஆசை ராசாவே, பிரமிட் வி.நடராஜன் தயாரித்த படம். இதில் சிவாஜியுடன் ராதிகா, முரளி, ரோஜா, மணிவண்ணன், மனோரமா, சுவலட்சுமி ஆகியோர் நடித் தனர். வசனம் எழுதி இயக் கியவர் கஸ்தூரிராஜா. இசை: தேவா

**அர்ஜுன்**

15-01-1999 இல் வெளி யான மன்னவரு சின்னவரு, கலைப்புலி தாணு தயாரி த்தது.இதில் சிவாஜியுடன் அர்ஜுன்,கே. ஆர். விஜயா, சௌந்தர்யா, நடித்தனர். வசனத்தை லியாகத் அலி கான் எழுத கீதப்பிரியன் இசையமைத்தார். டைர க்ஷன்: பி.என்.ராமச்சந்தர்.

**கடைசிப்படம்**

ஐஸ்வர்யா பிலிம் மேக் கர்ஸ் தயாரிப்பான பூப் பறிக்க வருகிறோம் 1999 செப்டெம்பர் 17ஆம் திகதி வெளிவந்தது. சிவாஜியுடன் அஜய்,மாளவிகா நடித்தனர். வசனம் எழுதி டைரக்ட் செய் தவர் ஏ.வெங்கடேஷ், சிவாஜி யின் கடைசி படம் இது.

**சிவாஜி பெற்ற பட்டங்கள்**

ஆசிய ஆபிரிக்க பட விழாவில் சிறந்த நடிகருக் கான பரிசும், பிரான்சு அரசின் செவாலியே விரு தும் பெற்ற சிவாஜி கணே சன் மேலும் பல விருதுக ளும் பட்டங்களும் பெற் றார்.

(தொடரும்..)

கா்வம் பிடித்த புத்திசாலியை விட –
அன்பான முட்டாளே மேல்
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்கள் கூட்டத்தில் யூதாஸ்கள் இருந்தால்...

யேசு பிரானின் வாழ்க்கையில் இறுதி இராப்போசனம் மிகவும் முக்கியமானது. கூட இருந்தவர்களே அந்த மீட்பரை காட்டிக்கொடுத்த கயமை நடந்தேறுகிறது.

அந்தக் கொடுமை எப்படியாக இருந்திருக்கும் என்பதை யாராவது அறியவேண்டுமாயின் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி என்ற நாடகத்தைப் பார்ப்பதுதான் ஒரேவழி.

யூதாஸ் என்பான் யேசுநாதரைக் காட்டிக் கொடுத்ததால் அந்த மீட்பர் பட்ட அவலத்தை திருப்பாடுகளில் சித்திரித்த போது நெஞ்சு நெருடிக் கொண்டது. என்னே கொடுமை! என்று உள்ளம் ஏங்கிற்று.

அன்று நடந்த அந்தக் கொடுமைகள் இன்று வரை நீடித்து நிற்கவே செய்கிறது.

ஆம்! விடுதலைப் போராட்டம் கூட காட்டிக் கொடுப்புகளால் மோசம் போனது என்பது ஆழ்ந்த உண்மை.

எங்கள் இனத்தின் வீழ்ச்சிக்கும் இழப்புக்கும் இந்தக் கயமைத்தனங்களே காரணமாக இருந்து வருகின்றன.

நம்மினம் இழந்த உரிமையை இன்னமும் பெற முடியாத அளவில் நாமே நமக்கு மாரகனாகிக் கொண்டோம்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும்போர் எம்மினத்தை அழிப்புச் செய்தது. இதுவொன்றே எம்மினம் உரிமை பெறப்போதுமாக இருந்த போதிலும் அதற்கும் தடை என்றால் நாம் என்னதான் செய்ய முடியும்?

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசின் பக்கம் ஆதரவு கொடுப்பதாக வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை வடக்கு மாகாண முதலமைச்சர் கூறினார் என்று பார்க்காமல், இலங்கைத் திருநாட்டின் நீதியரசராக இருந்த ஒருவர் கூறியதாகப் பார்த்தால் ஈழத் தமிழ் மக்களிடம் ஐ.நா சபை பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதே உண்மை.

எனினும் எங்களின் அரசியல் தலைமைகளின் நெஞ்சுரமற்ற தன்மையும் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் போக்கும் எங்களுக்கான கிடைப்பனவை இல்லாமல் செய்து விடுகிறது.

இந்தக் கொடூர நிலையில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலிப் போராளிகள் திடீர் மரணமடைகின்ற செய்திகள் எங்கள் இதயத்தை எரித்து கருக்கிவிடுகிறது.

புனர்வாழ்வு என்ற பேரில் முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி போட்டதான தகவல்கள் உலகம் முழுவதிலும் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்களின் வாக்கைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினரான ஒருவர் விஷ ஊசி என்ற விடயத்தை மறுதலித்து பேசுகிறார் எனும் போது நாங்கள் மீள்வதற்கான வழியேதும் உண்டா? என்று எங்களிடம் கேட்டால் அதற்குக் கண்ணீர் மட்டுமே பதிலாக இருக்கும்.

என்ன செய்வது? பதவிக்காக இப்படியொரு கொடுமைத்தனம். ஏதோ நாம் செய்த பாவம்! எங்கள் கையால் வாக்கிட்டு எங்கள் தலையில் நாங்களே மண்ணைக் கொட்டிக் கொண்டோம் அவ்வளவு தான்.

## பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல்

தீவக வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு அதிபர் நியமனம் செய்வதற்காக தீவக வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனும் செய்தி பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

தீவகவலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு அதிபர் நியமனம் செய்வதற்காக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த வேறு வலயங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 16.08.2016 ஆம் திகதிவரை நீடிக்கப்படுவதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (இ)

உணவு சமைத்து உண்ண

## 150 முதியவர்கள் யாழ்.வருகை

(நல்லூர்)

வத்தளையிலிருந்து 150 முதியோர்களும் சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர்களும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் 2 நாட்கள் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருந்து முதியோர் இல்ல முதியோர்களுடன் உணவு சமைத்து பரிமாறி மகிழவுள்ளனர். அன்றைய தினம் முதியோர் இல்ல திறந்த வெளி அரங்கில் முதியோர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதியோர் இல்லங்களின் பொறுப்பாளர்கள், முதியோர்கள், ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொள்ளலாம் என்று கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் என்.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (இ-3-134)

## இலவச கருத்தரங்கு

இலவச மாலைநேர வகுப்பு மாணவர்களின் நன்மை கருதி வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தால் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை புனிதநகர் பகுதியில் இயங்கும் வள்ளுவன் மேம்பாட்டுக்கழக பிரதான காரியாலயத்தில் ஆசிரியர் வே.அன்பழகனின் கருத்தரங்கு இடம்பெறும். இதில் கலந்து கொண்டு பயன்பெற விரும்பும் மாணவர்கள் கழக நிர்வாகத்தினருடன் 077 902 1192 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வருகையை உறுதி செய்யவும். மாணவர்களுக்கான கையேடுகளும் வழங்கப்படவுள்ளன. (இ-3)



## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### முயற்சி நல்ல கூலி தரும்

❖ இறைவன் மக்களில் ஒரு கூட்டத்தினரை கொண்டு, மற்றொரு கூட்டத்தினரைத் தடுக்காவிட்டால் உலகம் சீர்கெட்டிருக்கும். ஆயினும், நிச்சயமாக இறைவன் அகிலத்தார் மீது பெரும் கருணையுடையோனாக இருக்கின்றான்.

❖ பிறப்பில் அனைவரும் தூய்மையானவர்களே! ஒருவர் செய்யும் பாவமே அவரைக் களங்கப்படுத்துகிறது. அக்களங்கத்தை அவரே போக்க வேண்டும்.

❖ எவரெவர் எதைச் சம்பாதிக்கிறார்களோ அதற்கு அவரவரே பொறுப்பாளிகளாவர். மேலும் ஒருவரின் சுமையை மற்றவர்கள் சுமக்க மாட்டார்கள்.

❖ மனிதனுக்கு தான் முயற்சி செய்ததைத் தவிர வேறு எதுவுமில்லை, இன்னும், அவனுடைய முயற்சி விரைவில் கவனிக்கப்படும். பின்னர் அதற்கான முழுக்கூலியும் அவனுக்கு வழங்கப்படும்.

❖ ஒருவன் நேரான வழியை மேற்கொள்கிறானெனில், அவனது நேரான வழி அவனுக்கே பயனளிக்கும். ஒருவன் நெறிதவறிப் போகிறானெனில், அவனுடைய நெறி தவறிய போக்கு அவனுக்கே தீங்கு விளைவிக்கும். சுமையைச் சுமக்கும் எவரும் மற்றவரின் சுமையைச் சுமக்க மாட்டார்.

-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

## நல்லூர்க்கந்தனுக்கு



### வருக முருக

இராகம்: கீர்வாணி தாளம்:திஸ்ரம்

பல்லவி

வருக முருக பரம குருவே
வரதா குகனே

அனுபல்லவி

அரி மருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம் (வருக)

சரணம்

பரவுவார்க் கருளுவாய் நீ
பரமசுகந் தரு பானு
சசியோகவதி தரு புதல்விதனை
மணந்த குமாரசுவாமி
மனமுவந்து மயிலேறிவா
சிவயோக சுவாமி நீடு வாழ்க!
வாழ்க! வையம் வாழ்க (வருக)

சிவத்திரு யோகர்சுவாமிகள்



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### விலையுயர்ந்தது எது? உங்கள் சிரிப்பா? அல்லது கோபமா?

மகேஷ்: நீங்கள் எப்பொழுதாவது கோபம் அடைகிறீர்களா?

ஸ்ரீஸ்ரீ:வரக்கூடும். ஆனால் அது மிக விலையுயர்ந் தது.

புன்னகை மிக விலையுயர்ந்தது போன்று சாதாரணமாக, நாம் கோபத்தைத் தாராளமாகவும் சிரிப்பை மிக அரியதாகவும் வெளிக்காட்டுகிறோம். ஆனால் அறியாமையில் அது அப்படித்தான். ஆனால் விவேகமுள்ளவர்களுக்குச் சிரிப்பானது, சூரிய ஒளி, காற்று, நீர் போன்று மிகத் தாராளமானது. கோபம் அதிக விலையுயர்ந்த வைரத்தைப் போன்றது.

முடிவு: நீங்கள் சிரிப்பை எளிதாகவும் கோபத்தை அரியதாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோவிலில் நந்தியின் குறுக்கே செல்லக்கூடாதது ஏன்?

நந்தியின் குறுக்கே செல்லக் கூடாது எனவும் தடை விதிப்பர். நந்தி கர்ப்பக்கிரகத்திலுள்ள சிவனைப் பார்த்தவாறு இருக்கும்.

சிவன் கோயில் வாசலில் கொடி மரத்தை அடுத்து நந்தி மண்டபம் காணப்படும். பிரதோஷ காலத்தில் இவருக்கே முக்கியத்துவம் தருவர். நந்தியிவன் குறுக்கே செல்லக் கூடாது எனவும் தடை விதிப்பர். இதற்கு காரணம் உண்டு. நந்தி கர்ப்பக்கிரகத்திலுள்ள சிவனைப் பார்த்தவாறு இருக்கும்.

இது சிவனின் வாகனம். வாகனம் எதுவாயினும் அது ஜீவாத்மாவைக் குறிக்கும். ஜீவாத்மா கருவறையிலுள்ள பரமாத்மாவைக் (இறைவன்) பார்த்த வண்ணம் உள்ளது. ஜீவாத்மாவின் குறிக்கோள் இறைவனை சென்றடைய வேண்டும் என்பது தான். அந்த கோட்பாட்டை விளக்கும் பொருளாக நந்திதேவர் சிவனை நோக்கி இருக்கிறார்.

ஆகவே பக்தர்கள் நந்தியின் குறுக்கே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது கடவுளை அடைய நினைப்பவர்களை தடுக்கும் செயலுக்கு ஒப்பாகும். சன்னதியை மறைத்து நிற்காதீர்கள் என சொல்வதும் இதனால் தான். மேலும் நந்தீஸ்வரரை வணங்கி அவரது அனுமதி பெற்றே நாம் கோயிலுக்குள் நுழைய வேண்டும்.

மீறிச் செல்பவர்கள் ஏதோ கோயிலுக்குள் போய் வந்ததாக கணக்கில் கொள்ளப்படுமே தவிர, இறைவ னின் அருள் அவர்களுக்கு கிட்டாது. அது மட்டுமல்ல, இறைவனின் முதல்வன் விநாயகர். கோயிலில் முதல் வன் நந்தீஸ்வரர். எனவே தான் விநாயகருக்குரிய அருகம் புல் மாலை நந்தீஸ்வரருக்கும் அணிவிக்கப்படுகிறது.

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியினாலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வெள்ளக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

➤➤➤

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் கரப்பந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

# அரியாலை சனசமூக நிலைய ஆண்டு நிறைவு விழா வலைப்பந்தாட்டம்

## யாழ்.பல்கலை சம்பியன்










ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது யாழ். பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணி.

அரியாலைசனசமூகநிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு பொன்னையா சிவலிங்கம் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தின் ஆதரவில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் இடம் பெற்றது. இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் 54:08 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி அபார வெற்றிபெற்றது. (கு)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக


திருநெல்வேலி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.மேற்படி போட்டி அணிக்கு 9 பேர் 8 பந்துப் பரிமாற்றம் கொண்டதாகும்.

சம்பியன் ஆகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் உடனடியாகத்தொடர்பு கொண்டு போட்டிக்கு விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.தொடர்புக்கு 076 912 7909, 077 9315559, 077 8010336 (கு)

## குருநகர் பாடும்மீன் அரையிறுதிக்கு தகுதி

எவரெஸ்ட் வி.க நடத்தும் வடமாகாண ரீதியிலான (பொன் விழாக்கிண்ணம்-2016) உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சுப்பர் 08 போட் டிகள் மின்னொளியில் நடை பெற்றன. இதில் குருநகர் பாடும்மீன் எதிர் சென்நீக்லஸ் போட்டியிட்டது. இதில் 0:3 ரீதியில் பாடும்மீன் வெற்றி பெற்றதன் மூலம் பாடும்மீன் அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (கு)

# பரணிதாசன், துஷ்யந்தன் சிறப்பாட்டம் மாலுசந்தி மைக்கல் அணி வெற்றி



இளைஞர் கிரிக்கெட் தொடரில் நெல்லியடி கிரு ஸ்ரார் அணியை வீழ்த்தியது மாலுசந்தி மைக்கல் அணி.

வடமராட்சி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 18 வயது கீழ்ப்பிரிவு அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மாலுசந்தி மைக்கல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நெல்லியடி கிருஸ்ரார் அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிருஸ்ரார் அணி 10 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது, மைக்கல் அணியின் பந்து வீச்சு சார்பில் துஷ்யந்தன் 3, பால்ராஜ் 2, பரணிதாசன் ஒரு விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி பரணி தாசனின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 4 விக்கெட்களினால் வெற்றி பெற்றது. இதில் பரணிதாசன் 32, மதிமிதன் 12, தீபாராஜ் 10 ஓட்டங்களை பெற்றனர். வடமராட்சியில் மாலுசந்திமைக்கல் அணி தொடர்ச்சியாக பல அணிகளை வெற்றிபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)





## பாரதி உதைபந்தாட்ட தொடர் ஞானமுருகன் அசத்தல் வெற்றி



பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து விளையாடிய ஞானமுருகன் B அணி 4:1 என்ற கோல்கணக்கிலும் கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து மோதிய ஞானமுருகன் அணி 6:3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இமையாணன் மத்திய உதைபந்தாட்டம் விறுவிறுப்பான ஆட்டம் சமநிலையில் முடிபு







இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் (08/08/2016) நடைபெற்ற சுப்பர் 8 முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் வி. கழகத்தைஎதிர்த்துஇளவாலை யங்ஹென்றீசியன் வி.கழகம் மோதிக்கொண்டது.

ஆட்டத்தின் முதலாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் போடாத நிலையில் முடிவுற்றது.முதல் பாதி இரண்டாவது பாதியாட்டத்தில் விறுவிறுப்பாக ஆடியது. இரு அணிகளும் பல கோல் வாய்ப்பை கைநழுவ விட்டது.

நவஜீவன்ஸ் ஆட்டத்தின் 56ஆவது நிமிடதத்தில் நவஜீவன்ஸ் வீரரின் முறை தவறால் நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டது. இறுதி ஆட்ட நேர முடிவில் ஆட்டம் சம நிலையில்முடிந்தது.இரு அணிகளும் சம புள்ளியை பெற்றுக் கொண்டன.

போட்டியின் ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் வி.கழக வீரர் பிரியா தெரிவு செய்யப்பட்டார். (கு)

# 63 புலனாய்வு அதிகாரி...

உதாலகம உள்ளிட்ட 63 புலனாய்வு அதிகாரிகளின் வங்கி கணக்குகளை பரிசோதனை செய்ய பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலிஸார் விடுத்த கோரிக்கையை கருத்தில் கொண்ட, கல்கிசை மேலதிக நீதவான் சுலோசனா வீரசிங்க இந்த அனுமதியை அளித்துள்ளார்.

இதனடிப்படையில் 32 நிறுவனங்களிலுள்ள 63 பேரினதும் வங்கிக் கணக்குகளை பரிசோதிக்க பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட போது, கண்ணால் கண்ட சாட்சி எனக் கூறப்படும் நபர் தொடர்ந்தும் சுகவீனமான நிலையில் இருப்பதால், நேற்று இடம்பெறவிருந்த அடையாள அணிவகுப்பு இடம்பெறவில்லை. இதனையடுத்து இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் கடந்த மாதம் 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேஜர் பிரேமானந்த உதாலகம கடந்த மாதம் 27ஆம் திகதி கல்கிசை மேலதிக நீதிவான் லோசனா வீரசிங்கவின் முன்னிலையில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின் போது, லசந்த விக்கிரமதுங்கவின் வாகனச் சாரதியால் அடையாளம் காணப்பட்டிருந்தார்.2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

# இப்போது பகலில் கூட...

னைய நிலையில் இருந்து விலகிப்புதிய பரிமாணம் பெற்று அது பொது மக்களுடன் பின்னிப்பிணைந்த ஒரு சேவையாக மாற்றப்பட்டிருப்பது ஒரு முன்னேற்றமான செயற்பாடு. எமது நாட்டின் பாதுகாப்புப் பகுதியின் மறுசீரமைப்பு இன்று முக்கியமானது ஒன்றாக உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் கருதப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். பாதிப்புக்குள்ளாகக் கூடிய வலுக்குறைந்த சமூகப் பிரிவுகள் வலுப்பெற நாங்கள் பாடுபட வேண்டும். இதனால்தான் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பங்காளர் கூட்டணி சகல மட்டங்களிலும் உருவாக்கப்பட வேணடும் என்று எண்ணப்பட்டது.

முன்பிருந்த விழிப்புக்குழுக்கள் அரசியல் கட்சிகள் சார்பான பாதிப்புக்கு உள்ளானதால் கட்சிகளைத் தவிர்த்து மக்கள் தலைவர்களையும் பொலிஸாரையும் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் உருவாவது அவசியம் என்று கருதப்பட்டது. பொலிஸ் - பொதுமக்களின் உறவு நிலை இன்னும் திருப்திகரமாக அமையாமையால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களினால் ஒருவரை ஒருவர் புரிந்து மக்கள் பாதுகாப்பில் இனி இணைந்தே ஈடுபடலாம் என்று கருதினோம்.

இப் பகுதியில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் குற்றச் செயல்கள் மிக அதிகரித்திருப்பது எம்மையும் பொலிஸ் சேவையையும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. களவு, கொலை, கற்பழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகக் காண்கின்றோம்.

அது மட்டுமல்ல, வடமாகாணம் கஞ்சா விற்பனையின் மத்திய நிலையமாக மாறியிருப்பதும் மிகவும் வெறுப்பையும் வேதனையையும் தருகின்றன. பொலிஸார் பல கடத்தற் செயற்பாடுகளை முறியடிக்கின்ற போதும் இச் செயற்பாடுகள் தொடர்கின்றன என்றால் இதன் பின்னணி என்ன?

இரவு நேர காவல்களுக்கும் நடமாடும் சேவைகளுக்கும் என அதிகளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் அவர்களின் சேவை இன்னமும் திருப்தி தருவதாக அமையவில்லை என்றே கருதுகின்றேன். எமது காவல் நடவடிக்கைகளில் பல ஓட்டைகள் இருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. இத்துவாரங்கள் அடைக்கப்படல் வேண்டும் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வட மாகாணசபை அவைத்தலைவர், வடக்கு அமைச்சர்கள், வட மாகாணசபை உறுப்பினர்கள், வடமாகாண பிரதம செயலாளர், பிரதி பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், சிறைச்சாலை ஆணையாளர், சிறுவர் நன்னடத்தை ஆணையாளர், சமூகசேவை ஆணையாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் பங்கு பற்றியிருந்தனர். (செ-11)

# சிறையில் மர்ம ஊசி ஏற்ற ...

என்ற தமிழ் அரசியல் கைதி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் அவரை உடனடியாக சிறைச்சாலையில் இருந்து வெளியேற்றி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் சாள்ஸ் நிர்மலநாதன் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து நேற்று தாம் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சர், உடனடியாக அநுராபுரம் சிறைச்சாலை அதிகாரிகளை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இது விடயம் தொடர்பில் கலந்துரையாடியதாகவும் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த அரசியல் கைதியை உடனடியாக சிறைச்சாலையில் இருந்து வெளியேற்றி வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் சுவாமிநாதன் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கமைய இராசையா ஆனந்தராசா என்ற குறித்த கைதி, வைத்தியப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட விடயத்தையும் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி உறுதிப்படுத்தினார். (செ-11)


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலரால் **சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பலாலி கிராம உள்ளக வீதிகள், கீரிமலை வீட்டுத்திட்ட உள்ளக வீதி மற்றும் கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்றும் கடற்கரை பகுதியில் கற்பாறை அகற்றலும் எல்லைச்சுவர் அமைத்தலுக்கான தகுதி மற்றும் தகைமை உடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து** குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

02. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **மீள்குடியேற்ற பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் **15.08.2016** தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் **மேலதிக மாவட்டச் செயலாளர்-காணி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** (தொலைபேசி இல: 021 221 2631) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை **மீள்குடியேற்ற பிரிவு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **15.08.2016** முதல் **05.09.2016 வரை** காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகையை கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **06.09.2016 திகதியன்று மு.ப 10.00மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **அரச அதிபர் அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் **06.09.2016ந் திகதி மு.ப 10.30 மணிக்கு** நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

07. முன் ஆயத்த கூட்டம் ( Prebid Meeting) **25.08.2016** காலை **10.00மணிக்கு அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில்** நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மீளளிக்கப் படாத தொகை | மதிப்பீட்டுத் தொகை (Rs in mn) | தேவையான தரம் (CIDA) | கேள்விப்பிணை விபரம் செல்லுபடியாகும் காலம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | JF/RES/Infras/Road-10/IV/07/2016 | பலாலி கிராம உள்ளக வீதி திருத்தம் | 1500.00 | 7.8 | C7 and Above | 78,955.00 | 05.12.2016 | 120 நாட்கள் |
| 02. | JF/MR/RD/01/16 | கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்றும் கடற்கரை பகுதியில் கற்பாறை அகற்றலும் எல்லைச் சுவர் அமைத்தலும். | 1000.00 | 5.6 | C7 and Above | 56,500.00 | 05.12.2016 | 120 நாட்கள் |
| 03. | JF/RES/Infras/Road-10/IV/07-1/2016 | கீரிமலை வீட்டுத்திட்ட உள்ளக வீதி திருத்தம் | 4000.00 | 26.7 | C5 and Above | 267,220.00 | 05.12.2016 | 120 நாட்கள் |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C-5428)


# சந்திரிகா பயணித்த...

தொடர்ந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. பின்னர் சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட குழுவினர் வேறொரு விமானத்தின் மூலம் பலாலி விமான நிலையத்தை பாதுகாப்பாக சென்றடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்தில் நேற்று பல்வேறுபட்ட தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சம்பந்தன் இன்று...

இரா.சம்பந்தன் விசேட கூற்று ஒன்றை வெளியிடவுள்ளார்.

நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 23இன் கீழ் 2 படி நாடாளுமன்றத்தில் இன்று இரா.சம்பந்தன் இந்த விசேட கூற்றை அவர் விடுக்கவுள்ளார். (செ-11)

# சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்பை...

ணையை உறுதி செய்யாது வெறும் பொருளாதார நன்மைகளை எமது மக்களுக்கு அளிப்பது அவர்களை விலைக்கு வாங்குவதாக அமையும் எனவும் சந்திரிக்கா முன்னிலையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு குடிநீர் தாங்கி கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், அம்மையார் அவர்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வீற்றிருந்த காலத்தில் இப் பகுதிக்கு விஜயம் செய்து இங்கிருக்கும் மக்களின் குறைபாடுகளையும் அவர்களின் அபிலாசைகளையும், தேவைகளையும் அறிய முடியாத நிலையிலும் தனது சேவைக்காலம் முடிவுற்று ஓய்வு பெற்றுள்ள நிலையில் எம் மக்களுக்கு உதவ வேண்டும் எனற உள்ளக்கிடக்கை அவரை ஆட் கொண்டமை மகிழ்வைத் தருகின்றது.

இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அம்மையார் அவர்கள் இந்தப் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு கடுமையாகப் பாடுபட்டு உழைத்தவர். அத்தேர்தலின் போது தமிழ் மக்களின் அமோக வாக்குகளாலேயே இப்புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அதற்கான நன்றிக் கடனாக அம்மையார் அவர்கள் எம் மக்கள் மீது அன்பு பாராட்டுகின்றார் என்று நாம் நினைக்க இடமுண்டு.

சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து ஜெனிவா தீர்மானத்தை நடை முறைப்படுத்தவும் அவர் உதவிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். போர்க்குற்ற விசாரணை உரியவாறு பாரபட்சமின்றி நடைபெற்றால்த்தான் தேசிய ஒருமைப்பாடும் நல்லிணக்கமும் உருவாகலாம் என்பதை நான் கூறி அம்மையார் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. நடந்து முடிந்தனவற்றிற்குப் பரிகாரம் காணாமல் எமக்கு எவ்வளவுதான் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தாலும் அவை எம்மைத் திருப்திப்படுத்தாது என்பதை அன்புடன் அம்மையாருக்குச் சொல்லி வைக்கின்றேன். சமாதானத்துக்கான முன்னுரிமை அச்சுவார்ப் புருவின் பிரதியொன்று எமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நிலைமாற்றத்துக்கான நீதி முறை, நல்லிணக்கம், ஆட்சி முறை, மீள்குடியேற்றமும் நிரந்தரத் தீர்வும், என்ற தலையங்கங்களின் கீழ் குறித்த கருத்தாவணம் அமைந்துள்ளது. அதில் போர்க் குற்ற விசாரணை சம்பந்தமாகவோ அதனை வழிநடத்துதல் சம்பந்தமாகவோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. குதிரைக்கு முன் கரத்தையைப் பூட்டுவது போல் குறித்த ஆவணம் இருக்கின்றது. ஆகவே இந்நாட்டின் ஜனாதிபதியாகப் பத்து வருடங்கள் கடமையாற்றிய எம் மதிப்பிற்குரிய சந்திரிக்கா அம்மையார் இந்தக் குறையைத் தீர்க்க வழிவகுக்க வேண்டும்.

சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும். சர்வதேச வழக்கு நடத்துநர்களை உள்ளீக்க வேண்டும், சர்வதேச போர்க்குற்றங்களை எமது அரசியல் யாப்பின் 13 (6) ஆம் சரத்தின் கீழ் எமது சட்டவாக்கத்துடன் சேர்த்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவ்வாறு செய்து நீதியான, போர்க்குற்ற விசாரணையை உறுதி செய்யாது வெறும் பொருளாதார நன்மைகளை எமது மக்களுக்கு அளிப்பது அவர்களை விலைக்கு வாங்குவதாக அமையும். எம் மக்கள் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். எமது பிரதேசங்களில் பெரும் பானமையினராக இதுகாறும் வாழ்ந்து வந்தவர்கள். எனவே இறுதி யுத்தத்தில் போர்க் குற்றங்கள் யார் இழைத்திருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து தண்டனை வழங்கி நீதியை நிலை நாட்ட வேண்டும் என்ற குறிக்கோள் எம் மக்களிடையே உண்டு என்பதை மிகத் தாழ்மையுடன் அம்மையாருக்குத் தெரியப்படுத்திக் கொள்கன்றேன் என முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-4)

# நிரந்தர அரசியல் தீர்வுக்கு...

திருமதி விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் ஜனாதிபதியின் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தமிழ் மக்களது பிரச்சினைகளை தமிழ்த் தலைமைகள் சரியாக கையாண்டிருந்தால், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரும் எம் மக்களும் எம்மோடு இன்று உடன் இருந் திருப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற குடிநீர் தாங்கி கையளிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

தற்போதுள்ள நல்லாட்சி அரசின் காலத்தில் லைக்கா மொபைலின் ஞானம் பவுண்டேசன் வடக்கில் 3 ஆயிரம் தண்ணீர் தாங்கிகளை அமைத்து கொடுக்க முன்வந்துள்ளனர். இதனை வரவேற்கிறோம்.

முன்னைய ஆட்சிக்காலங்களில் தீவுப்பகுதிகளில் சரியான பாதுகாப்பு இல்லை. தமிழ் ஆயுதக்குழுக்களின கட்டுப்பாட்டில் இந்த பகுதிகள் இருந்தன. இதனால் இங்கு பல வருட காலமாக அபிவிருத்தி என்பதே இடம்பெறவில்லை. இப்போது கூட இங்குள்ள பல கிணறுகள் மூடப்பட்டுளளன. அப்போது இங்கு வருவது அச்சுறுத்தலாக இருந்த காரணத்தினால் அவை புனரமைக்கப்படவில்லை. இவ்வாறு பல அபிவிருத்திகளும் பிரச்சனைகளும் தீர்க்கப்படவில்லை.

முன்னால் ஜனாதிபதியின் காலத்தில் எமது பிரச்சனையை தீர்த்திருந்தால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட அனைத்து மக்களும் இன்று எம்மோடு உடன் இருந்திருப்பார்கள். எமது சொத்துக்களும் அழிவடைந்திருக்காது. எமது அரசியல் தலைவர்கள் பல இடங்களில் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டனர். இதனால் தான் நாம் காலம் காலமாக அழிவுகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

சந்திரிகா தலைமையில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி முன்னெடுக்கப்படவுள்ளது. இதே போல் தமிழின தீர்வு திட்டத்திற்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும். இந்த அரசை தவறவிட்டால் எப்போதும் தீர்வை பெற்றுவிட முடியாது. காணாமல் போனோருடைய பிரச்சனைகளை குறுகிய காலத்தில் தீர்த்து வைக்க வேண்டும். எனது குடும்பமும் கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தது. இதே போல் வடக்கு மக்களும் பாதிக்கப் பட்டுள்ளனர். எனது கணவனின் உயிரும் தமிழ் ஆயுதக்குழுக்களினால தான் பறிக்கப்பட்டது.

அன்று தீவகம் வரமுடியாத நிலை காணப்பட்டது ஆனால் இன்று மக்களின் வீடுகளுக்கு நாமே வந்து குடிநீர் வழங்கி வருகின்றோம். இது தான் உண்மையான அபிவிருத்தி என விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (செ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
FRENCH
ஆரம்பம் :- 28.08.2016
உடன் பதிவு செய்யுங்கள்.

(5553)
☎ 021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

எடிசன் பட்டப்படிப்புகள் கல்லூரி
(கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை முன்பாக)
1. பேராதனைப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.
2. கிராம சேவையாளர் :/ சமுர்த்தி அலுவலர்:/ பட்டதாரி
போட்டிப்பரீட்சைகள் 13.08.2016 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.
ஆசிரியர் :- தவசேகர்
தொடர்புகளுக்கு :- 0775483470 (C-5427) - நிர்வாகத்தினர்.

கார் வாடகைக்கு
நாள் வாடகைக் கார் 4000 மட்டும் கிலோ மீற்றர் கணக்கில்லை. புதிய திருமணக்கார் 8000 மட்டும் மேலதிககட்டணம் இல்லை. புதிய (Box Van) வான் Airport சேவை 19000 மட்டும். (5587)
தொடர்பு :- 0772283675 / 0778331414

## போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு நேர அட்டவணை

| இல | காலம் | நேரம் | வடமாகாண பட்டதாரி ஆசிரியர் | கிராம அலுவலர் |
|---|---|---|---|---|
| 01 | 14.08.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | கல்வி பொது அறிவு - இலங்கை<br>பொதுஅறிவு - இலங்கை<br>நுண்ணறிவு | அடிப்படை இலக்கணம்<br>பொது அறிவு - இலங்கை<br>நுண்ணறிவு |
| 02 | 21.08.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | கல்வி பொது அறிவு - உலகம்<br>பொதுஅறிவு - உலகம்<br>நுண்ணறிவு | சுருக்கம்<br>கட்டுரை, கடிதம் அறிமுகம்<br>நுண்ணறிவு |
| 03 | 28.08.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | நுண்ணறிவு<br>பொதுஅறிவு - அண்மைகாலம்<br>நுண்ணறிவு - பொதுஅறிவு | நுண்ணறிவு<br>பொது அறிவு - அண்மைகாலம்<br>நுண்ணறிவு - பொது அறிவு |
| 04 | 04.09.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | நுண்ணறிவு<br>பொதுஅறிவு - இலங்கை<br>நுண்ணறிவு - பொதுஅறிவு | — |
| 05 | 11.09.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | நுண்ணறிவு<br>பொதுஅறிவு - உலகம்<br>நுண்ணறிவு - பொதுஅறிவு | — |
| 06 | 18.09.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | நுண்ணறிவு<br>கல்விசார் பொதுஅறிவு<br>நுண்ணறிவு - பொதுஅறிவு | — |
| 07 | 25.09.2016<br>ஞாயிற்றுக்கிழமை | மு.ப 9.00 - 11.00<br>மு.ப 11.15 - 12.30<br>பி.ப 01.30 - 4.00 | நுண்ணறிவு<br>பொதுஅறிவு - அண்மைகாலம்<br>நுண்ணறிவு - பொதுஅறிவு | — |

நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
விரிவுரையாளர்கள் :
P. உமாசங்கர்
P. கமலதாசன்
மற்றும் துறைசார் வளவாளர்கள்.
தொடர்பு :
077 469 6695,
071 813 0390,
077 526 5344
(5432)

அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
12ம் திகதி முதல் பகல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது


நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது

| | |
|---|---|
| Colombo | +94 77 544 9251 |
| Jaffna | +94 77 544 8503 |
| Nelliyadi | +94 77 285 0285 |
| Pointpedro | +94 77 555 2973 |
| Valvettithurai | +94 21 226 1977 |
| | +94 77 544 7359 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00 pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00 pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30 pm |
| கொட்டஹேனா | 8:30 am | 8:30 pm |

(5552)
Bus booking || Courier || Boating

வாடகைக்கு
சிவன் கோவிலடி பிரதான வீதி, பருத்தித்துறையில் மூன்று கடைகள் வாடகைக்கு உண்டு.
(5584)
தொடர்புகளுக்கு :- 0771298201

2016 தரம் 5 மாணவர்களுக்கான
இறுதிப் பரீட்சையும் வழிகாட்டல் கருத்தரங்கும்
இடம் :- புதிய நாவலர் கல்வி நிலையம். பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
காலம் :- 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை.
காலை 9.00 மணி - மாலை 3.00 மணிவரை
புலமை அரும்பு, புலமைச்சிட்டு, புகழ் ஆகிய வெளியீட்டு வளவாளர்கள்,
திரு.மனோ - சுரேஸ்
(முன்னாள் ஆசிரியர் கொழும்பு றோயல் கல்லூரி)
திரு.லோ.விஜேந்திரன்
(ஆசிரியர் :- யா/உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை)
(C-5433)
✸ முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் முழு மாதிரி வினாத்தாள்.
✸ வினாக்களுக்கு விடையளிக்கும் இலகுவான முற்று முழுதான விளக்கம்.
✸ பதிவுகளை இன்றும் நாளையும் நேரிலோ அல்லது 0774598440 என்ற தொலைபேசி எண்ணூடாக பதிவு செய்து கொள்ளலாம்.

உள்நாடு, வெளிநாடுகளுக்கான
தபால்கள் பொதிகள் சேவை

220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
மிகக்குறைந்த கட்டணம்
அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள், கருவாடு, பழவகைக்ள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள் என்பவற்றை அனுப்பிடலாம் (நிபந்தனைக்குட்பட்டது)
11kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgக்கான கட்டணம்
UK-600/=, Germany 650/=, France 700/=, Swiss 800/=, Australia 900/=
திருமுருகன் கொம் நெற்
271A, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835
கிளைகள்:
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
18, பிரதான வீதி நெல்லியடி.
பிரதான வீதி பருத்தித்துறை. பிரதான வீதி சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)
(5589)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.